

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மே 07, 2015 | புரட்சி 14 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00


## பூணூல் பற்றி விவேகானந்தர்

விவேகானந்தர் 1897ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆலம்பஜார் மடத்தில் தங்கி சிஷ்யர்களிடம் கலந்துரையாடிக் கொண்டிருந்தார். அப்போது சிஷ்யர்களில் ஒருவர் பூணூல் பற்றிக் கேட்டதற்கு விவேகானந்தர் விளக்கம் அளித்துக் கூறுகையில்,

“பழைய காலத்திலே சிஷ்யர்கள் கையில் சமத்துகளை எடுத்துக்கொண்டு, குருவினுடைய பர்ண சாலைக்குப் போவார்கள். குருவும் அவனுடைய தகுதியை அறிந்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினையும் அவன் அடக்கி வைத்திருப்பதற்கு அடையாளமாக முப்புரியாகிய ‘முஞ்சா’ என்னும் புல்லினை அவனுடைய இடுப்பிலே கட்டி அவனுக்குத் தீட்சை செய்து வேதங்களை போதிப்பார். அரையிலே (இடுப்பில்) கட்டிய முப்புரியாகிய இப்புல்லிலே கௌபீனத்தை (கோவணம்) கட்டிக் கொள்வான். முஞ்சா என்னும் இப்புல்லினால் ஆக்கப்பட்ட கவசத்திற்குப் பதிலாக முப்புரி நூலை அணிந்து கொள்ளும் வழக்கம் பின் நாளில் ஏற்பட்டது” என்றார்.

உடனே சிஷ்யன், “அய்யா, அப்படியானால் முப்புரி நூலை அணியும் வழக்கம் வைதீக வழக்கமில்லை என்று சொல்லுவீரோ?” என்றான். அதற்கு விவேகானந்தர், “வேதங்களில் பூணூல் பற்றிய குறிப்பு ஓரிடத்திலும் இல்லை” என்றார்.

**ஆதாரம்:“சுவாமி விவேகானந்தர் சம்பாசணைகள்” தமிழில்: சுவாமி விபுலாநந்தர் வெளியீடு-1956**

## ‘பலி ஆடுகள்’ நாடகத்துக்கு தடை போட்ட பார்ப்பனர்கள்

மார்ச் 27 உலக நாடக நாள்! அன்று புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நாடகக் கலைஞரும் பேராசிரியருமான கே.ஏ.குணசேகரன், இயக்கிய ‘பலி ஆடுகள்’ நாடகம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. அதே பல்கலையில் நாடகத் துறைப் பேராசிரியராக உள்ள கே.ஏ. குணசேகரனின் இந்த நாடகம், 20 ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டு, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நிகழ்த்தப்பட்டதாகும். எல்லா ஜாதி சமூகங்களிலும் பெண்களே ‘பலிகடா’வாக்கப்படுகிறார்கள் என்பதே நாடகத்தின் மய்யக் கருத்து. கல்வெட்டு ஒன்றில் பதியப்பட்டிருந்த கருத்தை மய்யமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாடகம். இரண்டு மாதங்களாக நாடகத்துக்கு ஒத்திகை பார்க்கப்பட்டது. நாடகம் அரங்கேறுவதற்கு முதல் நாள், பேராசிரியர் கே.ஏ. குணசேகரனை தொலைபேசியில் அழைத்துப் பேசிய துணைவேந்தர் டாக்டர் சந்திரா கிருட்டிண மூர்த்தி நாடகத்தை நிறுத்துமாறு கூறினார். இதற்கு அவர் கூறிய காரணம், “நாடகம், பிராமணர்களை விமர்சிப்பதாக எனக்கு தொலைபேசி மூலம் கூறினார்கள்; எனவே நாடகத்தைப் போட வேண்டாம்” என்று கூறியிருக்கிறார்.

பார்ப்பனருக்கு எதிரானது என்று ஒரு தொலைபேசி வந்துவிட்டாலே - உடனே அதுபற்றி விசாரணை ஏதுமில்லாமலே தடை போட்டு விடுகிறார்கள். ‘சரி நிகர்’ அமைப்பு இந்தத் தடையைக் கடுமையாகக் கண்டித்துள்ளதோடு, நாடகத்தை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது. சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகமும் இதை வன்மையாகக் கண்டிக்கிறது.

## ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’

# நாகை மாவட்டத்தில் பரப்புரை எழுச்சி






*‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ பரப்புரைப் பயணம், நாகை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் ஏப்.21இல் தொடங்கி 26ஆம் தேதி வரை சிறப்புடன் நடந்தது.*

எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் என்ற முழக்கத்தை முன் வைத்து, திராவிடர் விடுதலைக் கழகம் சென்னை, ஈரோடு, சேலம், திருப்பூர், மயிலாடுதுறையிலிருந்து தொடர் பரப்புரை இயக்கங்களை நடத்தியது. ஏப்.21ஆம் தேதி மயிலாடுதுறையில் மணல்மேடு கிராமத்திலிருந்து பயணம் தொடங்கியது. ஜாதியை பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை தீ வைத்துக் கொளுத்தும் போராட்டத்தில் 1957இல் பங்கேற்று 6 மாதம் சிறைத் தண்டனை பெற்று தண்டனை காலத்திலேயே சிறைக்குள் வீர மரணமடைந்த தோழர் வெள்ளைச்சாமி பிறந்த ஊர் மணல்மேடு.

மாலை 4 மணிக்கு தொடங்கிய பரப்புரைக் கூட்டத்தில் முனைவர் ஜீவானந்தம், தமிழ்வேலன், அன்பு ஆகியோர் உரையாற்றினர். இரண்டாவது பரப்புரை கடலங்குடியில் நடந்தது. ஊராட்சி மன்றத் தலைவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த மோகன் குமார் தலைமை தாங்கினார். முனைவர் ஜீவா சிறப்புரையாற்றினார். அன்று கடலங்குடியில் சந்தை வர்த்தகம் நடந்ததால் ஏராளமான மக்கள் கருத்துகளைக் கேட்டனர்.

ஏப்ரல் 22 ஆம் தேதி மாலை 5 மணியளவில் முதல் கூட்டம் கொள்ளிடத்திலும், இரண்டாவது கூட்டம் சீர்காழி பேருந்து நிலையம் அருகிலும், மூன்றாவது கூட்டம் வைத்தீஸ்வரன் கோயிலிலும் நடந்தது. நகர கழகச் செயலாளர் தமிழ் வேலன், முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினர்.

ஏப். 23 அன்று மாலை திருக்கடையூரில் பரப்புரை தொடங்கியது. தலைமைக் குழு உறுப்பினர் இளையராஜா, முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினர். ஆக்கூர் முக்கூட்டுப் பகுதியில் நடந்த பரப்புரையில் முனைவர் ஜீவா, அன்பு ஆகியோர் பேசினர். அடுத்து, செம்பனார் கோயிலில் நடந்த கூட்டத்தில் பெட்டிக் கடை நடத்தும் ஒரு அம்மையார் முனைவர் ஜீவாவின் பேச்சைப் பாராட்டி, அவருக்கு குளிர்பானம் வழங்கி, அவருடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

ஏப். 24 ஆம் தேதி மாலை 5 மணியளவில் பேரளம் கடைவீதியில் பரப்புரை தொடங்கியது. பெரம்பலூர் கழகத் தோழர் துரை. தாமோதரன், ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிகளை நடத்தினார். தொடர்ந்து முனைவர் ஜீவானந்தம் உரையாற்றினார். பேருந்துக்காக காத்துக் கொண்டிருநத ஒரு கல்லூரி மாணவி, ஊர் செல்லக் கூடிய பேருந்து வந்தபோதும், அதில் ஏறாமல் உரையைக் கேட்டு பாராட்டினார். உரை கேட்ட இரண்டு இளைஞர்கள், கழகத்தில் சேருவதற்கு விருப்பம் தெரிவித்து, கழகத் தோழர் களிடம் பெயர், முகவரிகளை வழங்கினர். அடுத்து கொல்லுமாங்குடியிலும், மங்கை நல்லூரிலும் பரப் புரையும், ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியும் நடந்தன.

ஏப். 25 ஆம் தேதி குத்தாலம் கடை வீதி, மயிலாடுதுறை இரயிலடி, மயிலாடுதுறை, பேருந்து நிலையம் அருகே ‘மந்திரமா, தந்திரமா’ மற்றும் பரப்புரை நடந்தது.

ஏப்.26 ஆம் தேதி நிறைவு விழா, மயிலாடுதுறை சின்னக்கடை வீதியில் பொதுக் கூட்டமாக நடந்தது. தமிழர் உரிமை இயக்கத் தோழர் சுப்பு மகேஷ், வழக்கறிஞர் சங்கர், முனைவர் ஜீவா, எழுத்தாளர் மதிமாறன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். கழகத்தின் பரப்புரை இயக்கத்துக்கு பொது மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. கழகப் பொறுப்பாளர்கள் மகேஷ், இளையராஜா, புத்தகச் சோலை விஜி, செந்தில், நடராசன், அன்பரசன், இயற்கை, ஜாகிர் உசேன், வழக்கறிஞர் நன்மாறன், தமிழ்வேலன் உள்ளிட்ட தோழர்கள் பலரும் பயணத்தில் பங்கேற்றனர்.

**செய்தி: மகேசு**





தலையங்கம்

## தமிழகத்திலா இந்த அவலம்!

இந்தியாவில் எந்த மாநிலங்களிலும் நடக்காத ஒரு ‘சமூகப் புரட்சி’ தமிழ்நாட்டில் மட்டும் நடந்தது. அந்தப் ‘புரட்சி’தான் இந்த மண்ணில் சமூக-பொருளியல் மாற்றங்களுக்காக வித்திட்டது. அதுதான் கடந்த காலங்களில் நடந்த ‘கல்விப் புரட்சி’. இராஜகோபாலாச்சாரி முதல்வராக இருந்தபோது பள்ளிகளை மூடினார். ‘குலக்கல்வித் திட்டத்தை’க் கொண்டு வந்தார். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பெரும்பான்மை மக்களின் கல்வி உரிமைக்காக தொடர்ந்து போராடி வந்த பெரியாரின் இயக்கம் வெகுண்டு எழுந்தது. கல்வி உரிமைகளை நசுக்கிய இராஜகோபாலாச்சாரியை பதவியிலிருந்து ஓட வைத்தது. அதற்கான போராட்டச் சங்கை ஊதியவர் பெரியார்.

பெரியாரின் ஆதரவோடு அடுத்து ஆட்சிக்கு வந்தார் காமராசர். மூடிய பள்ளிகளைத் திறந்தார். மேலும் கூடுதலாக பள்ளிகளைத் திறந்தார். கல்லூரிகள் தொடங்கப்பட்டன; மதிய உணவுத் திட்டம் மற்றும் இலவசக் கல்வி வந்தது. அரசுப் பள்ளிகளும், அரசுக் கல்லூரிகளும், அரசு தொழில்நுட்ப நிறுவனங்களும் முதல் தலைமுறையாக படிக்க வந்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றின. தமிழகம் ஏனைய மாநிலங்களிலிருந்து இப்போதும்கூட ஒப்பீட்டளவில் வளர்ச்சி பெற்றதற்கு அடித்தளமாக அமைந்ததே கடந்த கால அரசின் கல்வித் திட்டங்களும் கல்விக் கொள்கைகளும்தான். அந்தத் தமிழ்நாட்டில் இன்று என்ன நிலை?

அரசுப் பள்ளிகள் மெல்ல மெல்ல மரணித்துக் கொண்டிருக்கின்றன. அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மோசமான அளவில் குறைந்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளில் மட்டும் 1100 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டு விட்டன. மிகக் குறைவாக மாணவர் எண்ணிக்கைக் கொண்ட 2000த்துக்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகள் விரைவில் மூடப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. தமிழக அரசு நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக ஒதுக்கிடும் தொகை மிக மோசமாகக் குறைந்து வருகிறது. நடப்புக் கல்வி ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.20,936.50 கோடி. இந்த நிதி ஒதுக்கீடும் அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு வளர்ச்சிக்காகவும் இல்லை. 14 வகையான இலவச நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கே பயன்படுத்தப்பட்டது. புற்றீசல்கள் போல பெருகி நிற்கும் தனியார் பள்ளிகள், வணிகம் நடத்தி கொள்ளையடிக்கின்றன.

இந்தியாவில் கல்வியை அடிப்படை உரிமையாக்கும் சட்டம் நடைமுறையில் இருந்தும், அந்தச் சட்டம் செயல்படவிடாமல் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன. இந்தச் சட்டத்தின்படி தனியார் பள்ளிகள் கட்டணம் ஏதுமின்றி 25 சதவீத இடங்களை அப்பகுதியில் வாழும் ஏழைக் குழந்தைகளுக்கு ஒதுக்கிட வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் தனியார் பள்ளி நிர்வாகங்கள் இந்த இடங்களை ஏழை குழந்தைகளுக்கு ஒதுக்கிட மறுக்கின்றன. தமிழக முதலமைச்சர் பன்னீர்செல்வம், சட்டசபையில் இத்திட்டத்தின் கீழ் 1.36 இலட்சம் ஏழை மாணவர்கள் சேர்க்கப்பட்டதாக கூறுகிறார். இந்த புள்ளிவிவரத்தை அப்படியே உண்மையாக ஏற்றுக் கொண்டாலும், தமிழ்நாட்டில் ஒதுக்கப்பட வேண்டிய இடங்களில் இது 11 சதவீதம் மட்டும்தான். இப்படி சேர்க்கப்பட்ட குழந்தைகள்கூட கட்டணம் பெற்றுக்கொண்டு முறைகேடாக சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்கள் கூறுகின்றன. ஒரு கிலோ மீட்டர் சுற்றுப் பகுதியிலுள்ள குழந்தைகளை மட்டுமே தனியார் பள்ளிகள் 25 சதவீத ஒதுக்கீட்டில் சேர்க்க வேண்டும் என்பது சட்டம். அது பின்பற்றப்படவில்லை.

வேறு பகுதிகளைச் சார்ந்த வசதி நிறைந்த குடும்பத்துக் குழந்தைகளிடம் கட்டணம் வாங்கிக் கொண்டு இந்தத் திட்டத்தின் கீழ் சேர்த்து வருகிறார்கள். இந்த மாணவர் சேர்க்கைக்கு சட்டத்தில் வலியுறுத்தப்பட்ட நடைமுறைகளும் மீறப்படுகின்றன. இது குறித்து அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, எந்தக் கவலையும் எடுத்துக் கொள்வதாக தெரியவில்லை. 6 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்குத்தான் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வியை உறுதி செய்ய வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் நடக்கும் ஆட்சி, ‘மழலைகளுக்கான கிண்டர் கார்டன்’ பள்ளிகளை அனுமதிக்கிறது. குழந்தை களுக்கு நேர்முகப் பேட்டி முறை ஏதும் பின்பற்றக்கூடாது என்று சட்டம் கூறுகிறது. மாறாக, தனியார் பள்ளிகள் இத்தகைய பேட்டிகளை நடத்துகின்றன. ஆட்சி தடுக்கவில்லை. குழந்தைகளுக்கான கட்டணத்தை, மாநில அரசு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டும். ஆனால், 3 ஆண்டுகளாக இந்தக் கட்டணத்தை தமிழக அரசு செலுத்தாத நிலையில், தனியார் பள்ளிகள் பெற்றோர்களிடம் கட்டணம் கட்டுமாறு வற்புறுத்துகின்றன. அரசு கட்டணத் தொகையைத் தரும்போது திருப்பித் தருவதாக கூறுகின்றன.

தனியார் பள்ளி நிர்வாகிகள் கல்வி உரிமைச் சட்டத்தைப் பின்பற்ற மாட்டோம் என்று மாநாடு கூட்டி அறிவித்துள்ளனர். இந்த சட்ட விரோத அறிவிப்பு மாநாட்டுக்கு சிறப்பு விருந்தினர், தமிழக ஆளுநர்! நாடு எங்கே போகிறது?

குஜராத் உயர்நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் வழங்கிய ஒரு தீர்ப்பை சுட்டிக்காட்ட வேண்டும். ஏழைக் குழந்தைகளுக்கு 25 சதவீத ஒதுக்கீட்டைப் பின்பற்றாத தனியார் பள்ளிகள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தலைமை நீதிபதி வீ.எம். சகாய் மற்றும் ஆர்.பி. தோலாரியா ஆகியோரடங்கிய அமர்வு தீர்ப்பளித்திருக்கிறது.

இத்தகைய விழிப்புணர்வு, எதிர்ப்பு ஏன் தமிழகத்தில் இல்லை? தங்கள் தலைவியை ஊழல் வழக்கிலிருந்து விடுவிக்க,அமைச்சர்கள் காவடி தூக்குவதற்கும், யாகம் நடத்துவதற்கும் போட்டி போட்டுக் கொண்டு நிற்கிறார்களே தவிர, மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த தயாராக இல்லை.

கல்விப் புரட்சியில் வழிகாட்டிய இந்தியாவுக்கே தமிழகத்திலா இந்த அவலநிலை?

# எச்சில் இலை சடங்குக்கு தடை

கருநாடகாவில் பார்ப்பன புரோகிதர்கள் சாப்பிட்டு வீசிய எச்சில் இலைகளில் ‘உருண்டு புரளும்’ சடங்குகளுக்கு கருநாடக அரசு தடை விதித்தது. நீண்டகாலமாக நடக்கும் இந்த அய்தீகத்தை தடை செய்யக் கூடாது என்று பார்ப்பனர்கள் தொடர்ந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதேபோல் கரூர் மாவட்டம் நெடூர் கிராமத்தில் சதாசிவ பிரமேத்திரா கோயிலில் எச்சில் இலையில் உருளும் சடங்கு 100 ஆண்டுகளாக நடந்து வந்தது. வி. தலித் பாண்டியன் என்பவர் இதை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம் பார்ப்பனர் திணித்த இந்த இழிவான சடங்குக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. நீதிபதிகள் எஸ்.மாணிக்கம், வி.எம். வேலுமணி ஆகியோர் இந்தத் தடையை விதித்துள்ளனர்.

### தாலி நீக்கம் : பழ. கருப்பையா கேள்வி

அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பழ. கருப்பையா, ‘நக்கீரன்’ வார இதழில் எழுதிய கட்டுரையில், தாலி அகற்றும் நிகழ்வை எதிர்க்கும் மதவெறி சக்திகளை கடுமையாக சாடியுள்ளார். தாலியை அணிந்து கொண்டவர்கள் அதை அகற்றுகிறார்கள். தாலியை கட்டியவரே அதற்கு ஒப்புதல் தருகிறார்கள். இதில் அரசு வழக்கறிஞர் மனம் ஏன் புண்பட வேண்டும்? - என்று அந்தக் கட்டுரையில் கேட்டுள்ளார். பழ. கருப்பையா, தனது வீட்டில் மனைவியின் தங்கத் தாலி திருட்டுப் போனபோது,10 பவுன் நகை போய்விட்டதே என்று தனது மனைவி வருந்தினாரே தவிர, தாலி போய்விட்டதே என்று கவலைப்படவில்லை என்ற தனது சொந்த வாழ்க்கையில் நடந்த நிகழ்வையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

### “எல்லாம் அவன் செயல்”

பஞ்சாப் மாநிலம் மோசா நகரில் கடந்த வாரம் ஓடும் பேருந்தில் தாயுடன் பயணம் செய்தார் ஒரு பெண். அப்போது சில இளைஞர்களின் பாலியல் தொல்லைக்கு பயந்து, ஓடும் பேருந்திலிருந்து குதித்ததால் மரணமடைந்தார். அவரது தாயாரும் படுகாயமடைந்தார். அந்தப் பேருந்து மாநில துணை முதலமைச்சர் சுக்பீர் சிங் பாதலுக்கு சொந்தமானது. இந்தக் கொடூர மரணம் குறித்துப் பேசியுள்ள பஞ்சாப் கல்வித் துறை அமைச்சர் சுர்ஜித்சிங் ரஜ்ரா, இந்தப் பெண் பலியானது, கடவுளின் விருப்பப்படி நடந்துள்ளது. இதற்கு அரசு மீது பழி போடக் கூடாது என்று கூறியிருக்கிறார். அரசியல் கட்சிகள் இந்தக் கருத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

### ‘திவ்ய புத்ர ஜீவக் பீஜ்’

யோகா குரு ராம்தேவ் பா.ஜ.க. ஆட்சியின் செல்வாக்கு பெற்ற பிரமுகர். அரியானா பா.ஜ.க. ஆட்சி அவருக்கு ‘காபினட்’ அமைச்சருக்கு உரிய ஏற்பை வழங்கியது. அமைச்சரவைக்குள்ளேயே எதிர்ப்பு எழுந்ததால், அவர், அப்பதவியை ஏற்க மறுத்துவிட்டார். செம்மரங்களை ரூ.250 கோடி அளவுக்கு ஏலத்தில் எடுத்ததில் இந்தியாவில் முதலிடம் பெற்றிருக்கிறார். ‘ராம் தேவ்’ தனது மருந்து உற்பத்தி நிறுவனத்துக்காக ஏலம் எடுத்தாராம். இப்போது ஆண் குழந்தைகள் பிறக்க விரும்புவோருக்கு மருந்து ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறாராம். அதற்கு சூட்டியுள்ள பெயர் தான் ‘திவ்யபுத்ர ஜீவக் பீஜ்’. இது சமஸ்கிருதப் பெயர். ஒரு பக்கம் மோடி ஆட்சி, ‘பெண் குழந்தைகளைக் காப்போம்’ (பேட்டி பச்சாவோ பாதோவ்) என்ற திட்டத்தை அறிமுகப் படுத்திக் கொண்டு மற்றொரு பக்கம் ஆண் குழந்தை பெறுவதற்கான மருந்து என்று அறிவியலுக்கு எதிரான ஒரு கருத்தை வர்த்தகமாக்கிடும் ‘ராம் தேவ்’வையும் ஆதரிக்கலாமா என்று மாநிலங் களவையில் எதிர்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன. ‘பெண்கள்’ எதிர்ப்பு என்பதே - ‘இந்துத்துவா’ கொள்கை தான். இந்து சாஸ்திரங்கள் ‘பெண்களை’ சம உரிமையுள்ளவர்களாக அங்கீகரிப்பதில்லை. இப்போதும் ஆர்.எஸ்.எஸ்.சில் பெண்கள் உறுப்பினராக முடியாது. அந்த ‘தத்துவத்தின்’ அடிப்படையில்; தான் ராம்தேவும், லேகிய விற்பனையை அறிமுகப்படுத்தி வருகிறார். அன்னா அசாரே நடத்திய ஊழல் எதிர்ப்புப் போராட்டத்தில் ராம்தேவ் பங்கேற்ற போது, போலீசார் தடியடி நடத்தினர். அப்போது பெண்களுக்கான ‘சுடிதார்’ உடையை அணிந்து கொண்டு இரவோடு இரவாக கூட்டத்திலிருந்து ஓடியவர் இதே ‘ராம்தேவ்’தான். இப்போது ஆண் பிள்ளைகளுக்கு மருந்து தயாரிக்கிறார்.

## மனித மலத்தை மனிதர் எடுக்கும் அவலம் : திருச்சியில் குறும்பட திரையீடு–விவாதம்

மாதம்தோறும் ஆவணப்பட திரையிடல் மற்றும் உரையாடல் நிகழ்ச்சிகளை திருச்சியில் நடத்த கழகம் மற்றும் முன்னணி அமைப்புகள் முடிவு செய்துள்ளன. மார்ச்சு 2015 நிகழ்வின் தொடக்கமாக தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பாக மனித நேய நண்பர்கள் குழு மற்றும் சட்ட உரிமைகள் கழகம் ஆகிய அமைப்புகளின் உதவியோடு 27-03-2015 அன்று மாலை 6.30 மணியளவில் ஆவணப்படமான “பீ” திரையிடப்பட்டது. அப்படத்தின் இயக்குனரான அமுதன் இராமலிங்கம் புஷ்பம் மற்றும் 'யதார்த்த' இராஜன் ஆகியோர் இத் திரையிடலில் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர்.

40 தோழர்கள் இத்திரையிடலில் கலந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், ஆதித்தமிழர் பேரவை, புதிய தமிழகம், ஆதிதமிழர் விடுதலை இயக்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், கம்யூனிஸ்டு கட்சி-மக்கள் விடுதலை போன்ற அமைப்பைச் சேர்ந்த மாவட்ட பொறுப்பாளர்களும், சுகாதாரப் பணியாளர்களும், மாணவர்களும் பங்கேற்றனர். தோழர் ஜான்சி ராணி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்) நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். அறிவியல் சாதன உதவி மற்றும் இடம் தந்து உதவியவர் அருண் (சட்ட உரிமைகள் கழகம்). கழகத் தோழர்கள் புதியவன், குணா, மனோகரன், பழனி, திருவரங்கம் அசோக், டாக்டர். எஸ்.எஸ்.முத்து, சந்துரு, மணிகண்டன், குமரேசன் ஆகியோர் கலந்துகொண்டதோடு நிகழ்ச்சி சிறப்புக்கு உழைத்தனர்.

# அந்தக் கால ஜாதி சங்கங்கள் உரிமைக்குப் போராடின

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

*கோயில் கட்டுகிறவர்கள் – கல்லூரி வியாபாரம் நடத்துகிறவர்கள் – தங்கள் சுயநலனுக்காக ஜாதி வெறியைத் தூண்டி விடுகிறார்கள் என்று 'எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்' பரப்புரை இயக்கத்தை 20-03-2015 அன்று சென்னை பெரம்பூரில் தொடங்கி வைத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையின் சில பகுதிகள். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

1930 இல் நடைபெற்ற கொங்கு வேளாளர் மாநாட்டில், "இனி விதவைகளை வெள்ளாடை உடுத்த கட்டாயப்படுத்தக் கூடாது; விரும்பிய ஆடைகளை உடுத்த அனுமதிக்க வேண்டும்; குழந்தை இல்லாத இளம் கைம்பெண்களுக்கு மறுமணம் அனுமதிக்க வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். கல்வி நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்ற நாடார் சங்கங்கள் இருந்தன. இப்படி மக்கள் நலனில் அக்கறையுள்ள ஜாதி சங்கங்கள்தான் அந்த காலத்தில் இருந்தன. ஆனால் இப்போது எதற்காக ஜாதி சங்கங்கள் இருக்கின்றது? ஜாதி சங்கங்களை வைத்திருப்பவர்கள் யார்?

ஒரு ஊரில் புதுக் கோவில் உருவானால், முன்பெல்லாம் அது கந்துவட்டிக்காரனால் அல்லது கள்ளச் சாராயக்காரனால் கட்டப்பட்டிருக்கும். பிறகு கல்லூரிக்காரர்கள் வந்தார்கள்; இவர்கள் கோவிலை கட்டுவதோடு நிற்கவில்லை கூடுதலாக ஜாதி சங்கங்களையும் கட்டுகின்றார்கள். 'புலிக்கு பயந்தவனெல்லாம் என் மேல் படுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்வதைப் போல, புதுப் பணக்காரர்கள் தங்கள் பாதுகாப்பிற்கு ஜாதி சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். புலிக்கு பயந்து மேலே படுத்தவன் புலியிடம் கடி வாங்கியதைப் போல, ஜாதிப் போராட்டங்களால் பாதிக்கப்படுகிறார்கள் தொண்டர்கள். ஜாதி சங்கத் தலைவர்கள் பாதுகாப்பாக குளிரூட்டிய அறையில் உட்கார்ந்து கொண்டு அறிக்கை மட்டும் விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மக்களுக்கான அறிவு கொடுப்பதற்கோ, சமூக வளர்ச்சிக்கோ, பொருளாதார வளர்ச்சிக்கோ உதவுகிறார்களா இவர்கள்? இப்படிப்பட்ட ஜாதி சங்கத் தலைவர்கள் தூண்டிவிட்ட 'ஜாதிவெறி' தான் இப்போது தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது.

பார்ப்பனர்கள் தங்கள் இடத்தை அவ்வளவு சுலபமாக விட்டுவிட மாட்டார்கள். பெரியார் உதாரணத்தோடு விளக்குவார் "இரயிலில் ஒரு ஸ்டேசன் முன்னால் ஏறியவன் நீட்டி படுத்துக் கொள்வான்; அடுத்த ஸ்டேசனில் ஏறும் மற்றொருவனும் டிக்கெட் வாங்கிக் கொண்டுதான் ஏறுகிறான். படுத்திருப்பவன் முதலில் தூங்குவதைப் போல் நடிப்பான்; தட்டி எழுப்பிய பின்னால் அந்தப் பக்கம் இடம் இருக்கு, இந்தப்பக்கம் இடம் இருக்கு என்று காண்பிப்பான்; அதையெல்லாம் பார்த்துவிட்டு விட்டு வந்து சட்டைக் காலரைப் பிடித்து தூக்கினால் தான் எழுந்து இடம் கொடுப்பான். ஒரு ஸ்டேசனுக்கு முன்னால் ஏறி படுத்தவனுக்கே இடம் கொடுக்க மனம் இல்லையே! இரண்டாயிரம் ஆண்டுகளாக படுத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் எளிதில் எழுந்திருப்பார்களா" என்று கேட்பார் பெரியார். சுலபமாக மாற்றிக்கொள்ள மாட்டார்கள்; எல்லா வழிகளிலும் அவனை அம்பலப்படுத்தி, அவனுடையை பொய்மைகளையெல்லாம் மக்களிடம் விளக்கிக் காட்டி அதன் பிறகுதான் மாற்ற முடியும்.

இந்த பார்ப்பனிய சிந்தனை எல்லோருடைய மூளையிலும் ஏறியிருக்கின்றது. பார்ப்பனர்களைத் தாண்டி இராமதாஸ் மூளையிலும் ஏறியது. அதையும் தாண்டி திருப்புவனம் என்ற ஊரில் அருந்ததியர் பையனை திருமணம் செய்து கொண்டதற்காக கோகிலா என்ற ஆதி திராவிடர் பெண்ணை எரித்துக் கொன்ற அவரது அப்பாவின் மூளையிலும் பார்ப்பனியம் இருக்கின்றது.

1962 ஆம் ஆண்டு பார்ப்பன தோழர்களுக்கு என்று பெரியார் எழுதியதில் சொல்கிறார், "சமுதாயத்தில் உள்ள அனைத்து துறைகளிலும் உங்களின் விகிதாச்சாரத்துக்கு மேல் பங்கெடுத்து கொண்டீர்கள் என்பது தான் உங்கள் மீது எனக்குள்ள கோபம்; உங்கள் மேல் மட்டுமல்லாமல் இந்த சமுதாயத்தில் தனது விகிதாசாரத்துக்கு மேல் பங்கெடுத்துக் கொள்ளும் அனைவர் மீதும் எனக்கு அதே கோபம் உண்டு. நான் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை ஏன் ஆதரிக்கிறேன்? நோயாளிக் குழந்தைகளுக்கு சத்துள்ள உணவைத் தேடித்தேடி தாய் கொடுப்பது போல, நானும் செய்து கொண்டிருக்கிறேன். இதுவொரு தாய்மையோடு செய்யும் செயல் தானே! இதை ஏன் நீங்கள் வெறுப்போடு பார்க்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

இப்பொழுது பெரியாரைப் பற்றி அவதூறாகப் பேச பல புதிய அறிவாளிகளெல்லாம் வருகின்றார்கள்; இவர்கள் பெரியாரை பற்றி ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் பெரியாரை விமர்சனம் செய்கின்றார்களே தவிர, அவர் எதற்காக நின்றார்? அடிப்படையில் அவர் எதை நோக்கிச் சொன்னார்? என்று பார்க்க வேண்டும். அவருடையை தொடக்கக் காலத்தில் அவர் செய்ததெல்லாம், ஜாதி ஒழிப்புக்காக என்பது தாழ்த்தப்பட்டவர்களுக்காக மட்டும் பேசவில்லை; இப்போது தங்களை உயர் ஜாதியாக நினைத்துக் கொண்டிருக்கும் பலருக்காகவும் அவர் பேசினார். சூத்திரன் என்று அழைக்கக் கூடாது என்று சொன்னது தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவா?

நாகப்பட்டினத்தில் பிற்படுத்தப்பட்ட பகுதிக்கு அழைக்கப்பட்ட பெரியார் பேசுகிறார் "உங்களை நீங்கள் உயர்வானவர்களாக கருதிக் கொண்டிருக்கின்றீர்கள்; பறையன், பள்ளன் என்பதற்கு கூட வாசித்த கருவியை (பறை) வைத்தோ, வசித்த இடத்தை (பள்ளம்) வைத்தோ வந்திருக்க ஏதாவது காரணம் இருக்கலாம்; ஆனால் சூத்திரன் என்று சொல்வதற்கு என்ன காரணம்? அதற்கு என்ன பொருள் தெரியுமா? என்னை யாராவது சூத்திரனாக இருக்க விரும்புகிறாயா? பறையன், பள்ளன் என்று அழைக்கட்டுமா என்று கேட்டால், பறையன் பள்ளன் என்பதே பரவாயில்லை; சூத்திரன் என்பது அவ்வளவு இழிவானது; எனவே இந்த சூத்திரப் பட்டத்தை நீங்கள் ஒழித்தாக வேண்டும். இன்னொன்றையும் சொல்கிறேன், பறையன் பட்டம் போகாமல் சூத்திரப் பட்டம் போய் விடும் என்று கருதுவீர்களேயானால் நீங்கள் வடிக் கட்டிய முட்டாள்கள் ஆவீர்கள்" என்று சொன்னார்.

இது ஒரு அமைப்பு (சிஸ்டம்); இந்த இந்து மதத்தை தானாக இயங்கும் ஒரு செயல் திட்டமாக பார்ப்பான் அமைத்து வைத்திருக்கின்றான். அதுவாக சுழன்று கொண்டிருக்கும்; வேகம் குறைந்தால் அதை ஒரு சுற்று சுற்றிவிட்டு விட்டு அமைதியாக பார்ப்பான் அமர்ந்து கொள்வான்; மீண்டும் தானாக சுற்றிக் கொண்டிருக்கும். ஒட்டு மொத்த அமைப்பையும் அழித் தொழிக்காமல் ஒரு ஜாதியை மட்டும் தனியாக மீட்க முடியாது.

இந்த சூத்திர இழிவின் காரணமாக நீங்கள் எவ்வளவு அவமானப்பட்டிருக்கின்றீர்கள்! உங்கள் நிலை இப்படி இருக்க என்ன காரணம்? பார்ப்பனரல்லாதார் இயக்கம் தொடங்குவதற்கு முன்னால் திராவிடர் இயக்க எழுச்சிக்கு முன்னால் உங்களின் நிலை என்னவாக இருந்தது? மொத்த படிக்கத் தெரிந்தவர்கள் ஏழு சதவீதம். அதில் பார்ப்பனர்கள் மூன்று சதவீதம் போக, பார்ப்பனரல்லாதவர்கள் நான்கு சதவீதம் பேர் மட்டும் தானே? ஆனால் இப்போது பிற்படுத்தப்பட்டவர்கள், இஸ்லாமியர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பழங்குடிகள் எல்லோருமே படிக்கின்றார்களே! இப்போது 200-200 கட் ஆப் எடுத்தவர்கள் பட்டியலை பாருங்கள்; அதில் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கின்றார்கள், பழங்குடியினர், பிற்படுதப்பட்டோர் எல்லாம் இருக்கின்றனர். இந்த நிலை எப்படி ஏற்பட்டது? சரஸ்வதி (கடவுள்) வந்து நாக்கில் எழுதியெல்லாம் கல்வி வரவில்லை; கல்விக்காக இங்கு ஒரு இயக்கம் நடந்தது.

**தமிழ்நாட்டின் தனித்துவம்**

இந்தியா முழுவதும் ஒரு சமூக ஆய்வு நடைபெற்றது; அந்த ஆய்வில் இந்தியா முழுவதும் அறிவியல் ஆய்வில் குறிப்பிட்ட பெருமைமிக்க விருதுகள் வாங்கியவர்கள் பற்றிய கணக்கெடுப்பு நடத்துகிறார்கள். அந்த கணக்கெடுப்பில் தமிழ்நாடு மட்டும் தனித்து காணப்படுகின்றது. மற்ற அனைத்து மாநிலங்களிலும் ஆய்வு பட்டம் பெற்றவர்களெல்லாம் உயர் ஜாதிக்காரர்களாக இருக்கின்றார்கள்; தமிழ் நாட்டில் மட்டும்தான் பெரும்பாலானோர் (எண்பது சதவீதத்துக்கும் மேலானவர்கள்) பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள். மற்ற மாநிலங் களில் ஆய்வு பட்டம் பெற்றவர்கள் நகரத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள்; தமிழ் நாட்டில் மட்டும் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள் எழுபத்தாறு சதவீதத்தினர் உள்ளார்கள். மேற்கு வங்கத்தில் 32 பேரில் 26 பேர் கல்கத்தாவைச் சேர்ந்தவர்கள், தமிழ் நாட்டிலோ 41 பேரில் 10 பேரே சென்னையைச் சேர்ந்தவர்கள். ஆக மேற்கு வங்கத்தில் கிராமப் புறத்தினர் 19%, தமிழ் நாட்டிலோ 76%. இது எப்படி வந்தது என்று யாருக்கும் தெரிவதில்லை. யார் இதற்கு முதன்மைக் காரணம் என்றும் நம்மவர்களுக்குத் தெரிவதில்லை.

இந்த நாட்டில் மகாத்மா என்று சொல்லப்பட்ட காந்தியைக் கூட பார்ப்பனர்கள் மதிக்கவில்லை. அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் காந்தியை, சீனிவாச ஐயங்கார் வீட்டு திண்ணையில் தான் அனுமதித்தார்கள்; வீட்டிற்குள் காந்தியை விடவில்லை. மீண்டும் ஒரு முறை 1927 இல் காந்தி வந்துவிட்டு எழுதுகிறார் 'இப்போது என் மனைவி சீனிவாச ஐயங்கார் வீட்டு சமையல் அறைவரை சென்று வந்தாள்' என்று. இந்த மாற்றம் எப்படி வந்தது? பார்ப்பானுக்குத் தானாகவே புத்தி வந்து விட்டதா? நல்லவன் ஆகிவிட்டானா? இல்லை; சுயமரியாதை இயக்கம் அப்போது தோன்றிவிட்டது. 1925லிருந்து பெரியாரின் வேகமான வீச்சான பிரச்சாரம் தான் காரணம்.


இப்படி அவமானப்படுத்தப்பட்ட சமுதாயத்தில் இப்போது யாராவது அப்படி சொல்லக்கூடிய நிலை இருக்கின்றதா? வட கர்நாடகத்தில் தொடங்கி வட மாநிலங்களுக்கு எங்கு போனாலும் தேநீர் கடைகளில் நான்கு வகை பெஞ்சுகள் (இருக்கைகளும்) இருப்பதும் ஐந்தாவது ஜாதி கீழே உட்கார்ந்து கொள்வதும் தெரியும். கழுத்தில் புண் ஏற்பட்ட காளைகளும் வண்டியில் பூட்டும் போது தாமாக முன் வந்து கழுத்தைக் கொடுப்பதுபோல் ஐந்து ஜாதியினரும் தாமாகவே அவரவர் இடத்தில் அமர்ந்து கொள்கிறார்கள். இப்படி இயல்பாக பழக்கப்படுத்தி விட்டார்கள். நம்மையும் அப்படித் தான் வைத்திருந்தார்கள்; பழகிய மாடுகளைப் போல் தான் நாமும் இருந்தோம். நமக்கான சுயமரியாதை உணர்வைப் பெரியார் ஊட்டினார்; அதனால் கொஞ்சம் கொஞ்சமாக நாம் அதிலிருந்து மாறி முன்னேறி வந்திருக்கின்றோம்.

சற்சூத்திரன் என்று சிலர் தங்களை சொல்லிக் கொண்டிருந்தார்கள்; சூத்திரன் என்றால் வேசிமகன், சற் என்றால் அசல், நல்ல எனப் பொருள். சற்குணம் என்பதைப் போல. எனவே சற்சூத்திரன் என்றால் அசல் வேசிமகன் என்று பெரியார் சுட்டிக்காட்டி உணர்வூட்டினார். இப்படி பார்ப்பனர்களுக்கு எதிரான சிந்தனைகள், பார்ப்பன பாசாங்குகளை அம்பலபடுத்தியது, அதை மறுத்தது வெறுத்தது என பலவற்றை செய்து, முதலில் வந்துவிட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் மனதில் சூத்திர இழிவில் இருந்து நாம் தப்பித்தோம், கல்வியற்ற நிலையில் இருந்து வெளியே வந்து விட்டோம், அரசுப் பணிகளில் அமர்ந்து விட்டோம் நாம் பெரிய ஆள் என்று நினைத்துக் கொள்கிறார்கள். இனி தனக்கு கீழே உள்ளவனை விட்டால் நமது இடம் பறி போனாலும் போய்விடும் என்று கருதுகிறார்கள்.

**(தொடரும்)**

DATE OF PUBLICATION 07.05.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776


# கழகச் செயல்வீரர் பத்ரி நினைவுநாள்



களப்பணியில் உயிர்நீத்த சென்னை மாவட்ட கழகச் செயல்வீரர் பத்ரி நாராயணன், 11 ஆம் ஆண்டு நினைவு நாளான ஏப்.30 அன்று காலை 10 மணியளவில் அவரது நினைவிடத்தில் கழக சார்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் தோழர்கள் மரியாதை செலுத்தினர்.

பத்ரி நாராயணன் களப்பணிகளை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ரூதர் கார்த்திக் (வி.சி.), முன்னா செல்வகுமார் (தே.மு.தி.க.), கழக தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் ஆகியோர் நினைவ கூர்ந்தனர். பத்ரி நினைவிடத்துக்கு தோழர் மகேஷ், தனது சொந்தப் பொறுப்பில் மலர் அலங்காரம் செய்திருந்தார்.

# மயிலாடுதுறை க. நாகராசன் படத்திறப்பு



திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திராவிடர் கழகத் துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் ஆகியோரின் மூத்த சகோதரரும், திராவிடர் விடுதலைக் கழகப் பொறுப்பாளர்கள் திருச்சி குணராஜ், மயிலாடுதுறை இளைய ராஜா ஆகியோரின் தந்தையுமான க.நாகராஜ் (82), ஏப்ரல் 30ஆம் தேதி இரவு முடிவெய்தினார். மே முதல் தேதி மாலை மயிலாடுதுறையில் மின் மயானத்தில் எவ்வித சடங்குமின்றி உடல் எரியூட்டப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஈரோடு இரத்தினசாமி உள்ளிட்ட கழகத் தோழர்களும், திராவிடர் கழகத் தோழர்களும் இறுதி நிகழ்வில் பங்கேற்றனர். மே 3ஆம் தேதி, பகல் 11 மணியளவில் க.நாகராசன் அவர்களின் படத்தை அவரது பேரன் பேத்திகள் திறந்து வைத்தனர். நண்பர்கள், உறவினர்கள் இரங்கல் உரை யாற்றினர். க. நாகராசன், தபால்-தந்தி துறையில் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார்.

# பள்ளிப் பாளையத்தில் அம்பேத்கர் பிறந்தநாள்: கொளத்தூர் மணி பங்கேற்பு



ஏப்ரல்18 அன்று நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகர கழகத்தின் சார்பில் அம்பேத்கர் 125 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பள்ளிபாளையம் நகர கழகத் தலைவர் மு.சரவணன் வரவேற்புரை நிகழ்த்த நகரச் செயலாளர் முத்துப்பாண்டி தலைமையேற்க மாவட்ட தலைவர் சாமிநாதன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சி திராவிடர் கலைக்குழுவின் நாடகத்தோடு தொடங்கியது. தொடர்ச்சியாக தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி, பவானி வேணுகோபால் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் இடையே இருந்த கொள்கை ஒற்றுமைகள் மற்றும் பெரியாரை சிலர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானவராக சித்தரிக்க முயல்வதையும் விளக்கி உரை நிகழ்த்தினார். விசுவ இந்து பரிஷத் அமைப்பினரின் கலவரம் ஏற்படுத்தும் முயற்சிகளை முறியடித்து, மக்கள் ஆதரவுடன் கூட்டம் வெற்றிகரமாக நடந்தது. மு.சரவணன் நன்றி கூறினார். இரவு உணவாக மாட்டுக்கறி வழங்கப்பட்டது.

# ஜாதி எதிர்ப்பு கூட்டத்தில் ஜாதி-தாலி மறுப்பு மண விழா



மே 17ஆம் நாள் பொள்ளாச்சி மாவட்டம் கிணத்துக்கடவு நகரில், ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ பரப்புரைப் பயணத்தின் நிறைவு பொதுக் கூட்டம் நிகழவிருக்கிறது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று உரை நிகழ்த்துகிறார். பொதுக் கூட்ட மேடையில் கழகத் தோழர்கள் வீ. இந்துமதி–நா.வே. நிர்மல் குமார், ஜாதி–தாலி–சடங்கு மறுப்பு மணவிழாவும் நிகழவிருக்கிறது.

# தஞ்சை கோயில் தேரோட்டப் பின்னணி

**தஞ்சை பெரிய கோயில் தேரோட்டத்தின் பின்னணி குறித்து, 6.5.15 நாளிட்ட ‘ஜூ.வி.’யில் வெளியான செய்தி:**

1995ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போது இராஜஇராஜன் சிலையைக்கூட ஜெயலலிதா திறந்த வைக்கவில்லை. அப்படிப்பட்ட ஜெயலலிதா முதல்வர் பொறுப்பில் இல்லாவிட்டாலும் அவரது ஆட்சிக் காலத்தில் பெரிய கோயிலுக்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கி, தேரோட்டத்தை நடத்தியதன் மர்மம் என்ன?

ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகக் கோயில் கோயிலாகக் கும்பாபிஷேகம், சிறப்பு பூஜைகள், யாகங்கள், அங்க பிரதட்சணங்கள், கோ பூஜைகள் என ரவுண்டு கட்டி வருகிறார்கள். அப்போதுதான் பெரிய கோயிலின் தேரோட்டத்தைப் பற்றி ஒருவர் டெல்டா அமைச்சரிடம் சொல்லியிருக்கிறார். யாருமே ஓடவிடாத தேரோட்டத்தை ஓடவிட்டால், ஜெயலலிதா நெருக்கடி நிலையிலிருந்து விடுபட்டுவிடுவார் என்று சொல்லி, அதற்கான கிரக பலன்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை அப்படியே கார்டனில் சொல்லி ஒப்புதல் பெறப்பட்ட பிறகுதான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள் அமைச்சர்கள்.

அப்போதே அதிமுகவைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் சென்டிமென்ட் விவகாரத்தையும் சொல்லியிருக்கிறார்கள். விழாவுக்கான வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது, ஒரு சிலர் இது கண்டிப்பாக சிக்கலைத்தான் கொடுக்கும் என்று சொல்லி, கடந்த காலத்தில் நடந்த ஆபத்துகளைப் பட்டியல் போட்டிருக்கிறார்கள். பாதியில் நிறுத்தினால் தெய்வ குத்தமாகப் போய்விடும், மக்களும் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்பதால், அதிகாரிகள் மட்டத்தில் தேரோட்டத்தை நடத்தி முடிக்கச் சொல்லிவிட்டார்கள். இதனால் தேர் வெள்ளோட்டம் விடும்போதுகூட அ.தி.மு.க. பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவில்லை. வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படும் என்று சொன்ன அ.தி.மு.க. நிர்வாகிகள் பலர் இதில் கலந்து கொள்ளவில்லை.

தேரோட்டத்தின் போது அமைச்சர்கள் வைத்திலிங்கம், காமராஜ் ஆகியோர் கோயில் உள்ளே செல்லாமல், கோயிலின் வெளிப்புறத்தோடு நின்றுவிட்டார்கள்.


# தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் மதன் முடிவெய்தினார்



ஓய்வுபெற்ற தலைமைக்காவலர் மறைந்த தூத்துக்குடி இராமகணேசன்-முத்துலெட்சுமி ஆகியோரின் மகனும், தோழர் ரேவதியின் கணவருமான தூத்துக்குடி திராவிடர் விடுதலைக் கழக மாவட்டச் செயலாளர் தோழர் க. மதன், 16.04.2015 அன்று வியாழக்கிழமை மாலை இயற்கை எய்தினார். தோழருக்கு யாழ் திலீபன் மற்றும் யாழ் பிரபாகரன் (அகவை 6) என்ற இரு மகன்கள் உள்ளனர். இவரது இறுதி ஊர்வலம் 17.04.2015 அன்று மதியம் 12 மணியளவில் தூத்துக்குடியில் நடைபெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 7th May 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மே 14, 2015 | புரட்சி 14 | முழக்கம் 18 | விலை: ரூ.3.00


# அம்பேத்கருக்கு ஆதரவாக ஆர்.எஸ்.எஸ். கபட நாடகம்

## எச்சரிக்கிறார், அருந்ததிராய்

*அம்பேத்கர் படத்தை ஆர்.எஸ்.எஸ். பத்திரிகை அட்டைப்படமாக போடுவதும் அம்பேத்கர் சிலைகளை திறப்பதும், நயவஞ்சக மானது என்று பிரபல எழுத்தாளர் அருந்ததிராய் எச்சரித்தார்.*

*சென்னையில், மே 2ஆம் தேதி விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்திய விருது வழங்கும் விழாவில், 'அம்பேத்கர் சுடர்' விருதைப் பெற்றுக் கொண்டு அவர் ஆற்றிய உரை:*

அம்பேத்கர் விருது கொடுத்து என்னை கவுரவித்ததற்கு மிகுந்த நன்றி. குறிப்பாக பாசிசத்துக்கு எதிராக அரசியல் கூட்டணி களைத் திரட்ட வேண்டிய அவசியமும் அவசரமும் உள்ள இந்த காலகட்டத்தில் இந்த விருதை எனக்கு வழங்குவதற்காகப் பாராட்டு கிறேன்.

வெட்கமே இல்லாமல் இந்தியாவை இந்து தேசம் என்று வாதாடிக்கொண்டிருப்பவர்கள் இன்று இந்தியாவின் தலைமை பொறுப்பில் இருக்கிறார்கள். அந்த குறிக்கோளை எட்டு வதற்காக சக்கரங்கள் சுழன்று கொண்டே யிருக்கின்றன - பொதுவெளியிலும் தனிப்பட்ட முறையிலும். பல்கலைக்கழக, பள்ளிக்கூட பாடத்திட்டங்கள் மாற்றப்படுகின்றன; வரலாறு மாற்றி எழுதப்படுகிறது (அது எழுதப்பட வேண்டும் ஆனால் இப்படி அல்ல), கற்றல் வழிமுறைகள் முழுமையாக மாற்றியமைக்கப் படுகின்றன; இந்துத்துவ குருமார்கள் நீதித்துறை யிலும், காவல்துறையிலும், உளவுத்துறையிலும் ராணுவத்திலும் கூட அமர்த்தப்படுகிறார்கள்.

விஸ்வ இந்து பரிஷத்தும் பஜ்ரங் தளமும் நாடெங்கிலும் நடத்திக்கொண்டிருக்கும் இந்த வித்தியாசமான கர் வாப்ஸி (வீடு திரும்புதல்) பற்றித்தான் நான் உங்களுடன் இன்று பேச விரும்புகிறேன். முன்பெல்லாம் அது சுத்தி (தூய்மை) இயக்கம் என்றே அழைக்கப்பட்டது. அதாவது அசுத்தமானவர்களை தூய்மைப் படுத்தி அவர்களை மீண்டும் இந்து மதத்திற்கு திரும்பி அழைத்து வரும் செயல்பாடு. 150 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது அது. அதற்கும் மதத்திற்கும் உண்மையில் எந்தத் தொடர்பும் இல்லை. அது முழுக்க முழுக்க மக்கள் தொகை சம்பந்தப்பட்டது. இந்துக்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டுவதற்கான முயற்சி அது. இன்று அதை வாக்கு வங்கி என்று நாம் அழைக்கிறோம்.

ஆனால் இந்து சமுதாயம் என்ற ஒன்று இருந்ததே இல்லை. அது சமீபத்தில் உருவான கருத்துரு. "இந்து சமூகம் என்பதே ஒரு புனைவு தான் என்று உணர்வதுதான் முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும். சிந்து சமவெளியின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்தவர்களைத் தங்களிட மிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக முகமதியர்கள் கொடுத்த பெயர் அது" என்று பாபாசாகேப் அம்பேத்கர் குறிப்பிடுகிறார்..

நூறு வருடங்களுக்கும் முன்பு சாம்ராஜ் யங்கள் தேசங்களாக மாறிய போதும் மன்னர்களுக்குப் பதிலாக பிரதிநிதித்துவ அரசியல் உருவான போதும்தான் இந்த வாக்கு வங்கிகளை ஏற்படுத்தும் வழக்கம் உண்டானது. பிரதிநிதித்துவ அரசியல் எண்ணிக்கையைப் பற்றிய ஒரு புதிய கவலையை உருவாக்கியது. தாம்தான் பெரும்பான்மை என்பதை நிறுவ ஆதிக்க சாதிகள் மிகவும் பிரயத்தனப்பட்டன. இந்துக்கள் என்று தங்களை அழைத்துக் கொண்டவர்கள் அதன் பிறகுதான் அவ்வாறு செய்யத் தொடங்கினார்கள். அது வரை சாதியே அவர்களது அடையாளமாக இருந்தது. மக்கள் தொகை பற்றிய கவலை உருவாகும் வரை, இலட்சக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்கள், சாதியின் கொடுங்கரங்களிலிருந்து தங்களை காத்துக்கொள்ள இஸ்லாத்துக்கும், கிறிஸ்துவத்துக்கும், சீக்கிய மதத்திற்கும், பௌத்தத்திற்கும் மாறியது பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.



ஆனால் மக்கள் தொகை பற்றிய கவலை உண்டானவுடன், அவர்கள் யாருடைய தொடுதலை தவிர்த்தார்களோ, யாருடைய உணவை ஏற்றுக்கொள்ள மறுப்பார்களோ, யாருடைய வீடுகளுக்குச் செல்ல மாட்டார்களோ அந்த நாலரை கோடி 'தீண்டத் தகாதவர்களும்' இந்துக்கள்தான் என்று முடிவு செய்து விட்டார்கள். ஒரு பெரிய பிரச்சாரம் தொடங்கியது - சாதி அமைப்புக்கு எதிராக அல்ல, அதன் சொத்து உரிமை பற்றி அல்ல ஆனால் தீண்டாமைக்கு எதிராக தொடங்கியது. தீண்டத்தகாதவர்களை இந்து மதத்திற்குள் வைத்துக்கொள்வதுதான் அதன் நோக்கம். பிறகு ஆரிய சமாஜ் 'தூய்மை' இயக்கத்தைத் தொடங்கியது. அதைத்தான் தற்போதைய அரசு மிகப்பெரிய அளவில் மறு அறிமுகம் செய்ய திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. பிரச்னை இதுதான்: பெரிய வீட்டுக்குள் அழைத்து வந்த பிறகு அவர்களை எப்படி தனிமைப்படுத்தி வைப்பது? வேலைக்காரர் களுக்கான குடியிருப்பிலா? இந்து பெரும்பான்மையை உருவாக்கும் அதே நேரம் சாதித் தூய்மையை எப்படி பாதுகாப்பது? சாதி அமைப்பை தூக்கிப்பிடித்துக் கொண்டே தீண்டாமை பற்றி இவர்கள் வடிக்கும் முதலைக்கண்ணீரின் நோக்கத்தை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

நவீன அரசியல்வாதிகளில் மிகச் சிறந்தவர் என்று நான் நம்பும் பாபாசாகேப் அம்பேத்கர் இவற்றை யெல்லாம் பல வருடங்களுக்கு முன்பே கண்டுணர்ந்து கோபத்தோடும் வெறுப்போடும் அறிவு வலிமை யோடும் நிராகரித்தார். இது எல்லாம் அவருடைய எழுத்தில் இருக்கின்றன.

ஆனால் இன்று, பாஜக தலைவர்கள் வெட்கமே இல்லாமல் பாபாசாகேப் அம்பேத்கரின் படங்களை யும் சிலைகளையும் தினமும் திறந்து கொண்டிருக் கிறார்கள். அவர் மீதான அன்பை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ் பத்திரிக்கை யான ஆர்கனைசர் அவரை தனது முகப்பு அட்டையில் பிரசுரித்திருக்கிறது. அவரைத் தொழுவதாக ஏமாற்றும் அதே நேரம் பாபாசாகேபின் அரசியலை அடித்துக் கூழாக்கி அவரை இந்துவின் சின்னமாக கட்டமைக் கிறார்கள். கடும் பயத்தில் கிறிஸ்துவர்கள் வாழும் கந்தமால், பஸ்தர் போன்ற இடங்களில் கிறிஸ்துவ சமூகம் மீது அவர்கள் நடத்தும் கொலைவெறித் தாக்குதல்கள், தேவாலயங்களை எரிப்பது, கன்னியாஸ்திரிகளை பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்குவது எல்லாம் இந்து மதத்தை விட்டு வேறு மதத்திற்கு மாறச் சொல்லி அம்பேத்கர் சொன்னதை செய்த தலித்துகள் மீதான தாக்குதலே.

இன்று கொடுமை என்னவென்றால் தலித் கிறித்தவர்களும் இஸ்லாமியர்களும் 'கர் வாப்சி' நிகழ்வில் பங்கு கொள்ள அவர்கள் தரும் ஊக்கம், எதற்காக அம்பேத்கர் பாடுபட்டாரோ அந்த இட ஒதுக்கீடுதான். மதம் மாறியதால் இட ஒதுக்கீட்டுக்குத் தகுதியற்றவர்களாகிவிட்ட அவர்களை அந்த ஆசை வார்த்தையைச் சொல்லியே மீண்டும் இந்து மதத்திற்குள் அழைத்து வர முனைகிறார்கள். அம்பேத்கரின் சிந்தனைகளைத் திரித்து அவருக்கு எதிராக, அவர் நம்பியவற்றுக்கு எதிராக ஒரு கத்தியாக இன்று பயன்படுத்தப் பார்க்கிறார்கள். அவரது மக்களின் வறுமையும் பாதுகாப்பற்ற நிலையும் அவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

**இதுதான் வல்லரசா?**

இந்திய ஒரு வல்லரசு என்று நமது தலைவர்கள் சொல்கிறார்கள். இந்த வல்லரசில்தான் எண்பது கோடி மக்கள் நாள் ஒன்றுக்கு 20 ரூபாய்க்கும் குறைவான பணத்தைக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த பணத்தில் ஒரு கௌரவமான வாழ்க்கையை வாழ

( 2ஆம் பக்கம்)

## முதலாளித்துவத்தின் தாய் – ஜாதி!

இப்போது உலகம் முழுதும் பரபரப்பாக பேசப்படும் ஒரு நூல் '21ஆம் நூற்றாண்டில் மூலதனம்' (Capital in the Twenty First Century) என்ற பிரெஞ்சு எழுத்தாளர், பேராசிரியர் தாமஸ் பிகெட்டி எழுதிய நூல். உலகில் உருவாகிவரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை விரிவாக ஆராய்கிறது இந்த நூல். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நிலவிய அதே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், 21ஆம் நூற்றாண்டிலும் நிலவுகிறது என்பதை அவர் ஏராளமான புள்ளி விவர சான்றுகளுடன் நிறுவியிருக்கிறார். அந்த புள்ளி விவரங்கள் மலைக்க வைக்கின்றன.

வங்கிகளும் கார்ப்பரேட் நிறுவனங்களும் செல்வாக்குடன் அதிகாரம் செலுத்தும் இந்த காலத்தில்கூட அமெரிக்க அய்ரோப்பிய நாடுகளில் பொருளாதார சமத்துவம் உருவாகவில்லை. ஏற்றத்தாழ்வுகள் நீடிக்கின்றன. இதற்குக் காரணம் வங்கிகள், கார்ப்பரேட் நிறுவனங்களின் அதிகாரத்தைக்கூட வழி நடத்தி இழுத்துச் செல்லக் கூடியதாக – குடும்ப பாரம்பரிய அமைப்பும் அதனடிப்படையில் தலைமுறை தலைமுறையாக கைமாறி வரும் சொத்துகளுமே காரணிகளாக இருக்கின்றன. இந்த ஆய்வை அப்படியே இங்கே பொருத்திப் பார்த்தால் சொத்து, அறிவு, சலுகைகள் பரம்பரை, அடிப்படையிலும் பிறப்பின் அடிப்படையில் சமூகத்தை தீர்மானிப்பது இந்து சாதியமைப்புதான் என்ற முடிவுக்கு வந்துவிடலாம். எனவே, இந்த நாட்டில் முதலாளித்துவத்தின் தாய் – ஜாதியமைப்புதான்.

**– அருந்ததிராய் உரையிலிருந்து**

**தலையங்கம்**

## தீர்ப்பு வந்துவிட்டது!

19 ஆண்டுகாலம் இழுத்தடிக்கப்பட்ட ஒரு வழக்கை இரண்டே நிமிடங்களில் தீர்ப்பளித்து தீர்வு கண்டுவிட்டது கருநாடக உயர்நீதிமன்றம். ஜெயலலிதா மற்றும் அவரது குழுவினரான சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்பட எவரும் வருமானத்துக்கு அதிகமாக சொத்து ஏதும் சேர்க்கவில்லை என்பதே நீதிமன்றத்தின் தீர்ப்பு. ஆம்! இப்போது இவர்கள் சட்டப்படி ஊழல் ஏதும் இழைத்திடாத குற்றமற்றவர்கள்!

“நான் புடம் போட்ட தங்கமாக மீண்டு வந்துவிட்டேன்” என்று ஜெயலலிதாவும் அறிவித்திருக்கிறார். அ.இ.அ.தி.மு.க. அமைச்சர்களும் அந்த கட்சியினரும் வெற்றியைக் கொண்டாடி மகிழும்போது எதிர்கட்சிகளோ வியப்பிலும் அதிர்ச்சியிலும் மூழ்கியுள்ளன.

எப்போதுமே இந்த ‘பாரத புண்ணிய பூமி’யில் ஊழல் இரண்டு முகம்களைக் கொண்டிருக்கிறது. ஒன்று ‘பிராமண’ ஊழல்; மற்றொன்று ‘சூத்திர’ ஊழல். குற்றம் செய்தவர்கள் பார்ப்பனர்களாக இருந்தால், அவர்களை தண்டிக்கக் கூடாது என்று மனுசாஸ்திரம் கண்டிப்பாக கூறிவிட்டது. அந்த ‘மனு’ இப்போது வேறு வடிவங்களில் இயங்கிக் கொண்டு இருக்கிறது.

இதற்கு அண்மைக்கால உதாரணங்களே உண்டு. லல்லுபிரசாத், ஓம்பிரகாஷ் சவுதாலா, கனிமொழி, அ.இராசா போன்ற ‘சூத்திரர்கள்’ ஊழல் வழக்கில் சிக்கினால், அவர்கள் பிணையில் வருவதற்குக்கூட சுமார் ஓராண்டுகாலம் சிறையில் இருந்தாக வேண்டும். ஜெயலலிதா, காஞ்சி ஜெயேந்திரன் போன்ற உயர்குடிப் பார்ப்பனர்கள் குற்றம்சாட்டப்பட்டால், அவர்கள் பிணையில் வெளி வருவதற்கு ஒரு மாதம்கூட சிறையில் இருக்கத் தேவையில்லை. உடனே பிணை கிடைத்து விடும். காஞ்சி ஜெயேந்திரனுக்கு பிணை வழங்கும்போதே உச்சநீதிமன்ற பார்ப்பன நீதிபதி, “அவர் குற்றமற்றவர்” என்று தீர்ப்பையும் சேர்த்து எழுதி, புதிய ‘வரலாறு’ படைத்தார்.

இப்போது ஜெயலலிதா வழக்கிலும்கூட பல ‘அதிசயமான’ திருப்பங்கள் நடந்திருக்கின்றன. இந்த சொத்துக் குவிப்பு வழக்கைக்கூட தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஊழல் இலஞ்ச ஒழிப்புத் துறை வழியாக தனக்கு எதிராக தானே நடத்திக் கொண்டிருந்தார். 70 சாட்சிகள் பிறழ் சாட்சிகளாயினர். ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்கை நடத்துவதற்கு ஜெயலலிதா ஆட்சியிடமிருந்தே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில்தான் வழக்கு பெங்களூருக்கு மாற்றம் செய்யப்பட்டது. தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் தொடர்ந்த வழக்கினால் நிகழ்ந்த மாற்றம் இது. பெங்களூருக்கு மாற்றப்பட்ட பிறகும்கூட ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாடும் வழக்கறிஞரை – அவரது ஆட்சியே அரசு செலவில் நியமித்துக் கொண்டது. (வாதாடியவர் பவானி சிங்) பிறகு உச்சநீதிமன்றம் தலையீட்டிற்குப் பிறகு ‘பவானி சிங்’ வாதம் தள்ளுபடியானது.

1999இல் வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் அ.இ.அ.தி.மு.க.வைச் சார்ந்த தம்பிதுரை, மத்திய சட்ட அமைச்சராக இருந்தார். அவர்தான் தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா மீதான ஊழல் வழக்குகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட மூன்று சிறப்பு நீதிமன்றங்களை கலைத்து உத்தரவிட்டார். அப்போதும் உச்சநீதிமன்றம் தலையிட்டு அந்த உத்தரவை நீக்கம் செய்து வழக்குகளை வழமையான நீதிமன்றங்களில் விசாரிக்க உத்தரவிட்டது. இப்படி ஊழல் வழக்குகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு ‘அதிகாரங்கள்’ பல்வேறு கட்டங்களில் முறைகேடுகளாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு பார்ப்பன ஜெயலலிதாவுக்குத்தான் கிடைத்திருக்கிறது. எந்த ‘சூத்திர’ குற்றவாளிக்காவது இப்படி வாய்ப்புகள் கிடைத்துவிடுமா?

ஜெயலலிதாவை விடுதலை செய்துள்ள கருநாடக உயர்நீதிமன்ற நீதிபதி, 66.6 கோடி ரூபாய் சொத்துக்களை துல்லியமாக பிரித்துப் பிரித்து ஆராய்ந்து, கூட்டல் கழித்தல்களை எல்லாம் போட்டு இறுதியாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார். வருமானத்துக்கு அதிகமாக ஜெயலலிதாவும் அவரது குழுவினரும் சேர்த்துள்ள சொத்துக்கள் 8.12 சதவீதம் மட்டும்தான். ஆகவே இது சட்டப்படி குற்றமாகாது என்று நீதிபதி கூறிவிட்டார். வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்க்கும் ஊழலில் கூட விதிவிலக்குகள் உண்டு. இப்படி ஒரு விதி விலக்கை ஏற்கெனவே உச்சநீதிமன்றத்தின் வழியாக கிருஷ்ணானந்த் அக்னிஹோத்ரி என்ற ‘பிராமணர்’ வாங்கி வைத்திருக்கிறார். இவரது வழக்கில் வருமானத்துக்கு அதிகமாக 10 சதவீதம் வரை சொத்து சேர்க்கலாம் (அதாவது ஊழல் புரியலாம்) என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அது மட்டுமல்ல, ஆந்திர மாநில அரசு வருமானத்துக்கு அதிகமாக 20 சதவீதம் வரை சொத்து சேர்ப்பது குற்றமாகாது என்று ஒரு சுற்றறிக்கையும் விட்டிருக்கிறதாம். இந்த சுற்றிக்கையும் இப்போது நீதிபதியின் தீர்ப்புக்கு வலிமை சேர்த்திருக்கிறது.

குற்றம்சாட்டப்பட்ட ஒரு ‘பிராமணர்’ வழக்கை சந்திப்பதற்கும் ஒரு ‘சூத்திரர்’ வழக்கை சந்திப்பதற்கும் உள்ள வேறுபாடுகளை சுட்டிக்காட்டவே இவற்றை எடுத்துக் காட்டினோம்.

கடவுளுக்கும் புரோகிதருக்கும் ‘காணிக்கை’, ‘தானம்’ வழங்குவதுகூட ‘ஊழல்’ தான் என்றாலும் அதற்கு பார்ப்பனியம், ‘தெய்வீகத்தன்மை’யை வழங்கியிருக்கிறது. அதன் காரணமாகத்தான். ஜெயலலிதா வழக்கிலிருந்து விடுதலைபெற அவரது அமைச்சர்கள் ‘காணிக்கை’, ‘தானங்களை’, ‘புரோகிதர்களுக்கும்’, ‘கடவுள்களுக்கும்’ வழங்கி வேண்டுதல்களை நிகழ்த்தினர். அந்த ‘வேண்டுதல்களுக்கு’ ஜெயலலிதாவும் நன்றி கூறியிருக்கிறார்.

இவையெல்லாம் ‘பிராமண’ ஊழல் வழக்குகளுக்குக் கிடைக்கக்கூடிய தனித்த சிறப்புரிமைகள். இனி அடுத்து என்ன நடக்கும்?

வழக்கை உச்சநீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று எதிர்கட்சிகள் பேசத் தொடங்கியுள்ளன. அப்படியே மேல்முறையீடு செய்து அந்தத் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு மற்றொரு 19 ஆண்டுகாலம் காத்திருக்க வேண்டியிருக்கும்! காரணம், இது “பிராமண” ஊழல் வழக்கல்லவா?

# நீதி மனித உரிமையாக சுருங்கியது

( அருந்ததிராய் உரை.... முதல் பக்கத் தொடர்ச்சி)

முடியுமா? நிறைய பேர் ஆப்ரிக்கா வறுமையான கண்டம் என்றும் இந்தியா பணக்கார நாடென்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆப்ரிக்காவிலுள்ள ஏழை நாடுகளின் ஒட்டுமொத்த ஏழை மக்களை கணக்கிட்டால்கூட அதை விட அதிகமான ஏழை மக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள். உலகின் மிக அதிகமான ஊட்டச் சத்து குறைபாடுள்ள குழந்தைகள் வாழ்வது இந்த நாட்டில்தான். அதே நேரம், விரல்விட்டு எண்ணக்கூடிய சில கோடீஸ்வர தொழிலதிபர்களிடம் கோடிக்கணக்கான ஏழைகளிடம் இருக்கும் சொத்துகளைவிட அதிக சொத்துக்கள் குவிந்து கிடக்கின்றன. உலகின் மிக அவமானகரமான, சமநிலையேயில்லாத ஒரு சமுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மற்ற நாடுகளைப் போல அல்லாமல் நமது நாட்டில் மக்கள் சமத்துவம் மறுக்கப்படுகிறது. இந்து ஜாதியமைப்பு என்ற நிறுவனத்தால் இந்த ஏற்றத்தாழ்வு புனிதப்படுத்தப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 20 ரூபாய்க்கும் குறைவான பணத்தில் வாழும் எண்பது கோடி பெரும்பான்மை மக்கள், அணைகள், சுரங்கங்கள், சிறப்பு மண்டலங்கள் போன்ற மிகப்பெரிய வளர்ச்சித் திட்டங்களால் தங்கள் வாழ்நிலங்களிலிருந்து துரத்தப்பட்ட இலட்சக்கணக்கான பெரும்பான்மை மக்கள், ஊட்டசத்து குறைவுள்ள குழந்தைகளில் பெரும்பான்மையானவர்கள், நிலமற்ற தொழிலாளர்கள், வீடற்ற மக்கள், நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்கள், சிறைகளில் இருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் எல்லோரும் தலித்துகள், ஆதிவாசிகள் மற்றும் இப்போது இஸ்லாமியர்கள். வன்முறை நிறைந்த நமது நாட்டில் கலவரங்களில் கொல்லப்படுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் இவர்களே.

தேசிய குற்ற ஆவண மைய விவரங்களின் படி, தலித் அல்லாத ஒருவர் ஒவ்வொரு 16 நிமிடங்களுக்கும் ஒரு தலித் மீது வன்முறையை செலுத்துகிறார். ஒவ்வொரு வாரமும் 4 தலித் பெண்கள் பிற சாதியினரால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுகிறார்கள், ஒவ்வொரு வாரமும் 13 தலித்துகள் கொல்லப்படுகிறார்கள். ஆறு தலித்துகள் கடத்தப்படுகிறார்கள்.

தில்லியின் கூட்டு பாலியல் வல்லுறவு கொலை சம்பவம் நிகழ்ந்த 2012ல் மட்டும் 1574 தலித் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். (தலித்துக்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கங்களிலும் மற்ற குற்றங்களிலும் வெறும் பத்துசதவிகிதம் மட்டுமே ரிப்போர்ட் செய்யப்படுகின்றன). 651 தலித்துகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அது பாலியல் குற்றம் மற்றும்கொலைகளின் எண்ணிக்கை மட்டுமே. நிர்வாணப்படுத்தி தெருக்களில் இழுத்துச் செல்வது, மலத்தைத் திணிப்பது, நிலத்தை அபகரிப்பது, சமூக புறக்கணிப்பு, குடிநீர் தராமல் இருப்பது எல்லாம் இந்த எண்ணிக்கையில் அடங்காதவை.

பாபாசாகேப் அம்பேத்கர் சொன்னது போல: “தீண்டாதவர்களைப் பொறுத்தவரையில் இந்து மதம் கொடூரங்களின் கூடாரம்.” ஆனால் வன்முறை என்பது குற்ற செயல்களில் ஈடுபடும் கும்பல்களோடு நின்றுவிடுவதில்லை. அது இந்திய தேசம் என்கிற கற்பிதத்தில் இருக்கிறது.

கடந்த ஏப்ரல் 7 ஆம் தேதியன்று ஆந்திர மாநிலத்தின் சிறப்பு காவல்படை 20 பேரை இரத்த வெறியோடு கொன்றது. யாரும் கைது செய்யப்படவில்லை. ஹஷிம்புராவில் 42 இஸ்லாமியர்களை சுட்டுக்கொன்ற வழக்கில் காவல்துறையினர் விடுதலை செய்யப்பட்டது போல, கீழ்வெண்மணிபோல, பிற தலித் படுகொலை வழக்குகள் போல அனேகமாக இந்தப் படுகொலைகளைச் செய்த சிறப்புக் காவல்படையினர் மீதும் எந்த நடவடிக்கையும் இருக்காது. அதே நாளில் தெலுங்கானாவில் கைது செய்யப்பட்டு வாரங்கல்லிலிருந்து ஐதராபாத்துக்கு அழைத்து வரப்பட்ட ஐந்து இஸ்லாமிய கைதிகளை சுட்டுக் கொன்றது காவல்துறை. பிறகு கொல்லப்பட்ட மக்களுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டது!!

### அரசியல் பிரச்சினைகளை தீர்க்க இராணுவம்

இந்தியா இறையாண்மை கொண்ட அரசாக மாறிய பிறகு கடந்த 67 வருடங்களில், உள்நாட்டில் அரசியல் பிரச்னைகளைக் கையாள இந்திய இராணுவம் அனுப்பப்படாத வருடம் என்று ஒன்று கூட இல்லை. காஷ்மீர், நாகாலாந்து, மிசோரம், மணிப்பூர், ஹைதராபாத், கோவா, தெலுங்கானா, அசாம், பஞ்சாப், மேற்கு வங்கம் என்று பல மாநிலங்களுக்கும் இராணுவத்தினர் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இப்போது ஆதிவாசி மக்கள் வாழும் மத்திய இந்தியாவிற்கு நிலத்தை சுரங்க நிறுவனங்களுக்கும் கட்டுமான நிறுவனங்களுக்கும் கையளிக்க இராணுவம் அங்கு செல்ல தயாராக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், இலட்சக்கணக்கானவர்கள் துன்புறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். தேசத்தின் எதிரிகள் யார்? யோசித்துப் பாருங்கள். அவர்கள் இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், ஆதிவாசிகள், சீக்கியர்கள் மற்றும் தலித்துகள். எப்போதும் தனது சிறுபான்மையினரோடு தலித்துகளோடு போர் புரிந்துகொண்டிருக்கும் ஒரு பார்ப்பன இந்து தேசத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் இந்தியா சிறுபான்மையினரின் தேசம் - இந்த மேட்டுக்குடி சிறுபான்மை (பார்ப்பனரும் பனியாக்களும் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் வெறும் 6 சதவிகிதம் மட்டுமே) எப்படி தங்களது சலுகைகளையும் அதிகாரத்தையும் நிலை நிறுத்திக்கொள்ள முடிகிறது? காலனிய ஆட்சியாளர்களைப்போல மக்களை ஒருவருக்கு எதிராக ஒருவரைத் திருப்பிவிடுவதன் மூலம்தான். காஷ்மீரில் சண்டையிட நாகாக்களை அனுப்புவதன் மூலம், காஷ்மீரிகளை சட்டிஸ்கருக்கு அனுப்புவதன் மூலம் தமிழர்களை அசாமுக்கு அனுப்புவதன் மூலம், இடைநிலைச் சாதியினரை தலித்துகளுக்கு எதிராக நிறுத்துவதன் மூலம், தலித்துகளை இஸ்லாமியர்களுக்கு எதிராக நிறுத்துவதன் மூலம் நீதி மனித உரிமையாக சுருங்கியது.

(மீதி அடுத்த இதழில்)

# மத்திய அரசுப் பதவிகளில் பிற்படுத்தப்பட்டவர்தான் 'சின்னஜாதி'

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

*கோயில் கட்டுகிறவர்கள் - கல்லூரி வியாபாரம் நடத்துகிறவர்கள் - தங்கள் சுயநலனுக்காக ஜாதி வெறியைத் தூண்டி விடுகிறார்கள் என்று 'எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்' பரப்புரை இயக்கத்தை 20-03-2015 அன்று சென்னை பெரம்பூரில் தொடங்கி வைத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையின் சில பகுதிகள். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

உயர் கல்வியில் இட ஒதுக்கீடு வந்தவுடன் வந்த போராட்டங்களை நீங்கள் மீண்டும் யோசித்துப் பாருங்கள். 2006ஆம் ஆண்டு வரை அய்.அய்.டி போன்ற உயர் கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்கள் அறுபது எழுபது சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடும் என்று நாம் கருதுகின்றோம். மண்டல் கணக்கெடுப்பின் படி 52 சதவீதம் என்று சொல்கிறார். மத்திய கல்வி அமைச்சர் மத்திய அரசின் உயர்கல்வி நிலையங்களில் 27 சதவீதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று சொல்லி விட்டார். அதற்கே பார்ப்பன மாணவர்கள் போராட்டம்; உடனே அரசு இறங்கி வந்தது. 27 சதவீத இடங்களையும் இப்போது கொடுக்கவில்லை, இந்த ஆண்டு 9, அடுத்த ஆண்டு 9, அதற்கடுத்த ஆண்டு 9 என பிரித்து தருகிறோம் என்றார்கள். ஆனாலும் பார்ப்பன மாணவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நம்முடைய மக்களின் தொழிலான தெரு கூட்டு வதையும், ஷூ பாலிஸ் போடுவதையும் அவன் போராட்ட வடிவமாக செய்தான். தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு எத்தனை இடங்களை கொடுத் தாலும் வருவதற்கு ஆளே இல்லை; பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு கொடுத்தால் நாளைக்கே வந்து விடுவான் என்று கருதிப் பார்ப்பனர்கள் எதிர்த்தார்கள். மொத்த இடங்களை 54 விழுக்காடு அதிகப்படுத்தி ( அதாவது 100 இடங்களை 154 ஆக உயர்த்தி ) உங்களின் இடங்கள் இப்போதிருக்கும் அளவிற்கே ( ஏற்கனவே 100 இடங்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி இடங்கள் 15 + 7.5 ஆக 22.5 போக 77 இடங்களை அனுபவித்து வந்ததைப்போல இப்போது பிற்படுத்தப் பட்டவர் களுக்கு 27 விழுக்காடு போனாலும், 50 சதவீதம் வரும், 154 இல் 50 விழுக்காடு என்றாலும்) பழையபடி 77 குறையாமல் பார்த்துக் கொள்கிறோம் என்றது அரசு; ஆனாலும் பார்ப்பனர்கள் எங்களின் இடம் முக்கியமல்ல, பிற்படுத்தப்பட்டவர்கள் வரக்கூடாது என்றுதானே எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

இப்படி பிற்படுத்தப் பட்டவர்களுக்கு எதிராக மட்டுமே நடத்தப்பட்ட போராட்டத்தைப் பற்றி உணராமல் அவன் காலடியில் போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். பார்ப்பானை தலைமேல் வைத்துக் கொண்டு இன்னொரு பிரிவினரை மிதிக் கின்றார்கள்.

ஜாதி எல்லா இடங்களிலும் இருக்கின்றது; எல்லோருடைய உள்ளத்திலும் வேலை செய்து கொண்டிருக்கிறது; அது இன்னொரு சமுதாயத்தை பிரிவினரை கேவலமாக நடத்துவதும், அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதும் தவறு என்கிறோம்.

சேலம் மாவட்டத்தில் கடந்த வாரம் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினோம். எதற்காக என்றால் அரசு நிலத்தில் கோவில் கட்டிவிட்டு நான் கட்டிய கோவிலுக்கு நீ வரக்கூடாது என்கிறான். அரசு நிலங்களில் கோவில் கட்டக் கூடாது என்று உச்சநீதிமன்ற தீர்ப்பே இருக்கின்றது; கோவிலை கட்டியதோடு அல்லாமல் மற்றவர்களை உள்ளே விட மறுக்கின்றான். சிவன் பெருமாள் கோவில் என்று கட்டிவிட்டு எங்கள் குலதெய்வம் என்று சொல் கிறார்கள். எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு பிற்படுத்தப்பட்டவர் களின் மனநிலையை மாற்றியிருக்கின்றார்கள். சமுதாயம் எப்போதும் இயல்பிலேயே முன்னோக்கித் தான் போய்க் கொண்டிருக்கும்; ஆனால் இந்த ஜாதி சங்கத் தலைவர்கள் பின்னோக்கி இழுக்கின்றார்கள். அண்மைக் காலமாக மிக அதிகமாக ஜாதி வெறியை தூண்டிவிட்டு தங்களின் சுயநலத்திற்கு பயன்படுத்திக் கொள்வது மட்டுமே ஜாதி சங்கத் தலைவர்களின் எண்ணமாக இருக்கின்றது. இந்த நிலையில் தான் நமக்கு இப்படிபட்ட ஒரு பயணம் அவசியமாகிறது.

இல்லாத ஜாதியை ஒழிந்து வந்த ஜாதியை மறைந்து போய் கொண்டிருந்த ஜாதியை இப்போது சிலர் தூக்கி நிறுத்த முயற்சி செய்து கொண் டிருக்கின்ற வேளையில்தான் இப்படிப்பட்ட பயணம் நமக்கு தேவைப் படுகின்றது.

மத்திய அரசு பணிகளைப் பொறுத்தவரை மிகக் குறைவான இடங்களில் மட்டும்தான் இருக்கிறார்கள். மத்திய அரசில் பிற்படுத்தப்பட்டவர்கள் தான் சின்ன ஜாதி. நம்மூரில் செருப்புப் போடக் கூடாது - தெருவில் வரக்கூடாது சின்ன ஜாதி என்று நாம் சொல்லும் தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் அங்கு 17 விழுக்காடு இருக்கின்றார்கள்; பெரிய ஜாதி என்று சொல்லிக் கொள்கிற பிற்படுத்தப் பட்டவர்கள் 6 விழுக்காடு தான் இருக்கின்றார்கள்; இங்கு நடக்கும் திரு மணங்களை காதலைத் தடுக்காமல், நம் ஜாதிக்காரர் களுக்கு மத்திய அரசுப் பதவிகளில் உரிய விழுக்காட்டு வேலைகளையாவது வாங்கிக் கொடு, அதற்கான முயற்சியை செய் என்று ஜாதி சங்கத் தலைவர்களை துரத்தி அடிக்கவேண்டும் இளைஞர்கள்.

பிரம்மா நான்கு வர்ணங்களைத் தான் உண்டாக் கினான். அது எப்படி நான்காயிரம் ஜாதிகளாக மாறியது? அதற்கான காரணம் மனுசாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இது குறித்து "ஜாதி என்பதற்கு விபச்சாரமே காரணம்" என்ற தலைப்பில் பெரியார் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றார். மனுசாஸ்திரத்தில் அப்படித்தான் எழுதப்பட்டிருக்கின்றது. பார்ப்பன பெண்களுக்கும் சூத்திர ஆண்களுக்கும் விபச்சாரத் தில் பிறந்தவர்கள் தான் சண்டாளர்கள் என்று எழுதுகிறான். "எல்லா பிராமணப் பெண்களும் அதே வேலையாக இருந்ததைப் போலவும், சூத்திர ஆண்கள் விபச்சாரிகளைத் தேடிப் போனதாகவும் அல்லவா இருக்கின்றது; இது இரு தரப்பினரையும் அவமானப்படுத்துவது" என்று அம்பேத்கர் நாசுக்காக எழுதினார். சண்டாளர்களும் பார்ப்பனப் பெண்களும் விபச்சாரம் செய்ததால் பிறந்தவர்கள் சருமவேலைக்காரர்கள் (தோல் வேலை செய்பவர்கள் அருந்ததியர்) என்று எழுதப்பட்டதைப் பார்த்து பெரியார் கேட்டார் "இவர்கள் 18 சதவீதம் இருக்கின்றார்கள், பார்ப்பனர் மூன்று சதவீதம் தான் இருக்கின்றார்கள், 3 சதவீதம் பேர் விபச்சாரம் செய்து 18 சதவீதம் பேர் பிறந்தார்கள் என்றால் இதே வேலையாகத் தான் இருந்தார்களா? உங்கள் ஜாதியைத்தானே, உங்கள் ஜாதிப் பெண்களைத் தானே இது கேவலப்படுத்துவதாக இருக்கின்றது" என்று. நீங்கள் மனுசாஸ்திரத்தை ஏற்றுக் கொண்டால் அது உங்கள் பெண்களை கேவலப்படுத்துவது ஆகும் என்றார் பெரியார்.

இராமயணத்தை படித்து இராமர் பாலம் என்கிறவர்கள், விநாயகர் புராணம் படித்து பிளாஸ்டிக் சர்ஜரி பற்றி சொல்கிறவர்கள், மனு சாஸ்திரத்தை படித்து மேற்சொன்னதை ஏற்றுக் கொள்வார்களா? நாம் இதையெல்லாம் பேச வேண்டிய காரணம் தோழர்களே, அறிவியல் அடிப்படை அற்ற ஒன்றை வைத்து ஒரு மனிதனை இப்படி பிரித்துப் பார்ப்பதால்தான்.

நாம் அனைவரும் மனிதராக, எல்லோரையும் சமத்துவமாக பார்க்கின்றவர் களாக, நம்மை இழிவுபடுத்தும் பொய்யான புராணங்களை உதறித் தள்ளிவிட்டு, அறிவியல்படி மானுடவியல்படி நாம் அனைவரும் சமமானவர்கள்-நாம் அனைவரும் இந்த சமுதாயத்தின் ஒரு பகுதி - ஒரு பிரிவு என்ற மனநிலைக்கு பிற்படுத்தப்பட்டவர்கள் வரவேண்டும் என்ற கோரிக்கையோடு நடத்தப்படுகின்ற இந்த பரப்புரைப் பயணம் என்பது ஒரு பத்து நாள் மட்டும் செய்தால் முடிந்து போவது அல்ல; நாம் ஒவ்வொருவரும் அதை ஏதேனும் ஒரு வகையில் மக்களிடம் பேசியாக வேண்டும். இதற்கான போராட்டங்களுக்கு வரமுடியாதவர்கள் இதன் நியாயங்களையாவது மக்களிடம் பேசுங்கள்; சமூகம் சமத்துவத்தை நோக்கி போகட்டும்.

மனிதரை மனிதராக மதிக்கின்ற மனப்பான்மை முந்தைய தலைமுறையினருக்கு இல்லாமல் போனாலும், இந்த காலத்து தலைமுறையினர் கல்வி அறிவு பெற்று, விசாலப் பார்வை பெற்று உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்த இந்த தலைமுறை இளைஞர்களுக்காவது வரவேண்டும் என்ற கோரிக்கையோடு நடத்துகின்ற இந்த பயணத்திற்கு அனைவரும் உதவவேண்டும் என்று கேட்டு முடிக்கின்றேன்.

## கொழுமம் ஆதியின் நூல்கள் வெளியீட்டு விழா

உடுமலைப்பேட்டையில் 26.04.2015 - ஞாயிறு அன்று கொழுமம் ஆதி-தீந்தமிழ் இணையரின் குழந்தைகள் தாமரைக் கண்மணி - தேன்மதி இருவரின் முதலாமாண்டு பிறந்த நாள் விழாவில் கொழுமம் ஆதியின் "மகளுக்குத் தாலாட்டு, சொல்லத் தயங்கும் உண்மைகள்" ஆகிய 2 நூல்கள் வெளியீட்டு விழாவும் உடுமலையின் 3 தமிழ்ச்சான்றோர்க்குப் பாராட்டு விழாவும் நடைபெற்றது.

"சொல்லத் தயங்கும் உண்மைகள்" நூலை திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, தமிழ் நாட்டுக் கல்வி இயக்க ஒருங் கிணைப்பாளர் பொழிலன் பெற்றுக் கொண்டார். "மகளுக்குத் தாலாட்டு" - நூலை புதுச்சேரி 'தழல்' ஆசிரியர் தேன்மொழியம்மையார் வெளியிட, கொழுமம் ஆதி-தீந்தமிழ் ஆகியோரின் பெற்றோர்கள் பெற்றுக் கொண்டனர்.

உடுமலையின் தமிழ்ச்சான்றோர்கள் ப. அறவாழி யார், பொ. பொன்னரசனார், க.இந்திரசித்து ஆகியோர்க்குப் பாராட்டும் பரிசும் வழங்கப்பட்டன. பொழிலனின் 5 நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன. முனைவர் அருள்சோதி தொகுத்துரைக்க, உடுமலை அருட்செல்வன் நன்றியுரை வழங்கினார். நிகழ்வைப் பாவலரேறு தேன்தமிழ்ப் பாசறை, திருக்குறள் அவையம், திருவள்ளுவர் திருக்கோட்டம், தமிழிலக்கிய ஆராய்ச்சிப் பேரவை, உடுமலை நாராயணகவி இலக்கியப் பேரவை, புதிய சிறகுகள் அறக்கட்டளை, கணியூர் தமிழ்க் கழகம் ஆகிய தோழமை அமைப்புகள் ஒருங்கிணைத்து நடத்தின.


## கழகத்தின் வெளியீடுகள்

**"இவர்தான் பெரியார்"**
வரலாற்றுச் சுருக்கம் - ஆண்டுவாரியாக
தொகுப்பு: தஞ்சை மருதவாணன்
விலை : ரூ.20

**1912லிருந்து 1973வரை திராவிடர் இயக்க வரலாற்றுச் சுவடுகள்**
தொகுப்பு: தஞ்சை மருதவாணன்
விலை : ரூ.30

**"ஈழம் முதல் அணு உலை வரை..."**
சமகாலப் பிரச்சினைகளில் பெரியாரியல் பார்வை!
கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் 'இமயம்', 'புதிய தலைமுறை' தொலைக்காட்சிப் பேட்டிகள்
விலை : ரூ.30

**"பண்பாடு-சமூகம்-அரசியலில் 'மநு'வின் ஆதிக்கம்"**
கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன்
விலை : ரூ.10

தொடர்புக்கு 9941759641

DATE OF PUBLICATION 14.05.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# காவல்துறை எல்லை மீறுகிறது

ஜெயலலிதாவுக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் 2014 செப்டம்பரில் 4 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கியபோது தமிழ்நாடு முழுதும் ஆளும் கட்சியினர் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டனர். பேருந்துகள் தீ வைக்கப் பட்டன; கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. காவல்துறை அனுமதியின்றியே சாலை மறியல் போராட்டங்கள் நடந்தன. காவல்துறை வேடிக்கை பார்த்தது. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால், ஆந்திர காவல்துறை 20 தமிழர்களை கொடூரமாக சித்திரவதை செய்து கொலை செய்ததை எதிர்த்து ஆந்திர பேருந்துகளை தாக்கிய தமிழ் உணர்வாளர்களை காவல்துறை கைது செய்து பிணையில் வெளிவர முடியாத பிரிவுகளில் வழக்கு தொடர்ந்து சிறையில் அடைத்தது.

கொழும்பில் நடந்த காமன்வெல்த் மாநாட்டில் மோடி பங்கேற்கக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்க, சேலம் வருமானவரித்துறை அலுவலக வாயிலில் ஒரு கோணிப்பையை மண்ணெண்ணெயில் மூழ்கச் செய்து வீசிய குற்றத்துக்காக திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களையும், தலைவர் கொளத்தூர் மணியையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து 7 மாதம் சிறையில் அடைத்தது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. இதே ஆட்சியில் தொலைக்காட்சி நிலையத்துக்கு 'வெடிகுண்டு' வைத்தவர்கள் மீதும், பெரியார் திடலுக்குள் வெடிகுண்டு ஆயுதங்களுடன் தாக்குதலுக்கு நுழைந்தவர்கள் மீதும் எந்த தடுப்புக் காவல் சட்டத்தையும் காவல்துறை பயன்படுத்தவில்லை. வெடிகுண்டு வீசுவதைவிட சாக்குப் பையை வீசியதுதான் குற்றம்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுக் கூட்டங்களுக்கு தொடர்ந்து அனுமதி மறுக்கிறது காவல் துறை.

'இந்துக் கடவுளர்களை' இழிவுபடுத்துவதாக காவல்துறையே குற்றம்சாட்டு கிறது.

கிணத்துக்கடவு கழகத் தோழர் நா.வே.நிர்மல்குமார், கழகத் தோழர் இந்துமதி ஆகியோரின் ஜாதி மறுப்பு - தாலி மறுப்பு மணவிழா, கிணத்துக்கடவு ஜாதி எதிர்ப்பு பரப்புரைக் கூட்டத்தில் மே 17இல் நடக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. பொதுக் கூட்ட மேடையில் திருமணம் நடத்த அனுமதிக்க முடியாது என்று தடைபோடுகிறார் பேரூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்.

**"கடவுள் மறுப்பு, ஜாதி மறுப்பு, பகுத்தறிவுப் பிரச்சாரம் என்ற பெயரில் இந்து மதத்தின் கடவுள் நம்பிக்கைகள் மற்றும் இந்து மத நம்பிக்கை உள்ள பொது மக்களின் மனதை வேதனைப்படுத்தி அதனால், அவர்களின் பகையை வலியப் போய் உருவாக்குகிறார்"** என்று தோழர் நிர்மல் குமார் மீது எழுத்துப்பூர்வமாக பழி சுமத்துகிறது. இந்த ஆணையாளர் அளித்துள்ள அனுமதி மறுப்புக்கான ஆணை.

இதையெல்லாம்விட பொதுக் கூட்டத்தில் நிர்மல்குமார்-இந்துமதி நடத்தக் கொள்ளவிருந்த திருமணம் பற்றி குறிப்பிடுகையில்,

**"ஒரு தனிப்பட்ட நபரின் திருமண நிகழ்ச்சி, எப்பொழுதும், யாராலும் ஒரு பொதுவிடத்தில் வைத்து நடத்தப்பட்டதே இல்லை. அதற்கு இதுவரை யாரும் அனுமதி கேட்டதோ, அதற்கு இதுவரை காவல்துறை அனுமதி அளித்ததோ கிடையாது"** என்று அந்த அதிகாரி ஆணையில் தெரிவித்திருப்பது தான் ஆணவத்தின் உச்சம்.

பொதுக் கூட்ட மேடைகளில் எத்தனையோ ஆயிரம் திருமணங்கள் இந்தத் தமிழ்நாட்டில் நடந்திருப்பது, இந்த அதிகாரிக்கு தெரியுமா? "இதுபோல் எப்போதும் நடந்ததே இல்லை" என்று வரலாற்று ஆய்வாளர்போல் தன்னைக் கருதிக் கொண்டு ஆணையில் குறிப்பிடுவது இவரது அறியாமையைத்தான் வெளிப்படுத்துகிறது. தோழர் நிர்மல்குமார், காவல்துறையிடம் அனுமதி கேட்டது, பொதுக் கூட்டத்துக்கே தவிர, அவரது திருமணத்துக்கு அல்ல என்பதை அவர் புரிந்து கொள்ளட்டும். இப்படியே போனால் திருமணத்துக்குகூட காவல்துறை அனுமதி கேட்கவேண்டும் என்று காவல்துறை ஆணை பிறப்பிக்கும் நிலை தமிழகத்தில் வந்துவிடும் போலிருக்கிறது.

இது தோழர் நிர்மல் குமாரை மிரட்டுவது அல்ல; தந்தை பெரியார் வாழ்நாள் முழுதும் பரப்பிய தத்துவத்துக்கு ஒரு காவல்துறை அதிகாரி இழைக்கும் அவமதிப்பு ஆகும். பார்ப்பனர் - ஆர்.எஸ்.எஸ்.காரர்களின் மேடைப் பேச்சுகளை அல்லது அவர்கள் ஏடுகளில் எழுதும் கட்டுரைகளை காவல்துறையின் ஆணைகளாகப் பிறப்பிக்கும் நிலைக்கு இந்த அதிகாரிகள் செயல்படுவது வன்மையான கண்டனத்துக்கு உரியது.

இந்திய அரசியல் சட்டம் கருத்துரிமை, பேச்சுரிமைகளை அடிப்படை உரிமைகளாக உறுதி செய்திருப்பதை மறந்துவிட வேண்டாம். இவர்கள் காவல்துறை அதிகாரிகளாக உயர்வதற்கு கல்வி உரிமையையும் உத்தியோக உரிமையையும் போராடி பெற்றுத் தந்தது - பெரியாரும் பெரியார் இயக்கமும்தான் என்பதை நினைவுபடுத்துகிறோம். எதற்கும் ஓர் எல்லை உண்டு!

# தொரவலூரில் கலந்துரையாடல்

திராவிடர் விடுதலைக் கழகத்தில் புதிதாக இணைய விருப்பம் தெரி வித்த தோழர்களுடன் கலந்துரை யாடல் கூட்டம் 26.04.2015 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அருகே தொரவலூரில் நடைபெற்றது . கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் பாரதிதாசன், மாநில தலைமைக் குழு உறுப்பினர்கள் பால்பிரபாகரன், ஈரோடு இரத்தின சாமி, விழுப்புரம் அய்யனார், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் பாலமுருகன் ஆகியோர் கலந்துகொண்டனர். புதிய தோழர்கள் 20 பேர் உள்பட ஏராளமா னோர் கலந்துகொண்டனர்.

# முனைவர் புரட்சிக்கொடிக்கு விருது



திருச்சி அண்ணா பல்கலைக் கழகத்தின் மருந்தியல் தொழில் நுட்பத்துறையில் உதவிப் பேரா சிரியர் பெரியாரியலாளர் முனைவர் புரட்சிக்கொடி 08.05.2015 அன்று சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் "TECHNOLOGY INNOVATION AWARD" என்ற பெருமைக் குரிய விருதைப் பெற்றுள்ளார்.

தமிழக அரசின் மிக உயரிய விருதான "'தமிழ்நாடு இளம் பெண் அறிவியலாளர் விருது'" (Tamilnadu Young Women Scientist Award), Fast track Young Scientist Research award போன்ற விருதுகளையும் பெற் றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது பெற்றோர் புலவர் ஆய்.அறிவன் - அறிவொளி இருவரும் பெரியார் தொண்டர்கள். ஜாதி, தாலி மறுப்புத் திருமணம் செய்தவர்கள். புரட்சிக் கொடியும் ஜாதி, தாலி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர். இவரது வாழ்வினையர் கழகத்தின் தலைமைக்குழு உறுப் பினர் தாமரைக் கண்ணன் ஆவார்.

அவருக்குப் 'புரட்சிகொடி' என்று பெயர் சூட்டியவர் பெரியார் என்பது கூடுதல் பெருமை...

72 ஆய்வுக்கட்டுரைகளை எழுதி யுள்ளார். உலகப்புகழ்பெற்ற அறிவியல் இதழ்களில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 4 முறை சர்வதேச அளவிலான ஆராய்ச்சி யாளர் மாநாடுகளிலும் 23க்கும் மேற்பட்ட தேசிய அளவிலான ஆய்வு மாநாடுகளிலும் ஆய்வுக் கட்டுரை களை சமர்ப்பித்துள்ளார். தேசிய அளவிலான ஆய்வாளர் மாநாடுகளை 4 முறை நடத்தியும் உள்ளார்.

புரட்சிக் கொடியின்ஆய்வுப் பணி தொடரட்டும். மேலும் பல சாதனைகள் புரிய 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வாழ்த்துகிறது!

# 'ப்ளஸ் டூ' தேர்வில் திராவிடன் சாதனை



திண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சேர்ந்த திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர்கள் மேரி ஜாக்குலின் - ஜவகர் இணையரின் மகன் ஜ.மே. திராவிடன் இவ்வருட +2 தேர்வில் 1184 மதிப்பெண்கள் எடுத்து திண்டுக்கல் மாவட் டத்தில் முதலாவதாகவும் அவரது பாடப்பிரிவில் மாநிலத்திலேயே நான்காம் இடத்தையும் பெற்றுள்ளார். தமிழில் 196, ஆங்கிலத்தில் 188, கணிதத்தில் 200, இயற்பியலில் 200, வேதியலில் 200, உயிரியலில் 200 மதிப்பெண்கள் எடுத்துள்ளார். மருத்துவ கட் ஆஃப் 200 மற்றும் பொறியியல் கட் ஆஃப் 200 என சாதனை புரிந்துள்ளார்.அடுத்து மருத்துவப் படிப்பு படிக்க உள்ளதாக கூறி உள்ளார்


திராவிடன் மேலும்மேலும் வெற்றிகளைக் குவிக்க 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வாழ்த்துகிறது

# 'புகழ்செல்வி' 100 வது இதழ் வெளியீட்டு விழா

'புகழ்செல்வி' 100 வது இதழ் வெளியீட்டு விழா 05.05.2015. செவ்வாய்க் கிழமை அன்று மாலை 5 மணிக்கு சென்னை மேற்கு மாம்பலம், சந்திரசேகர் திருமணக் கூடத்தில் நடைபெற்றது. "புகழ்செல்வி" நூறாவது இதழை கழகத் தலைவர் வெளியிட அற்புதம்மாள் பெற்று கொண்டார். கழக தலைவர் கொளத்தூர் மணி, மல்லை சத்யா. மதிமுக. தோழர் சுப.உதயகுமாரன், ஊடகவியலாளர் அய்யநாதன், த.பெ.தி.க. தோழர் கரு.அண்ணாமலைஆகியோர் கருத்துரை வழங்கினர். ஆவல் கணேசன் தொகுப்புரை வழங்கினார். பரணிபாவலன் இணையர் ஏற்புரை வழங்க, தோழர் நற்றமிழன் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 14th May 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு


www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மே 21, 2015 | புரட்சி 14 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00

# இலங்கை அரசை சர்வதேச விசாரணைக் கூண்டில் ஏற்ற வேண்டும் – ஏன்?

***மே 17, மே 18 நாள்களில் முறையே ம.தி.மு.க. மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மய்யம் நடத்திய முள்ளி வாய்க்கால் வீர வணக்கக் கூட்டங்களில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் தொகுப்பு.***

- பொது மக்கள் வாழும் பகுதியில் இராணுவத்தைக் குவித்திருப்பதில் தெற்காசியாவிலேயே முதலிடம் பெறுவது இலங்கைதான். வடக்கு கிழக்கு மாகாணத்தில் 6 தமிழர்களுக்கு ஒரு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.
- முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையோடு போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அப்போதைய அதிபர், இனப்படுகொலையாளன் இராஜபக்சே அறிவித்தார். ஆனால், போர் முடிந்ததற்குப் பிறகும் ஒரு இலட்சம் பேரை கூடுதலாக இராணுவத்தில் சேர்த்து, இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீட்டையும் 20 சதவீதம் அதிகரித்துள்ளது இலங்கை அரசு.
- 2006-2009 ஆண்டுகளுக்கிடையே வன்னிப் பகுதியில் மட்டும் விமானத்திலிருந்து வீசப்பட்ட வெடிப் பொருள்களின் அளவு 144 மில்லியன் கிலோ கிராம். இந்த 3 ஆண்டுகளில் வன்னிப் பகுதியில் இராணுவ விமானம் பறந்தது 13,000 முறை. இந்தப் புள்ளி விவரத்தை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் வெளியிட்டதே அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர்.
- மேற்குறிப்பிட்ட 3 ஆண்டுகளில் ஒவ்வொரு நாளும் சராசரியாகக் கொல்லப்பட்ட தமிழர்கள் 116 பேர். இது அய்.நா.வே தயாரித்த உள்ளக அறிக்கையில் இடம் பெற்றுள்ள தகவல். ‘அயர்லாந்து சமாதானப் பேரவை’ இதை வெளிக் கொண்டு வந்திருக்கிறது.



- கல்வி, சுகாதாரம், குடியிருப்பு, சமூகப் பாதுகாப்பு, மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை 50 சதவிகிதமாகக் குறைத்து பல மடங்கு இராணுவத்துக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது, இனப்படுகொலை அரசு.
- இனப்படுகொலைக்கான போரில் உயிர் தப்பியவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் நேரடி சாட்சியப் பதிவுகள், கற்பனைக்கு அப்பாற்பட்ட கொடூரங்களாகும். அந்த காட்சிப் பதிவுகள் ஆவணங்களாக இருக்கின்றன.
- ‘போரில்லாத பகுதி’ என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும், ஏன், அய்.நா. அலுவலகங்களுக்கான பாதுகாப்பு பகுதியிலும்கூட குண்டுகள் வீசப்பட்டன. சுமார் 3 இலட்சம் தமிழர்கள் பாதுகாப்புக்கருதி, உயிர் பிழைக்கத் திரண்டிருந்த போரில்லா பகுதியில்கூட நிலம், கடல், வானம் என்ற மூன்று நிலைகளிலிருந்தும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி பிப்.6, 2009 அன்று தாக்குதல் நடத்தப்பட்டதை அய்.நாவின் தலைமைச் செயலாளர் பான்-கி-மூன் நியமித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கை பதிவு செய்திருக்கிறது.
- “இறுதித் தாக்குதல் நடக்கப் போகிறது; ‘போரில்லாத’ பகுதிக்கு பொது மக்கள் போய்விடலாம்” என்று இடைவிடாது இராணுவம் அறிவித்துக் கொண்டு, துண்டுப் பிரசுரங்களையும் வழங்கியது. தனது நாட்டின் குடிமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒரு அரசுக்கு உண்டு. ஆனால், தனது நாட்டின் குடிமக்கள், தங்கள் உயிரைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு அரசு அறிவித்திருப்பது இனப்படுகொலைக்கான வலுவான சான்று.
- இறுதிக்கட்ட இனப்படுகொலையில் அப்பாவி தமிழ் மக்களை இலங்கை அரசு காப்பாற்ற வேண்டும் என்று கருதியிருந்தால் காப்பாற்றியிருக்க முடியும். மக்களை போராளிகளிடமிருந்து பிரித்து அடையாளம் காணக்கூடிய தொழில்நுட்ப வசதிகள் இலங்கை அரசிடம் உண்டு. இலங்கை அரசே நியமித்துக் கொண்ட ‘பாடம் கற்றல்; தீர்வு காணுதல்’ (எல்.எல்.ஆர்.சி.) விசாரணை ஆணையத்தின் முன் வாக்கு மூலம் அளித்த இராணுவத் துறை செயலாளர் கோத்தபய ராஜ பக்சே மற்றும் விமான படை தளபதி குணதிலகா அளித்த வாக்குமூலங்கள் இதை உறுதி செய்கின்றன. “எங்களிடம் ஆள் இல்லாமல் பறக்கும் விமானங்கள் இருக்கின்றன; இரவு பகல் எந்த நேரத்திலும் மக்கள் வாழும் பகுதிகள், மருத்துவமனைகள், பள்ளிகள், குடியிருப்புப் பகுதிகள், ஆயுதம் வைத்திருப்போர், மற்றும் அப்பாவி பொது மக்களை அதன் வழியாக அடையாளம் காண முடியும். இதைப் பயன்படுத்தி அப்பாவி மக்களை பாதுகாத்தோம்” என்று கூறியிருக்கிறார். உண்மை என்னவென்றால், இந்த நவீன தொழில்நுட்பத்தை மக்களின் பாதுகாப்புக்கு பயன்படுத்தாமல், அவர்களை அழித்தொழிக்கவே பயன்படுத்தியிருக்கிறார்கள். இதோ சில சான்றுகள் மட்டும்.
- போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளின் புனர் வாழ்விற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் மனித நேயத்துடன் நடத்திய ‘செஞ்சோலை’யை இந்த ஆள் இல்லாத விமானம் மூலம் கண்டறிந்து, குண்டு வீசி, 60 குழந்தைகளைப் பிணமாக்கினார்கள். இது சர்வதேச சட்டங்களுக்கு எதிரான போர்க் குற்றம்.
- யுத்தப் பகுதியில் மக்களுக்கு உதவுவதாக முகாமிட்டிருந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கம், மருத்துவமனை இருக்கும் பகுதிகளை பட்டியலிட்டு இராணுவத்திடம் அளித்தது. நோக்கம், இந்தப் பகுதியில் குண்டுவீச்சுகளை நடத்தக் கூடாது என்பது. ஆனால் பட்டியலைப் பெற்றுக் கொண்டு இலங்கை அரசு, அந்த மருத்துவமனைகள் மீதே குண்டு வீசியது. மருத்துவமனைகள் மீது மட்டும் 64 முறை குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. தாக்குதலிலிருந்து உயிர் பிழைத்த தமிழ் மருத்துவர்கள், “தயவுசெய்து மருத்துவமனை இருக்கும் பகுதிகளின் விவரங்களை இராணுவத்திற்கு தெரிவிக்க வேண்டாம்” என்று செஞ்சிலுவை சங்கத்தினரிடம் கண்ணீர்விட்டு மன்றாடியிருக்கிறார்கள்.
- 2009 பிப்ரவரி 3ஆம் தேதி அன்று புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் 800க்கும் அதிகமான பொது மக்கள் அடைக்கலம் புகுந்திருந் தனர். இதில் 500 பேர் நோயாளிகள். அன்றைய நாளில் மட்டும் பிற்பகல் 3 மணியிலிருந்து 6 மணி வரைக்கும், மீண்டும் இரவு 10.20 மணிக்கும், அடுத்த நாள் பிப்ரவரி 2ஆம் தேதி மாலை 6.40 மணிக்கும் இராணுவம் குண்டுகளை வீசிக் கொண்டே இருந்தது.

  இந்த குண்டுவீச்சுகள் அனைத்தையும் செஞ்சிலுவை சங்க மருத்துவ ஒருங்கிணைப்பாளர் மோர் வன்மூர்ச்சிகன் போசரி தனது விரிவான அறிக்கையில் பதிவு செய்திருக்கிறார்.
- ‘இனப்படு கொலை’ நடந்த பகுதியில் மக்களைக் காப்பாற்ற அரசு முயற்சிகளை மேற்கொண்டது என்றும், ஆனால், விடுதலைப் புலிகள் தான் மக்களைப் போக விடாமல் தங்கள் பாதுகாப்புக்காக தடுத்ததாகவும், அரசு நியமித்த ஆணையத்தின் முன் (எல்.எல்.ஆர்.சி.) இராணுவ செயலாளர் கோத்தபய இராஜபக்சே வாக்குமூலம் தந்திருக்கிறார் (2010, ஆக.14). இது அப்பட்டமான பொய். இனப்படுகொலை முடிந்தவுடன், இராஜபக்சே ‘இந்து’ ஆங்கில நாளேட்டுக்கு அளித்த பேட்டி (2009, ஜூன் 30), கோத்தபயே கூறியது பொய் என்பதை அம்பலப்படுத்தி விட்டது.

  “போரில்லாத பகுதிகள் எது என்று முடிவு செய்து அறிவித்ததே நாங்கள்தான். அய்.நா.வோ அல்லது வேறு நிறுவனங்களோ அதை தீர்மானிக்கவில்லை. நாங்கள் அப்படி அறிவித்த பகுதிக்குத்தான் பிரபாகரனும் மக்களும் வந்தனர். அவர்கள் தப்பிச் செல்ல வேறு எவருடைய உதவியையோ எதிர்பார்த்திருந்தனர். இப்படி ஒரே இடத்தில் திட்டமிட்டு திரட்டி, அவர்களை சுற்றி வளைத்து தாக்கினோம்” என்று இராஜபக்சே அந்தப் பேட்டியில் கூறி விட்டார். மக்களைக் காப்பாற்ற அரசு முயன்றது என்று கோத்தபய அளித்த சாட்சியம் பொய் என்பதை இராஜபக்சேவே மறுத்து விட்டார்.
- போரின் கடைசி 6 மாதங்களில் மக்களுக்கு உணவு மருந்துகள் மறுக்கப்பட்ட நிலையில் மக்கள் பெரும் அளவில் பட்டினிச் சாவுக்கு தள்ளப்பட்னர். 2009 ஏப்ரலில் அகதி முகாம்களில் மடிந்து போன 30 மூத்த தமிழ் குடிமக்களின் சவப் பரிசோதனையில் அவர்கள் பட்டினியால் மடிந்தது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.கே. அலெக்ஸ் ராஜா முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த சவப்பரிசோதனை அறிக்கை,

( 2ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## மீண்டும் குலக் கல்வி திட்டம்!

1954ஆம் ஆண்டு தமிழ்நாட்டு முதலமைச்சர் இராஜகோபாலாச்சாரி, பச்சைப் பார்ப்பன வெறியுடன் கொண்டு வந்த ‘குலக் கல்வித் திட்டம்’ இப்போது மீண்டும் உயிர் பெறுகிறது. ‘சூத்திரர்’ களுக்கு கல்வி உரிமையை பார்ப்பன நீதி நூலான மனு சாஸ்திரம் மறுத்தது. அவர்களுக்கு இழி தொழில்களை கட்டாயமாக்கியது. அந்த மனு சாஸ்திர அடிப்படையில் கொண்டு வரப்பட்ட குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து டாக்டர் எஸ்.ஜி. மணவாள இராமானுஜம் தலைமையில் மாநாடு கூட்டினார் பெரியார் (24.1.1954). கல்வித் திட்டத்தை திரும்பப் பெற 3 மாதக் கெடுவிதித்து, ஒற்றைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1954, மார்ச் 29இல் குலக் கல்வித் திட்ட எதிர்ப்புப் படை சுயமரியாதை வீரர் நீடாமங்கலம் ஆறுமுகம் தலைமையில் சென்னை நோக்கி புறப்பட்டது. படை சென்னை வரும் முன்பே ஆச்சாரியார் பதவி விலகினார். 13.4.1954இல் முதல்வராக பதவியேற்ற காமராசர், குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார்.

இப்போது வரலாறு திரும்புகிறது. 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பெற்றோர்கள் தங்களது பாரம்பர்ய தொழிலில் விடுமுறை நாள்களில் ஈடுபடுத்தலாம் என்று குழந்தைத் தொழிலாளர் சட்டத்தில் (1986ஆம் ஆண்டு சட்டம்) திருத்தம் கொண்டுவர மோடி அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருக்கிறது.

6 வயது முதல் 14 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் கல்வியை கட்டாய உரிமையாக்கி, அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி கொண்டு வந்த மனுதர்மத்துக்கு எதிரான சட்டத்தில் ஓட்டைப் போட்டு மீண்டும் மனு தர்மத்தைத் திணிக்கிறது, மோடி ஆட்சி!

இந்தியாவின் “சமூகக் கட்டமைப்பு – சமூகப் பொருளாதார நிலை”யைக் கருதி, இத்திருத்தம் செய்வதாக ஆட்சி கூறுகிறது. பெற்றோருக்கு பாரம்பரிய தொழிலில் உதவி செய்வதால், குழந்தைகள் தொழில் குறித்த அறிவைப் பெறுகிறார்கள் என்றும் ஆட்சி நியாயம் பேசுகிறது. ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்டத்தை ஆதரித்தவர்கள் முன் வைத்த அதே வாதங்கள்தான் இவை.

‘சமூக நிலை’யை மாற்றியமைக்க வேண்டிய ஒரு ஆட்சி ‘சமூக நிலைக்கு’ ஏற்றவாறு ஒரு கொள்கையை உருவாக்குவதாகக் கூறுவது வெட்கக் கேடானதாகும். பெண் குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்வதைக்கூட ‘சமூக நிலை’ என்று காரணம் கூறி, நியாயப்படுத்த முடியும். அதற்காக ‘பால்ய விவாகங்களை’ அனுமதித்து விட முடியுமா? என்று கேட்கிறோம்.

பள்ளி விடுமுறை நாள்களிலும் பள்ளி நேரம் முடிந்த பிறகும் பெற்றோருக்கு உதவுவது குற்றமா என்று பார்ப்பனர்கள் வாதிடுகிறார்கள். அவர்களுக்கு கூறுகிறோம்:

பள்ளிப் படிப்பு என்பது பள்ளிக்குச் செல்வது மட்டுமல்ல; விளையாட்டு, வீட்டுப்பாடம், குழந்தைகளின் பொழுதுபோக்கு உள்ளிட்ட பல அம்சங்களும் இணைந்திருப்பதே கல்வி பயிலும் பருவம். குழந்தைகளுக்கான பருவத்தை அவர்கள் முழுமையாக அனுபவிக்கும் உரிமைகள் வழங்கப்படும்போதுதான் ஆற்றலை வெளிப்படுத்தும் தகுதியைப் பெறுகிறார்கள் என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். உலகம் முழுதும் குழந்தைகள் உரிமை இதே கண்ணோட்டத்தில்தான் கவலையோடு பாதுகாக்கப்படுகிறது.

குழந்தைகள் வேலை செய்யத் தொடங்கிவிட்டாலே படிப்பில் கவனம் செலுத்துவார்களா? அதுவும் ‘உலகமயம், தாராளமயம்’ வந்துவிட்ட பிறகு தொழில் நிறுவனங்கள் வேலைகளை நிறுவனங்களுக்கு வெளியே ஒப்பந்தக் கூலி (Out sourcing) அடிப்படையில் வழங்கி வருகின்றன. வேலைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் முடித்து தரவேண்டும் என்ற கட்டாய நிபந்தனையில் குறைந்தக் கூலிக்காக குடும்பங்கள் உழைக்கின்றன. இந்தச் சூழலில் குழந்தைகள் படிப்பதைவிட இந்த உழைப்பில் பங்கேற்கச் செய்வதிலேயே பெற்றோர்கள் ஈடுபாடு காட்ட வேண்டியிருக்கிறது.

பெற்றோர்கள் செய்யும் பாரம்பர்யத் தொழிலையே செய்ய வேண்டும் என்று குழந்தைகள் மீது திணிப்பது, குழந்தைகள் உரிமைகளுக்கே எதிரானது! தனக்கான தொழிலை தேர்வு செய்யும் உரிமையை அவர்களிடமிருந்து பறித்து விடுகிறது.

இந்தியாவில் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் தேசத்தின் சொத்துக்கள் என்று 2013ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட குழந்தைகளுக்கான தேசிய கொள்கை கூறுகிறது. எந்த ஒரு சட்டமும் இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட வேண்டுமே தவிர, கொள்கையையே குழிதோண்டி புதைத்துவிடக் கூடாது.

இந்த சட்டத்திருத்தத்தால் பாதிக்கப்படுவது யார்? பார்ப்பனர், வசதிப் படைத்தவர்கள் வீட்டுக் குழந்தைகளா? நிச்சயமாக இல்லை.

ஒருங்கிணைக்கப்படாத வேலைகளில் ஈடுபட்டுள்ள தலித், சிறுபான்மை மற்றும் ஒடுக்கப்பட்ட, ஏழை எளிய பிரிவைச் சார்ந்த குழந்தைகள்தான்.

தொலைக்காட்சி விவாதங்களில் இந்த திருத்தத்தை ஆதரித்துப் பேசுகிறவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள்தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். குருகுலக் கல்வியையும், குலக்கல்வியையும் அவர்கள் வெளிப்படையாகவே நியாயப்படுத்துகிறார்கள். பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக் குறித்து மோடி ஆட்சி கவலைப்படவில்லை என்பதற்கு ஒரு உதாரணம் – குழந்தைகளின் மேம்பாட்டுக்கு முந்தைய ஆட்சி ஒதுக்கிய தொகை ரூ.18,588 கோடி. மோடி ஆட்சி ஒதுக்கியிருப்பது ரூ.10,382 கோடி மட்டுமே. பார்ப்பனர்கள் உண்மை முகத்தை இப்போதாவது அடையாளம் கண்டு, இந்த ஆபத்தான சட்டத்திருத்தத்தை முறியடிக்க தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்!

# அடுக்கடுக்கான சான்றுகள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள அய்.நா. தூதரக அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

- இனப்படுகொலைக்கு சர்வதேச சட்டத்துக்கு புறம்பாக இரசாயன வாயு, வெள்ளை பாஸ்பரஸ் மற்றும் கிளஸ்டர் குண்டுகளை இராணுவம் பயன்படுத்தியிருப்பதற்கு சான்றுகள் உள்ளன. பாகிஸ்தானிலிருந்து இவற்றை இலங்கை அரசு வாங்கியிருப்பதை பாகிஸ்தான் ஏடுகள் செய்திகளாக வெளியிட்டுள்ளன. தீக்காயங்களுடன் இறந்தவர்களை நேரில் கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்களை, பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் விரிவான அறிக்கைகள் பதிவு செய்துள்ளன.
- 2009, மே 18இல் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசன், சமாதானப் பிரிவுத் துறை பொறுப்பாளர் புலித் தேவன் தலைமையில் 300 பொது மக்களுடன் வெள்ளைக் கொடியுடன் இராணுவத்திடம் சரணடைய வந்தபோது, சர்வதேச நெறிமுறை சட்டங்களுக்கு எதிராக இராணுவம் சுட்டுக் கொன்றது. இது ஒழுங்கு மீறிய செயல் என்று வெளிப்படையாக அப்போது இராணுவ தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவே ஒப்புக் கொண்டுள்ளார். (அந்த சரத் பொன்சேகா, இப்போது, மீண்டும் இராணுவத் தளபதியாகி விட்டார்) சுட்டுக் கொல்லப்பட்டது ஆயுதம் தாங்கிய இராணுவப் போராளிக் குழுவின் – **அரசியல் பிரிவுத் தலைவர்** – என்பது சர்வதேச முக்கியத்துவம் கொண்டதாகும்.
- 2009 மே 9ஆம் தேதி அன்று மட்டும் ‘போரில்லாத’ பகுதியில் திரண்ட மக்கள் மீது இராணுவம் ஆர்ட்டிலரி தாக்குதல் நடத்தியதில் கொல்லப்பட்ட மக்கள் 1000 பேர்; படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் 1,122 பேர்; இறந்து போன 1000 பேரில் 378 உடல்கள் மட்டுமே - மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டன. எஞ்சிய உடல்களை இராணுவம் சாலை ஓரங்களிலும், கடற்கரையிலும் வீசி எறிந்தது. அதே நாள் மாலையில் கொல்லப்பட்ட தமிழர்கள் எண்ணிக்கை மட்டும் 3200. இவ்வளவு கொடூரமாக இராணுவம் வெறி பிடித்ததற்கு காரணம், அன்று புலிகள் தற்காப்புக்காக எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள் என்பதுதான். அய்.நா.வின் புனர் வாழ்வுக்கான கள அதிகாரி லாரன்ஸ் கிறிஸ்ட் - இந்தப் படுகொலைகளை உறுதிப்படுத்துகிறார்.
- அடுத்த நாள் மே 10 அன்று மருத்துவமனைக்கு சடலமாகக் கொண்டு வரப்பட்ட தமிழர்கள் எண்ணிக்கை 391. படுகாயங்களுடன் கொண்டு வரப்பட்டவர்கள் 1300 பேர். மே 14 அன்று கொல்லப்பட்ட தமிழர்கள் 1700 பேர். படுகாயமடைந்தவர்கள் 3000. அன்றைய நாளில் மட்டும் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் 150 பேர்.
- 2008 அக்டோபரிலிருந்து 2009 மே மாதம் வரை 8 மாதங்களில் கொல்லப்பட்ட தமிழர்கள் 70 ஆயிரத்திலிருந்து ஒன்றரை இலட்சம் வரை இருக்கும் என்கிறது, அய்.நா.வின் மனித சேவைக் குழுக்கள். 1 இலட்சத்து 20 ஆயிரத்திலிருந்து 1 இலட்சத்து 80 ஆயிரம் வரை இருக்கும் என்று மதிப்பிடுகிறார், அய்.நா.வின் உள்ளக ஒருங்கிணைப்பு அதிகாரி (U.N. Resident Co-ordinator). கொல்லப்பட்ட தமிழர்கள் எண்ணிக்கை 2 இலட்சத்து 10 ஆயிரம் என்கிறது, அய்.நா.வின் உலக உணவு திட்ட நிறுவனம். முல்லைத் தீவு மாவட்ட அரசு அதிகாரி தரும் மதிப்பீடு 3 இலட்சத்து 5 ஆயிரம். மன்னார் பகுதி ஆயர், அரசு ஆவணங்களின் பதிவுகளை ஆதாரமாகக் காட்டி, காணாமல் போனவர்கள் 1,46,679 பேர் என்று, அரசு ஆணையத்தின் முன் பதிவு செய்த குற்றச்சாட்டுக்கு, இதுவரை அரசு தரப்பிலிருந்து எந்த மறுப்பும் வரவில்லை.

இப்படி, போர்க் குற்றம், மாந்த நேயத்துக்கு எதிரான குற்றம், இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி நிற்கிறது இலங்கை அரசு. ஆதாரங்கள் ஆவணங்களாக குவிந்து கிடக்கின்றன.

மக்கள் மன்றத்தில் இந்த உண்மைகளை உரக்கச் சொல்வோம்!

இனப்படுகொலை இலங்கைக்கு துணை போகாதே என்று – இந்திய அரசை வலியுறுத்திப் போராடுவோம்!

அய்.நா.வே. இலங்கையை சர்வதேசக் கூண்டில் ஏற்று!

இந்திய அரசே, இனப்படுகொலை அரசை காப்பாற்றத் துடிக்காதே!

ஒற்றைக் குரலாக ஓங்கி ஒலிப்போம்!

# மயிலாடுதுறையில் ஜெயசீலன்–இரம்யா மணவிழா

மயிலாடுதுறை திராவிடர் விடுதலைக் கழக நகர செயலாளர் தமிழ்வேலனின் சகோதரர் ப.ஜெயசீலன்-தி.இரம்யா ஆகியோர் வாழ்க்கை இணை ஏற்பு நிகழ்வு, மயிலாடுதுறை இரத்னா திருமண கூடத்தில் 8.5.2015 அன்று காலை 10 மணியளவில் சிறப்புடன் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மணவிழாவை நடத்தி வைத்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராஜேந்திரன், வழக்கறிஞர் ரஜினிகாந்த் வாழ்த்துரை வழங்கினர். கழக ஏட்டுக்கு மணமக்கள் சார்பில் ரூ.1000 நன்கொடை வழங்கப்பட்டது.

# பார்ப்பன பன்னாட்டுச் சுரண்டல்

# அம்பலப்படுத்துகிறார், அருந்ததிராய்

சென்னையில், மே 2ஆம் தேதி விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்திய விருது வழங்கும் விழாவில், 'அம்பேத்கர் சுடர்' விருதைப் பெற்றுக் கொண்டு அவர் ஆற்றிய உரை: (சென்ற இதழ் தொடர்ச்சி)

1960களிலும் 70களிலும் உங்கள் கட்சியின் முன்னோடியான 'தலித் பாந்தர்கள்' மற்றும் நக்சலைட்டுகள் போன்ற எதிர்ப்பியக்கங்கள் நீதி பற்றி புரட்சி பற்றி பேசினார்கள். அவர்கள் நில சீர்திருத்தங்களைக் கோரினார்கள். உழுபவருக்கே நிலம் என்பது அவர்களது முழக்கமாயிருந்தது. இன்று நீதி என்னும் சிந்தனை நமது மனங்களிலிருந்து அழிக்கப்பட்டுவிட்டது அதற்கு பதில் மிக குறுகிய கருத்தாக்கமான மனித உரிமை வந்தமர்ந்திருக்கிறது. கொஞ்ச நஞ்ச நில சீர்திருத்தங்களும் இப்போது திரும்பப் பெறப்படுகின்றன. மாவோயிஸ்டுகள் போல அதி தீவிர புரட்சிக் குழுக்கள் கூட மக்களிடம் பெரும்பாலும் ஆதிவாசிகளிடம் இருக்கும் கொஞ்ச நஞ்ச நிலமும் தனியார் நிறுவனங்களுக்கு போய்விட கூடாது என்றே காடுகளில் போராட வேண்டியிருக்கிறது. இன்று தலித் மக்களில் 70 சதவிகிதம் பேர் நிலமற்றவர்களாக இருக்கிறார்கள். பஞ்சாப், பீகார், ஹரியானா, கேரளா போன்ற மாநிலங்களில் இது 90 சதவிகிதமாக இருக்கிறது. நிலமற்ற இலட்சக்கணக்கான இந்த மக்கள் இன்று நாட்டில் நடக்கும் முற்போக்கான தீவிர விவாதங்களில்கூட பங்கேற்க முடிவதில்லை.

**பார்ப்பன-பனியா சுரண்டல்**

இன்று நமது நாட்டை தம் வசமாக்கியிருக்கும் நிறுவனங்கள் யாருக்கு சொந்தமானவை? நிலம் மட்டுமல்லாமல் காடுகள், மலைகள், ஆறுகள், நீர், மின்சார ஆற்றல் எல்லாம் அவர்களுக்கு சொந்தமாகி யிருக்கிறது. கோடீஸ்வர தொழிலதிபர்களான - முகேஷ் அம்பானி (ரிலையன்ஸ் நிறுவனம்), லக்ஷ்மி மிட்டல் (ஏர்செலார் மிட்டல்) திலீப் சங்கவி (சன் பார்சமிடிக்கல் குழுமம்), ரூயா சகோதரர்கள் (ரூயா குழுமம்) கே.எம். பிர்லா (ஆதித்யா பிர்லா குழுமம்), சாவித்ரி தேவி ஜிண்டால் (ஜிண்டால் குழுமம்), கௌதம் அதானி (அதானி குழுமம்) சுனில் மிட்டல் (பாரதி ஏர்டெல்) ஆகியோர்தான் துறைமுகங்களை, சுரங்கங்களை, எண்ணை வயல்களை, எரிவாயு வயல்களை, கப்பல் நிறுவனங்களை, மருத்துவ நிறுவனங்களை, தொலைபேசி நிறுவனங்களை, பெட்ரொகெமிக்கல் ஆலைகளை, அலுமினிய ஆலைகளை, செல்பேசி நிறுவனங்களை, தொலைக் காட்சிகளை, காய்கறிக் கடைகளை, பள்ளிக் கூடங்களை, சினிமா கம்பெனிகளை, ஸ்டெம் செல் முறைகளை, மின்சார அமைப்புகளை, சிறப்பு பொருளாதார நிறுவனங்களை சொந்தமாக வைத்து நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஒன்று பார்ப்பனர்களாகவோ அல்லது பனியாக்களாகவோ இருக்கிறார்கள்.

மிகக் குறைந்த அளவிலேயே இருக்கும் சிறு பான்மையினரான பார்ப்பனர்களும் பனியாக்களும் எப்படி தங்களது சலுகைகளை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள் என்கிற கேள்விக்கு மீண்டும் வருவோம். முரட்டுத்தனமாக அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

பெரும்பாலான பனியா குடும்ப நிறுவனங்கள் தான் இன்று பல ஊடக நிறுவனங்களுக்கு சொந்தக் காரர்களாகவும் அவற்றைக் கட்டுப்படுத்துபவர் களாகவும் இருக்கின்றன. எது செய்தி எது செய்தி யில்லை என்பதை அவர்களே தீர்மானிக்கிறார்கள். ஊடகத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், ஒரு தேசத்தின் சிந்தனையைக் கட்டுப்படுத்தி உருவாக்க வும் அவர்கள் முயற்சிக்கிறார்கள். நான்கு மிக முக்கியமான ஆங்கில நாளிதழ்களில் மூன்றை நடத்துவது வைசியர்கள். நான்காவது பார்ப்பன குடும்ப நிறுவனம். (டைம்ஸ் ஆஃப் இந்தியா, டைம்ஸ் நௌ போன்ற ஊடகங்களை நடத்தும் நிறுவனமான பெனட் கோல்மேன் நிறுவனம் ஒரு ஜெயின் குடும்பத்தால் (பனியா) நடத்தப்படுகிறது) இந்துஸ்தான் டைம்ஸை நடத்துவது பார்டியா (மார்வாரி பனியாக்கள்). இந்தியன் எக்ஸ்பிரசை நடத்துவதும் மார்வாரி பனியாக்களான கோயங்கா. 'தி இந்து'வை நடத்துவது பார்ப்பன குடும்ப நிறுவனம். இந்தியாவில் மிக அதிகமாக விற்பனை யாகும் 'தைனிக் ஜாக்ரன்' இந்தி நாளிதழை நடத்துவது (கிட்டத்தட்ட 55 மில்லியன் சர்க்குலேஷன்) கான்பூர் பனியாக்களான குப்தாக்கள். 17.5 மில்லியன் சர்குலேஷன் கொண்ட தைனிக் பாஸ்கர் என்கிற செல்வாக்கான ஊடகத்தை நடத்துவதும் அகர்வால்கள் என்கிற பனியாக்கள்தான். 27 முக்கியமான தேசிய மற்றும் பிராந்திய தொலைக் காட்சிகளில் அதிகாரம் செலுத்துமளவுக்கு பங்குகளை வைத்துக்கொண்டிருக்கிறது முகேஷ் அம்பானி என்கிற குஜராத்தி பனியா நடத்தும் ரிலையன்ஸ் நிர்வாகம். இந்தியாவின் மிகப் பெரிய தொலைக்காட்சி நிறுவனங்களில் ஒன்றான 'ஸீ' தொலைக்காட்சியை நடத்துவதும் சுபாஷ் சந்திரா என்கிற பனியா.

பெரும்பாலான ஊடகங்கள் பார்ப்பனர்கள், பனியாக்கள் அல்லது பிற செல்வாக்கான சாதிகளி லிருந்தே செய்தியாளர்களை பணிக்கு அமர்த்துவதாக தரவுகள் சொல்கின்றன. வெகுஜன ஊடகங்களில் பணிபுரியும் இஸ்லாமிய செய்தியாளர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். தலித்துகளும் ஆதிவாசிகளும் அந்த எல்லைக்குள்ளேயே இல்லை.

இட ஒதுக்கீட்டின் கொள்கையை வேண்டு மென்றே திசைதிருப்பி, நீதித்துறை, அதிகார வர்க்கம், அறிவுத்துறை எல்லாவற்றிலும் இந்த நிலைமையை ஏற்படுத்திவிட்டார்கள். தலித்துகள் மிக அதிக அளவில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இடம், அரசாங்க நகராட்சிகள்தாம். துடைப்பத்தைக் கையில் ஏந்தி பெருக்குபவர்களில் 90 சதவீதம் பேர், வால்மீகி சாதியைச் சேர்ந்தவர்கள். இந்த மிகப்பெரிய வல்லரசில்தான், இன்னமும் பதின்மூன்று லட்சம் பெண்கள் தங்களது தலைகளின் மீது மலக் கூடைகளை சுமந்து வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

**திரைச்சீலைகளை விலக்குவோம்**

ஜனநாயகமும் நவீன தாராள பொருளாதார சந்தையும் சாதியை நவீனமயப்படுத்தியிருப்பதோடு அல்லாமல் அதன் பிடியை மேலும் இறுக்கியிருக் கிறது. இருந்தாலும் இந்தியாவின் மிகச்சிறந்த அறிவுஜீவிகள், வரலாற்றாசிரியர்கள், வளர்ச்சிப் பற்றி ஆராயும் பொருளாதார நிபுணர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அவர்களுடைய எழுத்துகளிலும் ஆய்வுகளிலும் ஒன்று சாதியை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கிறார்கள் அல்லது குறைந்த அளவில் எழுதுகிறார்கள். இது பார்க்காமல் தவிர்ப்பது என்கிற பெரிய திட்டம். திரைச்சீலைகளை விலக்கி இந்த பெரிய ஜனநாயகத்தில் என்ன நடந்து கொண்டிருக் கிறது என்பதை உலகிற்கு காட்ட வேண்டியது நம் கடமை.

அடியில் தேங்கியிருக்கும் சாதி அமைப்பின் இரும்புப்பிடி குறித்து எப்போதாவது வெகுமக்கள் ஊடகங்களும் சிந்தனையாளர்களும் உரக்கப் பேசுகிறார்கள் என்றால் அதுவும் மிக வித்தியாசமான வகையில் என்றால் அது தேர்தல்காலகட்டத்தில்தான். அப்போதுதான் எல்லா அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் தலித் மற்றும் இடைச்சாதிகளின் வாக்குகளுக்கு போட்டியிடுகிறார்கள். தேர்தல் முடிந்தவுடன் சாதி பிரச்னை மீண்டும் அறிவுலக முட்டாள்தனங்களுக்கு அடியில் போய் தேங்கிக் கொள்கிறது. அம்பேத்கர் சாதியை எதிர்த்ததால் இயல்பாகவே அவர் இட ஒதுக்கீடு கொள்கைக்கு எதிரானவர் என்று மிக சீரியசாக ஒரு வெகுஜன ஊடகவியலாளர் வாதிட்டு நான் கேட்டிருக்கிறேன்.

பொருளாதார ஊழல்கள் குறித்து பேசுவதும் அவற்றை பிரச்னையாக்குவதும் இப்போதெல்லாம் மிக நாகரீகமான ஒன்று. ஆனால் இந்தப் பிரச்னை



குறித்து பெரும் கவலை கொள்ளும் பலர் அறிவுலக நேர்மையின்மை பற்றி கவலை கொள்வதில்லை. இந்த நாட்டில் பலர் தொடர்ந்து கடைபிடிக்கும் நினைத்துப் பார்க்க முடியாத தார்மீக ஊழல் பற்றி கவலைப்படுவதில்லை. நீதி, அடையாளம், சமூகம் பற்றி புத்தகங்களும் ஆய்வுகளும் எழுதும் மிகச்சிறந்த அறிவுஜீவிகளும் வரலாற்றாசிரியர்களும், மிகக் குரூரமான, ஒடுக்குமுறையை ஏவும் சமூகப் படிநிலையான சாதி என்கிற கேள்வியை முழுவதும் புறக்கணிக்கிறார்கள்.

**அறிவுலக நேர்மையின்மை**

வரலாற்றில் மிக மோசமான விந்தைகளில் ஒன்று என்னவென்றால் இந்த அறிவுலக நேர்மையின்மை தான். சாதி அமைப்பில் நம்பிக்கை கொண்ட, தொழிலாளர்களிடம், பெண்களிடம், ஆப்ரிக்க கறுப்பினத்தவரிடம் தொடர்ந்து மோசமாக நடந்து கொண்ட மோகன்தாஸ் காந்தியை உலகின் மிக உயர்ந்த மகானாகவும், ஏழைகளின் நண்பனாகவும், ஆப்ரிக்க அமெரிக்கர்களின் நாயகனாகவும், நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் ஆகியோர் ஏற்றுக்கொண்ட தலைவராகவும் நமது தேசத்தின் தந்தையாகவும் மாற்றியிருக்கிறது. இப்படிப்பட்ட பொய்களின் மீது நமது நாட்டின் அடித்தளம் எழுப்பப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது.

பாபாசாகேப் அம்பேத்கருக்கு மட்டுமே அதிகாரத்தின் உச்சத்தில் இருந்த போதும் காந்தியை எதிர்க்கும் துணிவும் அறிவுத் திண்மையும் இருந்தது. ஒவ்வொரு பள்ளியிலும் கட்டாயப் பாடமாக்கப் பட்டிருக்க வேண்டிய அம்பேத்கர்-காந்தி விவாதம் மிகத் திறமையாக மழுங்கடிக்கப்பட்டுவிட்டது. இப்போது தாராள அறிவுஜீவிகளும் வரலாற்றிய லாளர்களும் அவர்கள் ஒருசேர பயணித்தவர்கள் என்றும் இடையிடையே நட்புரீதியான முரண்கள் இருந்தன என்றும் முன்னிறுத்த முனைகிறார்கள். இது முழுக்க முழுக்க பொய். அம்பேத்கரின் மரபு இப்படி பொய்மைப்படுத்தப்படுவதை உடனடியாகத் தடுக்க வேண்டியது நமது அவசர கடமையாகும்.

எனது உரையை முடிக்கும் முன்பு நான் சொல்ல விரும்புவதெல்லாம், **சாதிக்கு எதிரான இந்த போராட்டத்தை நாம் தொடர வேண்டுமெனில் பார்ப்பனியத்துக்கும், முதலாளித்துவத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் உள்ள தொடர்பை நாம் தொடர்ச்சியாகவும் அனுபவபூர்வமாகவும் நிறுவ வேண்டும். உலகெங்கிலும் அரசியல் கூட்டணிகளை உருவாக்க வேண்டும்.** வேறு எப்படி தென்னாப்பிரிக்காவில் நிற வெறுப்பு (பெயரளவிலாவது) முடிவுக்கு கொண்டு வரப் பட்டது? பாகுபாட்டின் மிக மோசமான வடிவத்தைப் பின்பற்றி வரும் இந்த சமூகத்தை முழுமையான வெறுப்புணர்வோடு உலகம் பார்க்க வேண்டும். இன்று இந்தியாவுக்கு வெளியே வாழும் பலருக்கு சாதி என்றால் என்னவென்று தெரியாது. அவர்களைப் பொறுத்தவரையில் அது இந்து மதத்தோடு, நாகரீகமான சைவ உணவுப் பழக்கத் தோடு, யோகாவோடு எல்லாவற்றுக்கும் மேலாக காந்தியிசத்தோடு புனிதமான தொடர்புடையது. சாதியை அழிக்கும் பணிக்கு நாம் ஒவ்வொருவரும்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 21.05.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# பூணூலை அறுத்தால்-குண்டர் சட்டமா? நடப்பது-‘மனுதர்ம’ ஆட்சியா?

மனுசாஸ்திரப்படி ‘பிராமணர்கள்’ என்ற பிறவி ஆதிக்கத்தை அடையாளப்படுத்தும் சின்னம் தான் ‘பூணூல்’.

‘பூணூல்’ அணிந்த பார்ப்பனர்கள் இரு பிறப்பாளர்களாம்! தங்களை ‘பிராமணர்’ என்று ‘பூணூல்’ வழியாக அடையாளப் படுத்தி, ஏனைய ‘சூத்திர’ மக்களை அடிமைகள்; விலைக்கு வாங்கப்பட்டவர்கள்; பிராமணர்களின் வைப்பாட்டி மக்கள் என்று அடையாளப்படுத்துகிறார்கள். மனு சாஸ்திரமும் இதையே ஆணி அடித்ததுபோல் கூறுகிறது. இப்படி பெரும்பாலான மக்களை இழிவானவர்களாக சித்தரிக்கும் ‘பூணூல்’ அணிவதையே தடை செய்யப்பட்டிருக்க வேண்டும். அதுதான், இது ஜனநாயக நாடு என்பதற்கான அடையாளம். ஆனால், இந்த இழிவை ஏற்க மறுப்பவர்கள் இங்கே அடக்குமுறை சட்டங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது.

இந்தப் ‘பூணூல்’ போடும் பார்ப்பன இறுமாப்பை மக்களிடம் தொடர்ந்து பரப்பி வருகிறது பெரியார் இயக்கம். அதற்காக எந்தப் பார்ப்பனர் பூணூலையும் அறுத்ததில்லை.

இப்போது திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் இராவணன், கோபி, திவாகர், பிரதீப், நந்தகுமார், பிரபாகரன் ஆகியோர் பார்ப்பனர் பூணூலை அறுத்ததாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு உடன்பாடில்லை என்று ஏற்கெனவே விளக்கியிருக்கிறோம்.

உண்மையில் ‘பூணூலை’ அறுத்திருப்பார்களேயானால் அதற்குரிய சட்டப் பிரிவுகளின் கீழ் காவல்துறை வழக்குத் தொடரட்டும். ஆனால், ஒரு நூலை வெட்டியதற்காக, ஓராண்டு காலம் பிணையில் வெளிவர முடியாத குண்டர் சட்டத்தை ஏவியிருப்பது என்ன நியாயம்?

இந்திய தண்டனைச் சட்டம் என்று ஒன்று இருப்பதையே மறந்துவிட்டு, மனுசாஸ்திரப்படியே தண்டிக்க வேண்டும் என்று காவல்துறை கருதுகிறதா? அப்படியானால் நடப்பது ‘மனு தர்ம’ ஆட்சியா?

வெடிகுண்டு வைப்பவர்கள் மீதுகூட பாயாத குண்டர்சட்டங்கள் பூணூலை வெட்டியதற்காக பாய்கிறது என்றால், பார்ப்பனியம் எவ்வளவு செல்வாக்கோடு, அதிகாரத்தோடு கோலோச்சுகிறது என்பதை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். குண்டர் சட்டத்தை ஏவிய தமிழக அரசை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

# கழகத்தினர் மீது குண்டர் சட்டம் : த.பெ.தி.க. கண்டனம்

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மீது குண்டர் சட்டம் ஏவப்பட்டதைக் கண்டித்து தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் செகதீசன் விடுத்துள்ள அறிக்கை.

“தொலைக்காட்சி நிலையத்தின் மீது வெடிகுண்டு வீசிய இந்து மதவெறியர்கள் மீது சாதாரண வழக்கு. ஆனால், தந்தை பெரியார் படத்தின் மீது காவல்துறை அதிகாரிகள் முன்பே சிறுநீர் கழிப்பது, செருப்பால் அடிப்பது, தீ வைத்து எரிப்பது போன்ற சம்பவங்கள் செய்தவர்கள் மீது தமிழக காவல்துறை சிறு வழக்குகூட பதிவு செய்யவில்லை. பெரியாரைப் பற்றி மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டிய பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த எச்.ராஜா மீது காவல்துறை நடவடிக்கை எடுக்காத காரணத்தால், உணர்ச்சி வசப்பட்ட பெரியாரின் தொண்டர்கள் சிலர் பார்ப்பன அர்ச்சகர் அணிந்திருந்த பூணூலை அறுத்ததற்கு திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மீது மட்டும் குண்டர் சட்டம் போடுவதை வன்மையாக கண்டிக்கிறோம். தமிழ்நாட்டில் நில அபகரிப்பு, மணல் கொள்ளை, பெண்களிடம் நகைக் கொள்ளை, கட்டப் பஞ்சாயத்துக்கள் செய்யும் அரசியல்வாதிகளின் மீது பாயாத குண்டர் சட்டம் பெரியாரின் தொண்டர்கள் மீது பாய்வதா! ஏப்ரல் 14ஆம் தேதி பெரியார் திடலுக்குள் அத்துமீறி நுழைந்து, திராவிடர் கழகத் தோழர்கள் மீது கொலை வெறியோடு தாக்கிய பெட்ரோல் வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்கள் கொண்டுவந்த பாரத் இந்து முன்னணி மீது குண்டர் சட்டம் பாயாதது ஏன்? இந்த தமிழ்நாட்டில் பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள், சிறுபான்மை மக்கள் வாழ்வதற்கு வழியற்ற நாடாக தமிழ்நாடு மாறிக் கொண்டு வருகிறது. தமிழ்நாடு காவல்துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகிறதா! அல்லது காவித்துறை கட்டுப்பாட்டில் இயங்குகிறதா! திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த இராவணன், கோபி, திவாகர், பிரதீப், நந்தக்குமார், பிரபாகரன் போன்ற தோழர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி தமிழக அரசையும், தமிழக காவல்துறையையும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஆனூர் செகதீசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

## வினாக்கள்... விடைகள்...!

- கோட்டு, சூட்டு அணியாமல் வழமையான உடையில் மோடியை வரவேற்ற மாவட்ட ஆட்சித்தலைவருக்கு சத்தீஸ்கர் பா.ஜ.க. அரசு நோட்டீஸ். **–செய்தி**

சட்டையே போடாமல், ‘பூணூல்’ உடம்புடன் மோடியை வரவேற்கும் புரோகிதர்களுக்கும் இதேபோல் ‘நோட்டீஸ்’ அனுப்புவார்களா?

- எனக்கு பத்ம விருது வேண்டாம் என்று உள்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதிவிட்டேன். **– ‘யோகா குரு’ ராம்தேவ்**

அதெல்லாம் ‘பாரத ரத்னா’ விருது உங்களுக்குக் கிடைக்காது; அது காஞ்சி ஜெயேந்திரனுக்குத்தான்.

- அரசு விளம்பரங்களில் குடியரசுத் தலைவர், பிரதமர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோரின் படங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். **– உச்சநீதிமன்றம்**

மக்கள் நினைவுக்கு வராமல் மறந்து போகிறவர்களைத் தானே விளம்பரப்படுத்த வேண்டும்; இதுவும் நியாயம்தான்!

- தமிழக கிராமங்களில் தொடங்கப்பட்ட அண்ணா மறுமலர்ச்சி நூலகங்கள் பூட்டப்பட்டு, மாட்டுத் தொழுவங்களாகி விட்டன. **– ‘தமிழ் இந்து’ செய்தி**

ஊர்தோறும் கோயில் கும்பாபிஷேகம் ‘திவ்யமா’ நடக்கும்போது, இப்படி ‘அபசகுனமாக’ நூலகம் பற்றி எல்லாம் பேசப்படாது!

- மோடி பிறந்த ‘கன்ச்சி’ என்ற ஜாதி குறித்து ‘தூர்தர்ஷன்’ 128 தொடர்களை ஒளிபரப்ப இருக்கிறது. **– செய்தி**

அரசுத் தொலைக்காட்சியை மக்கள் பார்க்க விடாமல் தடுத்தே தீருவோம் என்று உறுதி ஏற்று செயல்படுகிறார்கள், போல!

- வடகொரியாவில் இராணுவ கருத்தரங்கில் தூங்கிய பாதுகாப்பு அமைச்சருக்கு மரணதண்டனை. **–செய்தி**

இப்படி மரணதண்டனைகளை வழங்கினால்தான் நாட்டில் தூக்கத்தைக் குறைக்க முடியும்; அப்போதுதான் தூங்குவதற்கும் மக்கள் பயப்படுவார்கள்.

- கங்கையை சுத்தப்படுத்த ரூ.20,000 கோடி மத்திய அரசு ஒதுக்கீடு.– **செய்தி**

பக்தர்கள் – கங்கையில் மூழ்கி தொலைத்த ‘பாவங்களையும்’ சுத்தப்படுத்தி விடுவீர்களா?

- ஜெயலலிதா விடுதலைக்காக சேலம் வடசென்னிமலை கோயிலில் 1008 தொண்டர்கள் மொட்டை போட்டனர். **– செய்தி**

மொட்டையைத் தொடர்ந்து, அம்மாவுக்கு முடிசூட்ட ‘முடி வளர்க்கும்’ வேண்டுதலை செய்வாங்க போலிருக்கு!

( அருந்ததிராய் உரை.... 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நமது திறமையையும் ஆற்றலையும் முழுமையாக அளிக்க வேண்டும்.

நமக்கு முன்னால் இருக்கும் மிகப்பெரிய சவால் அரசியல் ரீதியான ஒற்றுமையைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் சாதிய வேறுபாடுகளை வலுப்படுத்திவிடாமல் எப்படி சாதியை எதிர்த்துப் போராடுவது என்பதுதான். இது மிகவும் சிக்கலான போராட்டம். தனிமைப்படுவதை ஊக்குவிக்கும், ஒற்றுமைக்கான சாத்தியங்களை உருக்குலைக்கும் சாதி எதிர்ப்புப் போராட்டத்தின் நோக்கத்தையே முறியடிக்கும் அதி தீவிர தோரணைகொண்ட நபர்களை நாம் பார்க்கலாம். இந்த போராட்டத்தில் உங்கள் நண்பர்கள் யார்? உங்கள் எதிரிகள் யார்? என்று கண்டடைவது மிக மிகக் கடினமான ஒரு விஷயம் என்பது என்னைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதைச் செய்ய வேண்டும். அதுதான் பாபாசாகேப் அம்பேத்கரின் மிகப்பெரிய ஆற்றல்களில் ஒன்று.


நாம் ஒரு இணைப்புச் சங்கிலியை உருவாக்கியாகவேண்டும். நிலங்களிலிருந்து, தொழிற்சாலைகளிலிருந்து, குடிசைப்பகுதிகளிலிருந்து, சிறு நகரங்களிலிருந்து, பள்ளி, பல்கலைக் கழகங் களிலிருந்து, பாடசாலைகளிலிருந்து, இலக்கியத்திலிருந்து சினிமாவிலிருந்து எழும் உடைக்கவியலாத சங்கிலியை நாம் உருவாக்க வேண்டும். விழிப்புணர்வு, புரிந்துணர்வு சோர் வடையாத செயல்பாடு என்னும் சங்கிலி அது.

**(தமிழில்: கவிதா முரளீதரன்)**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 22 May 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மே 28, 2015 | புரட்சி 14 | முழக்கம் 20 | விலை: ரூ.3.00


## தில்லை நடராசன் கோயில் கர்ப்பகிரகத்துக்குள் காஞ்சி ஜெயேந்திரன் நுழையத் தடை

தில்லை நடராசன் கோயில் கர்ப்பக்கிரகத்துக்குள் (இது தில்லைக் கோயிலில் சித்சபை என்று அழைக்கப்படுகிறது) காஞ்சி ஜெயேந்திரன் நுழைய அனுமதிக்கக்கூடாது என்று பொது தீட்சதர்கள் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏற்கெனவே பொது தீட்சர் சபை - ஜெயேந்திரன் நுழைவை அனுமதிக்கக் கூடாது என்று எழுத்துப்பூர்வமாக உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், இந்த உத்தரவை மீறி, ஜெயேந்திரன், தன்னுடன் நெருக்கமாக உள்ள சில தீட்சதப் பார்ப்பனர்கள் ஆதரவுடன், “சித் சபைக்குள்” நுழைந்து விட்டார். கடந்த மே 18ஆம் தேதி இரவு 8 மணிக்கு இந்த சம்பவம் நடந்தது. இந்தக் கோயிலில் கடந்த மே முதல் தேதி நடந்த ‘கும்பாபிஷேகத்தை’த் தொடர்ந்து, ‘மண்டலாபிஷேக’ பூஜைகள் நடந்து வருகிறதாம். இதில் பங்கேற்க வந்த காஞ்சிபுரம் ஜெயேந்திரன், குறுக்கு வழியில் ‘சித் சபைக்குள்’ நுழைந்து விட்டார்.

செய்தியறிந்த தீட்சதப் பார்ப்பனர்களில் ஒரு பிரிவினர், அங்கேயே எதிர்ப்பு தெரிவித்தனர். ஜெயேந்திரனை உள்ளே அழைத்துச் சென்ற ஒரு சில தீட்சதப் பார்ப்பனர்களுக்கும் ஏனைய தீட்சதப் பார்ப்பனர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டு, கோயிலுக்குள்ளேயே கைகலப்பு ஏற்பட்டது. பிரச்சினை கடுமையானவுடன் ஜெயேந்திரன், அங்கிருந்து வெளியேறி விட்டார். இதைத் தொடர்ந்து பொது தீட்சதர்களின் அவசரக் கூட்டத்தை அதன் செயலாளர் சர்வேஸ்வர தீட்சதர் அடுத்த நாள் மே 19ஆம் தேதி கூட்டினார். அப்போது ஜெயேந்திரனை பொது தீட்சதர்கள் அனுமதியின்றியும் ஏற்கெனவே எழுத்துப்பூர்வமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறியும் கர்ப்பகிரகத்துக்குள் அழைத்துச் சென்ற சில தீட்சதர்களுக்கு எதிராக கடும் கண்டனம் தெரிவித்ததோடு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஒரு பிரிவினர் வலியுறுத்தினர். ஜெயேந்திரனை கர்ப்பகிரகத்துக்குள் அனுமதித்தற்கு பொது தீட்சதர்களுக்கான அமைப்பின் செயலாளர் சர்வேஸ்வர தீட்சதர் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இனிமேல் வருங்காலத்தில் இந்த தவறு நடக்காது என்று உறுதியளித்தார். அதன் பிறகே பொது தீட்சதர்கள் கலைந்து சென்றனர்.

தில்லை நடராசன் கோயில் பொது தீட்சதர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்து அறநிலையத் துறை இதன் நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. தீட்சதர்களுக்காக சுப்ரமணியசாமி, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வாதாடினார். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியும், இந்த வழக்கில் உறுதியாக எதிர்வழக்காடாமல் தீட்சதப் பார்ப்பனர்களுக்கு மறைமுகமாக ஆதரவு காட்டும் போக்கில் செயல்பட்டது. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆவதற்கு ஆகமங்கள் அனுமதிக்கவில்லை என்று பார்ப்பனர்கள் வாதாடுகிறார்கள். பார்ப்பனர்களிலேயே ஒரு குறிப்பிட்ட பிரிவினரைத் தவிர, ஏனையோர் அனுமதிக்கப்படுவது இல்லை என்றும் நியாயம் பேசுகிறார்கள். இப்போது பொது தீட்சதர்கள் சங்க எதிர்ப்பை மீறி காஞ்சி ஜெயேந்திரன் கருவறைக்குள் ‘குறுக்கு வழியில்’ நுழைகிறார். ஆகம விதிகளை ‘அவாள்கள்’ மட்டும் மீறுவதற்கு அனுமதி உண்டு போலும்.

தமிழ் நாட்டுக் கோயில்களில் அர்ச்சகர் நியமனம் பற்றி ஆராய தமிழக அரசு நியமித்த நீதிபதி மகராசன் குழு பரிந்துரை (1982), பல கோயில்களில் நடக்கும் பூஜை, சடங்குகள் ஆகம விதிகளுக்கு எதிரானதாக இருப்பதைப் பட்டியலிட்டுள்ளது. அதில், தில்லை நடராசன் கோயிலில் தீட்சதப் பார்ப்பனர்கள் வேதங்களைக் கொண்டு நடத்தும் பூஜை முறை ஆகம விதிகளுக்கு எதிரானது என்று சுட்டிக்காட்டியிருக்கிறது. இது குறித்து மகராஜன் குழு பரிந்துரையில் கூறப்பட்டுள்ள பகுதி கீழே தரப்படுகிறது:

“சிதம்பரம் நடராசர் பூசை மகுடாகம பூசை, மகுடாகமமே, தமிழுக்குச் சிறப்புப் பிரிவுகளாகிய இசை நாடகம் இரண்டையும் சிறப்பிக்க வந்த ஆகமம். இந்த இரண்டின் வடிவம் நடராசமூர்த்தி. அதனால் அவருக்கு மகுடாகமம்

(4ஆம் பக்கம்)

### திருவாரூர் நூல் வெளியீட்டு விழாவில் கொளத்தூர் மணி பேச்சு

## அஞ்சா நெஞ்சம் கொண்ட பெரியார் தொண்டர்கள்

*தோழர் கவி தொகுத்துள்ள “மலாயா தமிழ் முன்னோடிகளும் பெரியார் வருகையும்” நூல் வெளியீட்டு விழா 8.5.2015 அன்று திருவாரூர் எத்திராஜ் திருமண மண்டபத்தில் முக்கூடல் அமைப்பின் சார்பில் நடைபெற்றது. நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, முதல் படியை நீதிக்கட்சித் தலைவர் சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் பேரன் மார்டின் செல்வம், டாடாஸ் இரவி, பசு. கவுதமன், த.பரமசிவம், கோவி. லெனின் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். ‘நக்கீரன்’ முதன்மை ஆசிரியர் கோவி. லெனின் திறனாய்வு செய்தார். நூலாசிரியர் கவி ஏற்புரை வழங்கினார்.*

*நூலை வெளியிட்டு கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:*

முக்கூடல் அமைப்பின் சார்பாக நடந்து கொண்டிருக்கின்ற இந்த நிகழ்வில், அருமையான ஒரு நூலை அளித்திருக்கின்ற அன்புக்குரிய தோழர் கவி அவர்களே! இந்நூல் வெளியீட்டில் பங்கேற்றிருக்கிற பெருந்தலைவர் சர்.ஏ.டி. பன்னீர்செல்வம், அய்யா அ.சி. சுப்பய்யா, தமிழவேள் சாரங்கபாணி ஆகியோரின் குடும்ப உறுப்பினர்களே! எனக்கு முன்னால், நண்பர், த. பரமசிவம் விளித்துப் பேசிய பெரியோர்களே! அனைவருக்கும் எனது வணக்கம்.

நம்முடைய கவி அவர்களுடைய நூலை வெளியிட்டு அவருடைய செயல்களை நாம் பாராட்ட கடமைப்பட்டிருக்கின்ற வேளையில், அவருடைய தோல்வி ஒன்றையும் சொல்லிவிட்டு நான் தொடங்க வேண்டும். அந்தத் தோல்விதான் இந்த நூலுக்கு என்னிடம் பெற முயன்ற அணிந்துரை. அவர் எவ்வளவோ முயன்றும் அவரால் பெற முடியவில்லை. அதில் தோல்வியைத்தான் சந்தித்தார் என்பதை சொல்லிவிட்டு, சில செய்திகளை கூற விரும்புகிறேன்.

தொடர்ச்சியாக இந்த நூலில் ஒவ்வொரு நிலையிலும் தொகுக்கும் போதெல்லாம் எனக்கு மின்னஞ்சல் அனுப்பிக் கொண்டே இருந்தார். படித்து மகிழ்ந்தேனே தவிர, அணிந்துரை தர வேண்டும் என்று அப்போது தோன்றவில்லை. அதற்குக் காரணம் என் சோம்பலாகக்கூட இருக்கலாம். ஆனால், இந் நூலைப் பற்றி உங்களிடம் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப் பளித்ததற்கு நன்றி கூறி, நேரம் கடந்து கொண்டிருப்பதால் சில செய்திகளை விரைவாக சொல்லி விட வேண்டும்.



முதலில் இந்த ‘மலாயா தமிழ் முன்னோடிகளும் பெரியார் வருகையும்’ என்ற நூலில் தமிழ் முன்னோடிகளின் சிறப்பையெல்லாம் சொல்லியிருக்கிறார். நான் பொதுவாகத் தோழர்களிடம் சொல்லுவேன். இரண்டு நூல்களைப் பற்றி பெருமையாக சொல்லுவேன். கூட்டங்களுக்கு செல்லும் தோழர்கள், புராணங்களைப் பற்றி அதில் இருக்கிற பொய்மைகளைப் பற்றியெல்லாம் பேசவேண்டும் என்றால் இரண்டு நூல்களைப் படியுங்கள் போதுமென்று சொல்லுவதுண்டு. ஒன்று சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ். அதில் எல்லா புராணங்களையும், எல்லா திருமண முறைகளையும் ஆய்ந்திருப்பார்.

இன்னொன்று, சித்தூரில் ஒரு வழக்கு நடந்திருக்கிறது. 1812இல் அதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மார்க்க சகாய ஆச்சாரி என்பவர் (இவர் விசுவகர்மா பிரிவைச் சார்ந்தவர்) தன் வீட்டுத் திருமணத்தை நடத்திக் கொள்ள முகூர்த்த கால் நட்டபோது அந்த ஊர் பஞ்சாங்கம் குண்டய்யர் தகராறு செய்கிறார். திருமணம் செய்விக்கும் உரிமை தனக்குத்தான் உண்டு; மார்க்க சகாய ஆச்சாரிக்கு அந்த உரிமை கிடையாது என்று, அவர் வீட்டுத் திருமணத்திலேயே போய் தகராறு செய்கிறார். வழக்கு நடக்கிறது. மார்க்க சகாய ஆச்சாரியார், நானும் பிராமணன்தான் என்கிறார். எப்படி பிராமணன்? என்று கேள்வி எழுப்புகின்றனர். பிரம்மா படைப்பைச் செய்கின்றவன். இந்த பிராமணனோ ஒரு படைப்பையும் செய்வதில்லை. ஒரு தொழிலும் செய்வதில்லை. படைப்புத் தொழிலைச் செய்பவர்கள் நாங்கள்தான். நாங்கள்தான் உண்மையான பிராமணர்கள் என்று சொல்லுகிறார். அதைப் பற்றி விவாதம் வருகின்றபோது எனக்கு வேதம் தெரியும் என்கிறார். வேத அறிஞர்களை வைத்து விவாதம் நடத்துகிறார்கள். மார்க்க சகாய ஆச்சாரியாரிடம் வேதங்களிலிருந்து குண்டய்யர் கேள்வி கேட்கிறார். கேள்விகளுக்கெல்லாம் விளக்கம் தருகிறார். ஆனால்,

( 2ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் நோக்கம் நிறைவேறுமா?

மத்திய அரசுக்கான பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை மூன்றாக வகைப்படுத்தும் பரிந்துரையை தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், மத்திய அரசிடம் அளித்துள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஜாதிகளுக்கிடையே முன்னேறிய ஜாதியினர், பின்தங்கிய நிலையில் உள்ள ஜாதியினருக்கான வாய்ப்புகளைப் பறித்து விடுவதால் அனைத்து ஜாதியினருக்கும் சமவாய்ப்பு வழங்குவதே இதன் நோக்கம் என்று தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கூறுகிறது.

ஜாதிகளுக்குள் ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டு, அனைத்துப் பிரிவினருக்கும் சமத்துவம் வழங்குவதே இடஒதுக்கீட்டின் நோக்கம். எனவே தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் நோக்கம் மிகச் சரியானது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. நோக்கம் வரவேற்கப்பட வேண்டியது தான். ஆனால், சமூகநீதிக்கு ‘நந்தி’களாக நிற்கும் உச்சநீதிமன்றங்களும், பார்ப்பன அதிகார வர்க்கமும் உண்மையில் சமத்துவத்தை நோக்கி, இத் திட்டத்தை செயல்படுத்த அனுமதிப்பார்களா என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கிறது.

முதலில், மத்திய அரசுப் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டில் 7 சதவீதம் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன என்று அரசின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. 27 சதவீத இடஒதுக்கீட்டை முழுமையாக நிரப்புவதற்கு கடந்தகால காங்கிரஸ் ஆட்சியிலும் இப்போது நடக்கும் பா.ஜ.க. ஆட்சியிலும் எந்தத் தீவிரமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இரண்டாவதாக - மத்திய அரசுப் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை கூடுதலாகப் பயன்படுத்திக் கொண்ட ஜாதிப் பிரிவுகள் எது? பயன்படுத்தவே இயலாத ஜாதிப் பிரிவுகள் எது? என்பது குறித்து அரசிடம் எந்த தகவல்களும் புள்ளி விவரங்களும் இல்லை. இதற்கு அடிப்படையாக ஜாதியடிப்படையிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று சமூகநீதி இயக்கங்கள் வலியுறுத்தி வரும் கோரிக்கையை கடந்தகால ஆட்சியும் ஏற்கவில்லை. இப்போது நடக்கும் பா.ஜ.க. ஆட்சியும் செவி சாய்க்கவில்லை. எனவே, ஜாதிவாரியாக கணக்கெடுப்பு நடத்தி, அதனடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 27 சதவீதத்தைவிட அதிகமாக இருந்தால், அதற்கேற்ப ஒதுக்கீட்டின் அளவை உயர்த்தி, அதற்குள் வாய்ப்பு மறுக்கப்பட்ட ஜாதிப் பிரிவினருக்கு தனி இடஒதுக்கீடு வழங்க முன் வருவதே சரியான நடவடிக்கை ஆகும்.

மூன்றாவதாக - இப்போது ‘கிரிமிலேயர்’ என்ற பொருளாதார வரம்பு, மத்திய அரசின் இடஒதுக்கீட்டுப் பிரிவில் பின்பற்றப்படுகிறது. இதன் மூலம் பிற்படுத்தப்பட்டோரில் ஒரு பிரிவினர் இடஒதுக்கீட்டிலிருந்து ஒதுக்கப்பட்டுவிட்டனர். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் ‘கிரிமிலேயர்’ அடிப்படையில் இடஒதுக்கீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு, அதற்குத் தகுதியானவர்கள் கிடைக்காத நிலை வந்தால், ‘கிரிமிலேயரிலிருந்து’ விலக்கம் செய்து, பிற்படுத்தப்பட்டோருக்கு வாய்ப்பளிக்கும் முறை குறித்து மத்திய அரசு பரிசீலிக்கலாம்.

கார்ப்பரேட் நிறுவனங்களின் தனியார் துறையில் சமூகநீதி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு கிடக்கிறது. இது குறித்து, பரிசீலிப்பதாக அய்க்கிய முற்போக்குக் கூட்டணியின் முதல் அய்ந்தாண்டு ஆட்சி மக்களுக்கு தந்த வாக்குறுதி காற்றில் பறந்து போய்விட்டது.

சமூக-பொருளாதார அரசியலில் பார்ப்பனர்களுக்கு அடுத்த நிலையில் ஆதிக்கவாதிகளாக உள்ள ஜாட் பிரிவினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் ‘பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்’ சேர்க்கவில்லை. ஆனால், அவர்களின் வாக்கு வங்கியைக் குறி வைத்து பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் கருத்துகளைப் புறந்தள்ளி, மன்மோகன்சிங் ஆட்சி பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்தது. மோடி ஆட்சியும் ‘ஜாட்’ பிரிவினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கே உச்சநீதிமன்றத்தில் ஆதரவு தெரிவித்தது. ஆனால், உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை. எனவே, சமூகநீதிக்காகவும், சமத்துவத்துக்குமான இடஒதுக்கீட்டை வாக்குவங்கி அரசியலுக்குப் பயன்படுத்தவே தேர்தல் அரசியல் கட்சிகள் பயன்படுத்த முயற்சிக்கின்றன.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் செழுமையாக்கப்பட வேண்டும். அதில் அடங்கியுள்ள அனைத்து ஜாதியினருக்கும் சமத்துவம் கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் முழுமையான நியாயம் உண்டு. குறிப்பாக இடஒதுக்கீட்டில் முன்னணியில் உள்ள தமிழகத்தில் இந்த மாற்றங்கள் தேவைப்படுகிறது.

ஆனால், பிற்படுத்தப்பட்டோரின் 27 சதவீத ஒதுக்கீட்டில் பாதியளவைக் கூட நிரப்பாமல் 120 நாடாளுமன்றத் துறை செயலாளர்களில் ஒரு தாழ்த்தப்பட்டவரையோ, பிற்படுத்தப்பட்டவரையோ நுழைய விடாமல், தடுப்புச் சுவர் எழுப்பிக் கொண்டுள்ள மத்திய ஆட்சிகளிடம் பிற்படுத்தப்பட்ட பட்டியல் பிரிவினரையே மூன்றாகப் பிரித்து, சமத்துவம் வழங்கும் கோரிக்கையை முன் வைப்பதில் என்ன பயன் கிடைத்துவிடப் போகிறது?

இதை ஒரு வாய்ப்பாக்கிக் கொண்டு, மற்றொரு பொருளாதார அளவுகோலைத் திணித்து, சமூகநீதியையே புதை குழிக்கு அனுப்பி விடுவார்களோ என்ற சந்தேகம்தான் மேலோங்குகிறது.

# பெரியார் மலேயா வருகைக்கு பார்ப்பனர் காட்டிய எதிர்ப்பு

**(கொளத்தூர் மணி உரை... முதல் பக்கத் தொடர்ச்சி)**

இவர் கேள்வி கேட்கும்போது குண்டய்யர் அமைதியாக இருந்து விடுகிறார். அவர்கள் அறிக்கை தருகிறார்கள், மார்க்க சகாய ஆச்சாரி வேதம் முழுதும் அறிந்தவர் என்று!

மார்க்க சகாய ஆச்சாரி திருமணம் நடத்திக் கொள்ளலாம் என்று தீர்ப்பும் வந்துவிடுகிறது. அப்போதும் அங்கே போய் குண்டய்யர் தகராறு செய்கிறார். பி.ஜே.பி.க்காரன் ரவுடிகளையெல்லாம் கட்சியில் வைத்திருப்பதுமாதிரி, குண்டய்யர் ரவுடிகளை கூட்டிக் கொண்டு போய் கலாட்டா செய்கிறார். அதற்கு வழக்கும் நடந்து, 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. 1813இல் வழக்கு நடந்துள்ளது. வழக்குச் செலவு 96 ரூபாய்தான். அபராதம் 500 ரூபாய் போட்டிருக்கிறார்கள். அந்த விவாதத்தை ஒரு நூலாகப் போட்டிருக்கிறார்கள்.

நாம் இன்று எல்லா மேடைகளிலும் பேசுகின்ற அந்த வேதங்களை, புராணங்களை, சாஸ்திரங்களை சுக்குநூறாகக் கிழித்துள்ள நூல், அ.சி.சுப்பையா எழுதிய ‘சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ்’ என்ற நூல். அ.சி. சுப்பையாவின் வழித் தோன்றல்கள் எல்லாம் இங்கு வந்திருக்கிறார்கள். அவர் இங்கிருந்து மலேசியா போய் விவேகானந்தர் சங்கம் வைத்திருக்கிறார். அகமுடையார் சங்கம் வைத்திருக்கிறார். ஆதி திராவிட சங்கம் உருவாக்கி அதையும் நடத்தியிருக்கிறார். மக்கள் உரிமை பெற முடியாத உரிமையிழந்த மக்களை உரிமை கோருவதற்கு சங்கம் நடத்தி பெரியார் இயக்கத்திற்கு வந்துள்ளார். பெரியார் தோன்றி இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பிறந்தவர்தான்.

அதேபோல் தான், தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களும்! எப்படி அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாக பெரியார் இயக்கத்துக்காரர்கள் இருந்தார்கள் என்பதற்கு இரண்டு எடுத்துக் காட்டுக்களைச் சொல்லலாம். ஒன்று அகம்பாவத்தோடு ஆட்சியில் அமர்ந்திருந்த இராஜாஜி, இந்தி போராட்டம் வந்தபோது, “இந்தியை யார் எதிர்க்கிறார்கள். இரண்டு பேர் எதிர்க்கிறார்கள். ஒரு தமிழ்ப்புலவர் சோமசுந்தர பாரதி; ஒரு நாஸ்திகர் இராமசாமி நாயக்கர். வேறு யார் எதிர்க்கிறார்கள்?” என்று இராஜாஜி கேட்டபோது, சட்டமன்றத்தில் எழுந்து சர். ஏ.டி. பன்னீர்செல்வம் பதில் சொன்னார். “எதிர்ப்பவர்கள் இரண்டு பேர்தான்; ஆதரிப்பவர் நீங்கள் ஒருவர் தான்.”

அதேபோலத்தான் அய்யா சாரங்கபாணி வாழ்க்கையில் ஒரு சம்பவம். பெரியார் வருகையைப் பற்றிய அறிவிப்பு வந்தவுடன் அங்கு ஒரு பார்ப்பனர். பார்த்தசாரதி என்ற அய்யங்கார், தனது வேலையைத் தொடங்கி விடுகிறார். ‘தமிழ்நேசன்’ என்ற ஏட்டின் ஆசிரியர் அந்தப் பார்ப்பனர். அவர் ஊர் ஊராகப் போய் பெரியாருக்கு எதிராக பரப்புரை செய்கிறார். இவர் (பெரியார்) வந்தால் பெரும் கலவரம் ஏற்படும் என்றெல்லாம் பேசுகிறார்.

ஒருமுறை நிகழ்ச்சிக்கு போய்விட்டு திரும்பினவுடனே அய்யா சாரங்கபாணி, “நான் அலுவலகத்துக்குப் போய் விட்டு வந்துவிடுகிறேன்” என்கிறார். எந்த அலுவலகத்துக்கு அய்யா? என்கிறார்கள். தமிழ்நேசன் அலுவலகத்துக்கு சென்று வரலாம் என்று சொல்கிறார். இரண்டு பேரும் அவ்வளவு கடுமையான எதிரிகளாக இருக்கிறார்கள். அவர் போய் நுழைந்தவுடனே அதிர்ச்சி. அந்த செய்தியாளர் எழுதுகிறார், “வழக்கமான கருப்புக் கரைப் போட்ட வெள்ளை வேட்டி, வெள்ளை ஜிப்பாவுடன் உள்ளே நுழைந்ததைப் பார்த்தவுடன் அவர்களுக்கு அதிர்ச்சி. என்னடா இவன் நம்ம அலுவலகத்துக்குள்ளேயே வருகிறான்”. அப்போது அவர் எழுதியதை அப்படியே சொல்லுகிறேன்.

“அப்போது தமிழ்நேசனின் ஆசிரியராக இருந்தவர் பார்த்தசாரதி அய்யங்கார். தமிழவேள், அவரைப் பின் தொடர்ந்து சென்ற அவரது சகாக்களான எங்களையும் எதிர்பாராத வகையில் தமிழ்நேசன் காரியாலயத்தில் திடீரென கண்டதும், அய்யங்கார், திக்பிரமையால் செயலற்றவராகத் திகைத்துப் போய் அப்படியே நின்று விட்டார். சற்று நேரத்தில் தம்மைச் சமாளித்துக் கொண்டு, எங்களைக் கேவலமாகவும், இழிவாகவும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் திட்டி, ‘தமிழ் முரசி’ல் எழுதிவிட்டு, எங்கள் காரியாலயத்துக்கே முன்னறிவிப்பின்றி வந்து விட்டீர்களே! உங்களுக்கு எவ்வளவு துணிச்சல்” என்று வியப்பு மேலிடக் கூறினார்.

அதற்குத் தமிழவேள், சிரித்துக் கொண்டே, “நாங்கள் பார்ப்பனர்களை எந்தச் சூழ்நிலையிலும் திட்டுவதில்லை; திட்டப் போவதுமில்லை. ஆனால், பார்ப்பனீயத்தையே எதிர்க்கிறோம். மனத்தில் உள்ள களங்கத்தையும், வெறுப்பையும் அப்புறம் எடுத்து வைத்துவிட்டு தூய மனத்தோடு எங்கள் எழுத்தைப் படித்துப் பாருங்கள். அப்போது நான் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை என்பது புலனாகும் என்று ஒரு போடு போட்டார்” என்று எழுதியிருக்கிறார்கள்.

தோழர் கவி, பல ஆவணங்களைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார். அதன் வழியாக அவர் செய்த ஆய்வு; அதில் திருவாரூரைச் சுற்றி இருக்கிற இரு பெரும் தலைவர்கள்; அவர்கள் அங்கு ஆற்றிய பணி. மலேயாவுக்கு இரண்டு முறை மட்டுமே பெரியார் சென்றிருக்கிறார். ஒரு முறை 1929இல், இரண்டாவது முறை 1954இல். 1954இல் பர்மாவில் புத்தர் மாநாட்டிற்கு உரையாற்ற, பெரியாரும் அம்பேத்கரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். போகிறார்கள். மாநாட்டை முடித்து விட்டு அப்படியே மலேயா போகிறார் பெரியார். அந்த வாய்ப்பில் தான் இரண்டாவது பயணம் நிகழ்கிறது.

அந்தப் பயணத்தின்போது அவர் ஆற்றிய உரைகள் எல்லாம் இந்தத் தொகுப்பில் வருகிறது. இந்த நூலின் ஊடாக பல செய்திகளைப் பார்க்கிறோம். இது ஓர் ஆவணத் தொகுப்பு. நாம் ஆணவங்களை ஆவணப்படுத்துவதில்லை என்பது நமக்குள்ள பெரும் குறைதான். பழைய இதழ்களெல்லாம் இப்போது இருப்பதில்லை.

(தொடரும்)

# இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்து!

*இலங்கையின் அத்துமீறல்கள் குறித்து – உள் நாட்டு விசாரணை நடத்தப் போவதாக அதிபர் சிறிபாலசேனா அறிவித்திருக்கிறார். இது உலக நாடுகளை ஏமாற்றும் 'கபட நாடகம்'.*

*இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்து!*

*ஈழத் தமிழர்களிடமும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடமும் அவர்களின் அரசியல் கோரிக்கையை தீர்மானிக்க வாக்கெடுப்பு நடத்து –*

*இந்த இரண்டு முழக்கங்கள் அய்.நா.வை நோக்கி உலகத் தமிழர்களின் ஒருமித்த குரலாக ஒலிக்கிறது.*

*இலங்கை ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழர்கள் இணைந்து வாழ முடியாது – ஏன்?*

- சிங்கள - புத்த மெஜாரிட்டி மக்களுக்கான சிறீலங்கா அரசு தமிழர்கள் மீதான இனப்படு கொலைகளுக்கான திட்டங்களை 1948ஆம் ஆண்டு முதலே தொடங்கி படிப்படியாக 60 ஆண்டுகளாக நிகழ்த்தி வருகிறது. அந்த இனப்படுகொலை 2009இல் முள்ளிவாய்க்காலில் முடித்து வைத்து, அதன் வெற்றி விழாவைக் கொண்டாடியிருக்கிறது.
- 60 ஆண்டுகாலங்களில் அங்கே ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. இப்போதும் இராஜபக்சே போய், சிறிபாலசேனா அதிபராகியிருக்கிறார். அங்கே தமிழர்களுக்கு உரிமைக் காற்று வீசத் தொடங்கிவிட்டதாக இந்தியாவும் பார்ப்பன ஊடகங்களும் ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி வருகின்றன. சிறீபாலசேனா யார்? அவர்தான் முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்த காலத்தில் 4 மாதங்கள் தற்காலிக பாதுகாப்புத் துறை அமைச்சராக பொறுப்பேற்று இனப்படு கொலைகளை வழிநடத்தியவர்.
- அந்த இனப்படுகொலைகளை கட்டவிழ்த்து விட்ட அதே இராணுவ அதிகாரிகள்தான் இப்போதும் பதவியில் இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் அழித்தொழிக்க சபதமேற்று செயல்பட்ட இராணுவ தளபதி சரத் பொன்சேகா மீண்டும் இராணுவ அதிகாரியாகி விட்டார். (அதிகாரப் போட்டியில் இடையில் சிலகாலம் இராஜபக்சேயுடன் முரண்பட்டு நின்றார்; அவ்வளவுதான்)
- விசாரணையின்றி - தமிழர்களை இழுத்துப்போய் சித்திரவதை செய்வதற்கும், காலவரம்பின்றி சிறையில் அடைப்பதற்கும் காரணமான 'பயங்கரவாத தடுப்புச் சட்டம்', இப்போதும் நீக்கப்படாமல், அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. அதனால்தான், "சிறீபால சிவசேனா தமிழர்களின் நம்பிக்கையைப் பெற முடியாது" என்று சர்வதேசப் புகழ் வாய்ந்த 'எக்னாமிக்ஸ்' பத்திரிகை (ஜன.3, 2015) எழுதுகிறது.
- ஆட்சி (Government) என்பது வேறு; அரசு (State) என்பது வேறு; ஆட்சிகள் மாறலாம்; ஆனால், அரசு நிலையானது. அரசு என்றால், அதில் நாடாளுமன்றம், நீதிமன்றம், நிர்வாக அமைப்பு, இராணுவம் போன்றவை அடங்கும். ஆட்சிகள் மாறினாலும், இந்த அரசு நிறுவனங்கள் அப்படியே நீடிக்கும். இலங்கையின் 'அரசு நிறுவனங்களே' தமிழர்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்டவை. இதுவே, தமிழர்களின் அழுத்தமான கருத்து, "ஒரு அரசு தனது குடி மக்களின் மீதான உரிமைகள் மீறப்படும்போது அவர்களை பாதுகாக்கும் கடமையில் தவறு இழைத்து விட்டோம் என்று ஒப்புக் கொள்ளும் போதுதான் அது 'அரசு' என்பதற்கான அடையாளமாக இருக்க முடியும் அப்படி ஒப்புக் கொள்ளாத அரசு அரசுக்குரிய வரையறைக்குள் வர முடியாது" என்று கூறுகிறது - அய்.நா. பொதுச் செயலாளர் பான்கி மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை (மார்ச் 31, 2011).
- மற்றொரு அரசு நிறுவனமான நீதித்துறையின் கதை என்ன? சிங்கள அரசியல் தலைவர்களின் 'மந்திரக்கோலுக்கு' அடங்கிக் கிடப்பவையே அந்நாட்டு நீதிமன்றங்கள். 1983ஆம் ஆண்டில் வெளிக்கடை சிறையில் தமிழர்கள் கொல்லப் பட்டபோதும், தமிழர்கள் பல்வேறு பகுதிகளில் வெட்டி சாய்க்கப்பட்ட போதும், அ ந்நாட்டின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்தவரே ஒரு தமிழர்தான். தமிழர்களை கூட்டம் கூட்டமாக படுகொலை செய்த சிங்களர் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழர்களுக்கு எதிரான செயல்பாடுகளானாலும் விசாரணை ஆணையங்கள் ஆனாலும் எதிலும் நீதித் துறை, சிங்களர்களின் நீதித் துறையாகவே செயல்பட்டு வருகிறது. "சர்வதேச அழுத்தங்களினால் இலங்கை அரசு நியமித்த கண்துடைப்பு விசாரணை ஆணையங்கள் இதுவரை எந்த ஒரு சிங்கள குற்றவாளியையும் தண்டித்ததே இல்லை" என சுட்டிக்காட்டுகிறது. 'ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்' அறிக்கை (11 ஜூன், 2009).
- இராஜபக்சே ஆட்சியிலிருந்தபோது இலங்கை இராணுவத்தின் குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணைக் குழுவுக்கு அனுமதியளிப்பதாக ஒரு நாடகம் ஆடினார். அப்போது இந்தியாவின் உச்சநீதிமன்ற நீதிபதி பகவதி தலைமையில் சர்வதேச சட்ட நிபுணர்குழு ஒன்று இலங்கையில் விசாரணைக்குச் சென்றது. அந்நாட்டு நீதிமன்றமோ, இராணுவமோ விசாரணைக்கு எந்த ஒத்துழைப்பும் தராததால் இலங்கை அரசு மீது கடும் குற்றங்களை சுமத்தி அறிக்கை அளித்து விட்டு, குழுவினர் பதவி விலகினர் (மார்ச், 2008).

*"இலங்கையின் நீதித்துறையின் கடந்தகால செயல்பாடுகள் தற்போதைய நீதித் துறையின் செயல்பாட்டு முறைகளை கூர்ந்து பரிசீலிக்கும் போது, தற்போதைய அரசியல் சூழலில் நீதியை வழங்கும் என்ற நம்பிக்கை இல்லை" என்று அய்.நா. பொதுச் செயலாளர்நியமித்த நிபுணர் குழு அறிக்கை கூறுகிறது (மார்ச் 31, 2011).*

*போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைகளை விசாரிப்பதற்கு இலங்கையில் எந்த சட்டமும் இல்லை. எனவே, இலங்கையின் உள்நாட்டு விசாரணைகளை ஏற்க முடியாது.*

*எனவேதான் கூறுகிறோம், "பன்னாட்டு நீதிமன்றத்தில் இலங்கை அரசை நிறுத்து" - இதுவே உலகத் தமிழர்களின் ஒருமித்த முழக்கம்.*

*உள்நாட்டு விசாரணையோ அல்லது சர்வ தேசமும் இலங்கையும் இணைந்து நடத்தும் விசாரணையோ தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத் தராது!*

*(நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமையமைச்சர் உருத்திரகுமார், காணொளி வழியாக சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து – 6.5.2015)*

# பொதுக் கல்வித் திட்டம்: பின்லாந்து வழிகாட்டுகிறது

*அரசே மக்களுக்கு கல்வி வழங்கும் உரிமையையேற்று, 6 வயதுக்குமேல் குழந்தைக் கல்வியை வலியுறுத்தும் நாடு பின்லாந்து. கல்வித் திட்டத்தில் வழிகாட்டும் அந்நாட்டுக் கல்வி முறை எப்படி செயல்படுகிறது?*

பின்லாந்தின் 60 ஆண்டு காலப் பிரம்மாண்ட வளர்ச்சிக்கு முக்கியக் காரணம், ஆட்சியாளர்களும் மக்களும் கல்வியில் செலுத்திய அக்கறையும் ஈடுபாடும்தான். பொருளாதார மறுமலர்ச்சி வேண்டுமெனில், சரியான கல்விமுறைதான் சிறந்த கருவி என்று 1963-ல் அந்நாட்டு நாடாளுமன்றம் தீர் மானித்தது. பல்வேறு கருத்துக்கேட்புக் கூட்டங்கள், விவாதங்களுக்குப் பிறகு நாடு முழுவதும் முழுமையான பொதுக் கல்வித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பல நூறு ஆசிரியர்களைக் கலந்தாலோசித்து உருவானது அத்திட்டம்.

8 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் பகல் நேரங்களில் அந்தந்த நகராட்சிகளின் பாதுகாப்பு மையங்களில் பராமரிக்கப்படுகின்றனர். இம் மையங்களில், மற்ற குழந்தைகளுடன் பழகும் குழந்தைகள் பிறருடன் பழகும் தன்மை, மற்றவர்களின் குணநலன்கள், தேவைகளை அறிந்துகொள்ளுதல் என்று பல்வேறு விஷயங்களை இயல்பாகவே கற்றுக்கொள்கின்றன. இந்த ஐந்து ஆண்டு காலப் பயிற்சி, அக்குழந்தை பின்னர் சுயமாகக் கல்வி கற்க உறுதிசெய்கிறது. இதன் மூலம் பிரகாசமான எதிர்காலம் உறுதிப் படுத்தப்படுகிறது. பின்னர், ஆறு வயதிலிருந்து ஏழு வயது வரை, ஒரு வருடம் மட்டுமே மழலையர் பள்ளி முறை நடைபெறுகிறது. அங்கேயும் வாசித்தல், கணிதம் போன்றவற்றுக்குப் பதிலாக இயற்கை, விலங்குகள், வாழ்க்கைச் சக்கரம் போன்றவைதான் பாடங்களாக உள்ளன. ஏழு வயது வரை குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி கிடையாது என்பதுதான் மிக முக்கியமான விஷயம்.

ஏழு வயதிலிருந்து, பதினைந்து வயது வரை ஒன்பது ஆண்டுகள் ஆரம்பக்கல்வி கட்டாயமாகிறது. தனியார் பள்ளிகள் மிகக் குறைவு. ஒரு வகுப்பில் 20 - 25 மாணவர்களே இருப் பார்கள். தாய்மொழி தவிர கூடுதலாக மற்றொரு மொழியையும் கற்கலாம். கலை, இசை, சமையல், தச்சு வேலை, உலோக வேலை மற்றும் நெசவு போன்றவையும் கற்பிக்கப்படுகின்றன.

வகுப்பறை மற்றும் பள்ளியில் நல்ல இதமான, எந்த வித அழுத்தமும் அற்ற மகிழ்ச்சியான சூழலே நிலவுகிறது. குழந்தைகள் புத்தகம் வாசிக்கும் பழக்கம் மிகவும் உற்சாகப்படுத்தப்படுகிறது. உலகிலேயே குழந்தைகளுக்கான புத்தகங்களை அதிகம் பதிப்பிக்கிற நாடு பின்லாந்துதான். மாணவர்களுக்குக் குறைவான 'ஹோம்வொர்க்' தான் தரப்படுகிறது. நம் ஊரைப் போல மதிப்பெண் அடிப்படையில் மற்ற குழந்தைகள் ஒப்பிடப்படுவதில்லை. தரப்படுத்தப்படும் தேர்வு முறை இல்லை. ஆரம்பக் கல்வி என்பது வெறும் ஏட்டுக் கல்வியில் கிடைக்கும் வெற்றி அல்ல என்று பின்லாந்து கல்வியாளர்கள் கூறுகின்றனர். மாணவர்கள் தங்கள் திறன்களை உணர்ந்து கொள்வது, வாழ்க்கை பற்றிய புரிதலை இயல்பாகவே கற்றுக்கொள்வது என்று மிக முக்கியமான விஷயங்களை அந்நாட்டின் ஆரம்பக் கல்வி தருகிறது.

இத்தகைய கல்வி முறையை நல்ல முறையில் நடை முறைப்படுத்தத் தரமான ஆசிரியர்கள் தேவை. பின்லாந்தில் ஆசிரியர் ஆவதற்குக் குறைந்தபட்சம் பட்ட மேற்படிப்பு படித்திருக்க வேண்டும். ஆசிரியர் தேர்வு முறையும் மிகக் கடினமான ஒன்று. பணிபுரியும் ஆசிரியர்களுக்குத் தொடர் பயிற்சியும், மதிப்பீடும் கட்டாயம். அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கு அதிக ஊதியமும், உயர்ந்த சமூக அந்தஸ்தும் கொடுக்கப்படுகிறது.

கட்டாய ஆரம்பக் கல்விக்குப் பிறகு 16 வயதில் மூன்று அல்லது நான்கு வருடங்கள் மேல்நிலைக் கல்வி வழங்கப்படுகிறது. இந்நிலையில், மாணவர்கள் தொழிற் கல்வி அல்லது பொதுக்கல்வி என ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யலாம். இதன் பிறகு, கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி வழங்கப்படுகிறது. தகுதியின் அடிப்படையில் மட்டுமே மாணவர்கள் சேர்க்கப்படு கின்றனர். பள்ளியில் மாணவர்களுக்குக் கல்வி, உணவு, மருத்துவம், சுற்றுலா போன்ற அனைத்துச் செலவுகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள சூழலுக்கேற்பப் பாடத்திட்டத்தையும், கற்பிக்கும் முறையையும் தீர்மானிக்கும் சுதந்திரம் ஆசிரியர்களுக்கு உண்டு. குழந்தைகளின் படைப்புத்திறன், சிந்தனை சக்தி போன்றவை வளர்க்கப்படுகின்றன.

மனித மூலதன அறிக்கையை உலகப் பொருளாதார மன்றம் சமீபத்தில் வெளியிட்டது. 214 நாடுகளின் கல்வித்தரம் மற்றும் வேலைத் திறன் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள தர வரிசைப் பட்டியலில் பின்லாந்துதான் முதலிடத்தில் உள்ளது. நாம் 114-வது இடத்தில் இருக்கிறோம்!

**'தமிழ் இந்து' (மே 21, 2015) வெளியிட்ட கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.**

DATE OF PUBLICATION 28.05.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# அரசுப் பள்ளிகளுக்கு ஆதரவாக விழிப்புணர்வு இயக்கம்: தமிழ்நாடு மாணவர் கழகம் முடிவு

24.5.2015 அன்று சென்னை திராவிடர் விடுதலைக் கழக தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு மாணவர் கழக மாநில கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாநில அமைப்பாளர் பாரி சிவக்குமார் தலைமை தாங்கினார். அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

- பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசுப் பள்ளிகளில் படித்து, மாநில அளவில் 2014-15ஆம் ஆண்டில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு மாணவர் கழகம் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.
- 25 சதவீதம் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தை வரும் கல்வி ஆண்டில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் சேர்க்கை விதிமுறைகளை முழுமையாக பின்பற்றாத பள்ளிகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்துகிறது.
- குழந்தை தொழிலாளர் சட்டத்தில் மத்திய அரசு சீர்திருத்தம் கொண்டு வர இருப்பது. மீண்டும் குலக்கல்வித் திட்டத்தை திணிக்க முயல்வதையே காட்டுகிறது. இதனை தமிழ்நாடு மாணவர் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.
- தனியார் பள்ளிகளின் கட்டண கொள்ளையைத் தடுக்க பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை தனியார் பள்ளியில் சேர்ப்பதை விடுத்து, அரசுப் பள்ளிகளில் சேர்க்க வேண்டுமெனவும் இதை வலியுறுத்தி விழிப்புணர்வு இயக்கம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.
- அரசுப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தவும், காலியாக உள்ள ஆசிரியப் பணியிடங்களை நிரப்பவும் வலியுறுத்துகிறது.
- ஆரம்பக் கல்வி 1 முதல் 5 வகுப்பு வரை அனைவருக்கும் கட்டாய தமிழ் வழிக்கல்வியை வழங்க தமிழக அரசை வலியுறுத்துகிறது.
- உயர்கல்வியில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கான கல்வியை இலவசமாக வழங்க தமிழக அரசு பிறப்பித்த அரசாணை 92(0)ஐ முழுமையாக அனைத்து கல்வி நிறுவனங்களும் நடைமுறைப்படுத்தவும், நடைமுறைப் படுத்தாத கல்வி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்துகிறது.
- பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரிகளில் சேர்க்கையின்போது கேட்கப்படும் வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, குடும்பத்தின் முதல் பட்டதாரிக்கான சான்று போன்ற சான்றிதழ் வழங்க ஏற்படும் காலதாமதத்தால் சேர்க்கை பாதிக்கப்படுகிறது. இதனை விரைந்து அளிக்க வலியுறுத்தி, அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களிடம் மனு அளிப்பது என தீர்மானிக்கிறது.
- சாதி மறுப்பு திருமணம் புரிந்த இணையர்களின் குழந்தைகளுக்கு சாதியற் றோர்க்கான தனி இடஒதுக்கீட்டை உருவாக்க தமிழக அரசை வலியுறுத்துகிறது.

மேற்கண்ட தீர்மானங்களை விளக்கி, ஜூன் மாதம் முழுவதும் பேருந்து நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகளின் முன்பு தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் விழிப்புணர்வு பிரச்சாரப் பயணம் செய்வது என தீர்மானிக்கப்படுகிறது.

## சேலத்தில் ஜாதி-மதம் குறித்த பன்முக விவாதம்

“சாதியும் மதமும் - ஒரு பன்மய விவாதம்” என்ற தலைப்பில், சேலத்தில் 17.04.2015 அன்று முழுநாள் கருத்தரங்க விவாத நிகழ்வு நடைபெற்றது. மாரி ஸ்தலம், ஆக்கம், நிழல், தளிர்கள், ஐந்திணை வாழ்வியல் நடுவம், ஸ்பீக் அவுட் சேலம் ஆகிய அமைப்புகள் ஒருங்கிணைந்து நடத்தும் இவ்விவாத நிகழ்வு, சேலம் மூக்கனேரி ஏரிப் பகுதியிலுள்ள, மாரி ஸ்தலத்தில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

காலை 10 மணி முதல் 10.30 மணிவரை தனி மனித சுதந்திரத்தில் சாதி, மதங்கள் ஏற்படுத்தும் தாக்கம் குறித்த அறிமுக வுரை நிகழ்ந்தது. 10.30 மணி முதல் 12.30 மணிவரை முதல் அமர்வில், “மதமும் சூழலியலும்” என்ற தலைப்பில், சூழலிய லாளர் வீ. நக்கீரன், “சாதியும் இந்தியச் சூழலும்” என்ற தலைப்பில், கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் உரை யாற்றினர்.

மதிய உணவு இடைவெளிக்குப் பிறகு 1.30 மணி முதல் 3.30 மணிவரை நடந்த இரண்டாம் அமர்வில், “மதமும், கல்வி யும்” என்ற தலைப்பில், பொதுப் பள்ளிக்கான மாநில மேடை அமைப் பாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு உரை யாற்றினர்.

மாலை 4 மணி முதல் 6 மணிவரை நடைபெற்ற மூன்றாம் அமர்வில், “இயற்கை வழிபாடு” என்ற தலைப்பில், சூழலியல் ஆர்வலர் திரு. பியூஷ் மனுஷ், “சாதியும், தமிழகச் சூழலும்” என்ற தலைப்பில் தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசனும் உரை யாற்றினர். இந்நிகழ்வில், தமிழின உணர்வாளர் களும், சமூக ஆர்வலர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் புதுச்சாம்பள்ளியில் நாத்திகர் விழா – பேரணி

மேட்டூர் புதுச்சாம்பள்ளியில் மே 30 சனி மாலை 6 மணியளவில் நாத்திகர் விழா பேரணி, பொதுக் கூட்டம், சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நிகழ இருக்கிறது. பிற்பகல் 3 மணி யளவில் மேட்டூர் குஞ்சாண்டியூர் ஆர்.சி. பிளான்ட் அருகிலிருந்து நாத்திகர் பேரணி புறப்படுகிறது. தொடர்ந்து புதுச்சாம்பள்ளி பஞ் சாயத்து மேடையில் கசின்னையன் தலைமையில் ‘நாத்திகத்தால் விளைந்த நன்மைகள்’ எனும் தலைப்பில் உரை வீச்சு நடைபெறுகிறது. ‘சமூக நீதியில்’ எனும் தலைப்பில் எழுத்தாளர் மதிமாறன், ‘அறிவியலில்’ எனும் தலைப்பில் வழக்கறிஞர் துரை அருண், ‘பெண்ணுரிமை’ எனும் தலைப்பில் வழக்கறிஞர் இரா. திருமூர்த்தி உரையாற்றுகிறார்கள். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்று கிறார். முன்னதாக டி.கே.ஆர். குழு வினரின் இசை நிகழ்ச்சி நடைபெறு கிறது.

## வினாக்கள்... விடைகள்...!

- வாரணாசியில் நித்தியானந்தா ஆன்மிக நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு; ஊரைவிட்டே ஓட்டம். –செய்தி

  நித்தியானந்தாஜி, கவலைப்படாதீங்க; தமிழ்நாட்டுக்கு வாங்க; காவல்துறை பாதுகாப்பு தரும். எவராவது எதிர்த்தால் குண்டர் சட்டத்தில் உள்ளே தள்ளும்.

- தூக்குத் தண்டனையை நிறைவேற்ற ஆட்கள் தேவை! சவுதி அரசு விளம்பரம். – செய்தி

  இந்த வேலைக்கு மனு போட முன் அனுபவம் ஏதாவது இருக்க வேண்டுமா?

- மும்பையில் உள்ள சித்திவிநாயகன் கோயிலுக்கு அய்.எஸ்.ஓ. தரச் சான்றிதழை மாநில முதல்வர் வழங்கினார். – செய்தி

  என்ன சொல்றீங்க.... ஏனைய விநாயகன் எல்லாம் தரம் கெட்டவர்களா?

- மாட்டுக்கறி சாப்பிடுகிறவர்கள் பாகிஸ்தானுக்கு செல்லுங்கள். – மத்திய அமைச்சர் முக்தர் அப்பாஸ்

  நீங்கள் ஆட்சி நடத்தும் கோவாவிலேயே தாராளமாக கிடைக்கும்போது நாங்கள் ஏன் பாகிஸ்தானுக்குப் போக வேண்டும்?

- ம.பி. மாநிலத்தில் பத்தாம் வகுப்பு தேர்வில் 50 சதவீதம் பேர் மட்டுமே தேர்வு. – செய்தி

  ஆர்.எஸ்.எஸ். பாடத் திட்டத்தை அமுல்படுத்தினால், ‘சரசுவதி கடாட்சம்’ அம்புட்டுத்தான்.

- கட்டண முறை தரிசனம் பாகுபாடுகளை உண்டாக்குகிறது. –இராமகோபாலன்

  அது சரி; கர்ப்பகிரக தரிசனம் பாகுபாட்டை உண்டாக்குகிறதே; அதைப் பற்றி பேச மாட்டீங்களா?

- 14 தமிழக அமைச்சர்கள் ஒரே குரலில் கூட்டாக பதவி ஏற்றனர். – செய்தி

  அமைச்சர்கள் பதவி நீக்கமும் கூட்டாகவே இருக்காது என்று நம்புவோமாக!

(தில்லை நடராசன்... முதல் பக்கத் தொடர்ச்சி)

பிரதானம் என்று சொல்வது பொருத்தமுடையது. பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த இரட்டைப் புலவர்கள் தாங்கள் பாடிய தில்லைக் கலம்பகத்தில் நடராசப் பெருமான் மகுடாகமப் பூசை கொள்கிறார் என்று பாடியிருக்கின்றனர். ஆனால் தில்லையில், மகுடாகமப்படி பூசை நடைபெறவில்லை. பதஞ்சலிபத்ததிப்படி பூசை நடக்கிறது. இது வைதிக பூசை என்று தீட்சிதர்கள் சொல்கிறார்கள். அவர்கள் கூற்று சரியானதாக ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனெனில் வேதத்தில் சிவபூசை அல்லது நடராச பூசை இல்லை. அங்கு உள்ளதெல்லாம் அக்கினி (நெருப்பு) காரியமே தவிர, மூர்த்தி பூசை இல்லை. தமிழ்நாட்டில் எந்தக் கோயிலும், சிதம்பரம் நடராசர் கோயில் உள்பட, ஆகமப் பிரதிட்டையே அன்றி வைதிகப் பிரதிட்டை யில்லை. (சிலைகளை கோயிலில் நிறுவி, கடவுளாக்கும்போது பின்பற்றப்படும் சடங்குமுறை ஆகமமே தவிர, வேதமுறையல்ல) சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்களைச் சேர்த்துக் கொள்வது அதிகப்படியானது. ஆகமங்களிலேயே அவற்றுக்கு வேண்டிய கிரியைகளுக்குரிய மந்திரங்கள் சொல்லப்பட்டு உள்ளன. இங்கு வேத மந்திரம் இன்றியமையாத அங்கம் அல்ல. சிவாச்சாரியர்கள் வேறிடத்தில் கூறிய வேத ஆகம ஒருமைப்பாட்டுணர்ச்சியின் விளைவாகத்தான் வேத மந்திரங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். (அதாவது பார்ப்பன உணர்வுடனே ஆகமத்தை மீறி வேதங்களை திணிக்கிறார்கள்-ஆர்) ஆதலால் தமிழ்நாட்டுக்கே உரிய, வேறெந்த நாடும் கண்டிராத நடராசர் மூர்த்தியின் பூசை வைதிக பூசை என்று கூறுவது பெரும் பிழை மட்டுமல்ல, தமிழ் மக்களுடைய புராதனமான கடவுள் கொள்கைக்கும் பண்பாட்டுக்கும் செய்கிற பெருந் தீமையுமாகும். எப்படியாயினும் வைதிக பூசை என்று சொன்னால் ஆகம விதிப்படி இதுவும் புனிதம் கெடுவதாகும்” என்று மகராஜன் குழு பரிந்துரை கூறுகிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 28 May 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN